விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 25 சனிக்கிழமை (11.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 327

## யாழில் கொட்டித் தீர்த்தது மழை
## தாழ்நிலப் பகுதி மக்கள் பாதிப்பு

### தொடர்ந்து மழை பெய்யும்; அவதானமாக இருக்க அறிவிப்பு

(யாழ்ப்பாணம்) யாழ் குடாநாட்டில் நேற்று அதிகாலை தொடக்கம் பெய்த கனமழை காரணமாக தாழ் நிலப்பகுதி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக வடக்கில் தொடர்ந்து மழை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும் யாழ். மாவட்டத்தில் கடந்த ஆறு நாட்களாக பெய்த கனமழையால் ஆயிரத்து 98 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 862 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சின் புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது. (23-ம் பக்.)

### சுனாமி வதந்தியால் மக்கள் பதற்றம்

(கரணவாய்)
சுனாமி ஏற்படப் போவதாக பரவிய வதந்தியைத் தொடர்ந்து மணற்காட்டு பகுதி மக்கள் நேற்று 23

### மூழ்கும் அபாயத்தில் மணற்காட்டு பிரதேசம்

(கரணவாய்)
தொடர்ந்து மழை பெய்யுமாயின் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மணற்காட்டு கிராமம் வெள்ளத் 23

### வரவு - செலவு திட்டம் ஓரளவு ஆறுதல் - மாவை

(கொழும்பு)
பாதீட்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு மிக அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை கவலை அளிப்பதாக இலங்கை தமிழரசுக் 23

### பட்ஜெட் தொடர்பில் கேள்விகளை எழுப்பினார் சிவஞானம் சிறீதரன்

(கொழும்பு)
வடக்கில் உள்ள பொருளாதார வளங்களை முடக்கும் 23

### முன்னாள் போராளிகளை எவரும் ஓரங்கட்டக்கூடாது

அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்

(கொழும்பு)
எமது தமிழ்ச் சமூகத்தினாலேயே புறக்கணிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவே இம்முறை வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன் மூலமே தமிழர் தாயகப் பகுதிகளில் முன்னாள் போராளிகள் இருக்கின்றார்கள் என்பதை சர்வதேசத்திற்கு நல்லாட்சி அரசாங்கம் அறிவித்திருக்கிறது என்றும் அவர் கூறினார். 24

### வழமைக்கு திரும்பிய பெற்றோல் தட்டுப்பாடு

(கொழும்பு)
பெற்றோல் விநியோகம் நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் வழமைக்குத் திரும்பியுள்ளது என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் 23

### சவேந்திர சில்வா தொடர்பில் யஸ்மின் சூக்காவின் குற்றச்சாட்டை இலங்கை இராணுவம் கண்டிப்பு

(கொழும்பு)
இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் ஆராய்ந்த ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு உறுப்பினர் யஸ்மின் சூக்கா, இலங்கையின் இராணுவ அதிகாரி ஒரு 24

### இலங்கை முழுவதும் டெங்கு நோயால் உயிரிழப்பு நான்கு மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)
இலங்கையில் நாடு முழுவதிலும் இந்த வருடத்தில் இதுவரையில் ஓர் இலட்சத்து 67 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். 23

### நாடாளுமன்றில் சிறீதரன் - தினேஸ் வாக்குவாதம்

(கொழும்பு)
2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் சிறீதரன் எம்.பியின் உரையை மகிந்த அணியினர் குழப்ப முயற்சி செய்துள்ளனர்.

வரவு செலவு திட்ட 24

### வரவு செலவு திட்டத்தினால் கடன் சுமை அதிகரிக்கும்

ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)
1972ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கங்கள் எடுத்துவரும் தோல்வியுற்ற பொருளாதாரப் பாதைக்கு, இந்த வரவு-செலவு திட்டமும் ஓர் உதாரணமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். 24



### திருகோணமலை விபத்தில் யாழ். சிறுவன் உயிரிழப்பு

(திருகோணமலை)
திருகோணமலை, ஹெரவப்பொத்தானை வீதியில் நேற்று நடந்த விபத்தில் மீசாலையைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

குறித்த சிறுவன் வீதியைக் கடக்க முயன்ற போது பேருந்து மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. பேருந்தின் சாரதி 23

### கொழும்பு துறைமுகத்தில் சீனாவின் போர்க் கப்பல்



(கொழும்பு)
சீன இராணுவத்தின் குய் ஜிகுவாங் போர் பயிற்சி கப்பலொன்று நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

உத்தியோகபூர்வமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த 24


### நாட்டை பாதாளத்திற்குள் தள்ளாமல் நல்லாட்சி அரசு வீடு செல்வதே சிறப்பு

பாதீடு தொடர்பில் தினேஸ்

(கொழும்பு)
2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலும் பொது மக்களின் தோள்களில் அதிகளவு வரி சுமை சுமத்தப்பட்டுள்ளதாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாதீடு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

எனவே அரசாங்கம் தோல்வியான ஒரு வரவு செலவு திட்ட முன்மொழிவையே முன் 23



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறியளவில் மதுபானம் அருந்துவது தவறில்லையென்பதே எனது நிலைப்பாடு

## நிதி அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

சவுதிஅரேபியா போன்று நாமும் மதுபானத்தை முற்றாகத் தடை செய்வோம் அல்லது குறைந்த போதையுள்ள பியர் போன்ற பானங்களை நாட்டில் அறிமுகம் செய்வோம் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

சவுதி அரேபியாவைப் போன்று, கை வெட்டுவது, கால் வெட்டுவது, கழுத்து வெட்டுவது போன்ற சட்டங்களை இங்கும் கொண்டுவர வேண்டும்.

வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஜே.வி.பியின் சுனில் ஹதுன்னெத்தி எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

சீனி விலை அதிகரிக்கப்பட்டமைக்கு நோயைக் காரணம் காட்டி நியாயம் கூறினார். பியருக்கு சாதாரண பானங்களை விடவும் சீனி அதிகளவு பயன்படுத்தப்படுகின்றது. அப்படியிருந்தும் பியருக்கான வரி நீக்கப்பட்டுள்ளது ஏன்? என ஹதுன்னெத்தி எம்.பி வினவியதற்கே அமைச்சர் மங்கள இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடத்திய ஆய்வொன்றின்படி, நாட்டில் 49 வீதமானவர்கள் கசிப்பு குடிப்பதாகவும், சாதாரண மதுபானம் பயன்படுத்துபவர்களில் 84 வீதமானவர்கள் அரக்கு ரக மதுபானத்தைப் பயன்படுத்துகின்றனர். வளர்ச்சியடைந்த நாடுகளில் 80 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பியரே குடிக்கின்றனர். இதில் தான் போதை ஏற்படுத்தும் தன்மை குறைவாகவுள்ளது. இதற்காகவே பியருக்கான வரியை நீக்கினோம். சிறியளவில் மதுபானம் அருந்துவது தவறில்லையென்பதே எனது நிலைப்பாடு எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

# சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் அவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கவும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவை றோயல் கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற சிறுவர்களைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் பொலநறுவை மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி பாடசாலைகள், வீதிகள், வீடுகள் உள்ளிட்ட முழு சமூக சூழலும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பான இடங்களாக இருக்க வேண்டும்.

சிறுவர்களின் நடத்தைகளை விளங்கிக் கொண்டு வளர்ந்தவர்கள் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதுடன், வெளிச் சூழலில் காணுகின்ற விடயங்களை வைத்து தீர்மானங்களை மேற்கொள்ளாது அவர்கள் உள்ளார்ந்த ரீதியாக முகங்கொடுத்துள்ள உள, உடல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக கண்டறிய வேண்டும் .

சிறுவர்களை பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்பதுடன், இதற்காக மூன்றாண்டு திட்டத்திற்காக 524 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது .

இந்நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு அனைத்து அரசாங்க அதிகாரிகளும் குறித்த நிறுவனங்களுடன் இணைந்து பொறுப்புடன் செயற்படுவார்களென நம்புகின்றேன்.

நாட்டின் பொதுச் சட்டங்கள் மற்றும் சிறுவர்களின்பாதுகாப்பு குறித்து உள்ள சட்ட நிலைமை தொடர்பில் பாடசாலை மற்றும் கிராமிய மட்டத்தில் சிறுவர்களுக்கு அறிவூட்டுவதற்கு சட்டத்தரணிகளைக் கொண்ட குழுவொன்றை நாடெங்கிலும் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

# வட மாகாணத்துக்கு தெரிவான சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு

## எதிர்வரும் 15ஆம் திகதி நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்துக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இம்முறை 115 பேர் நியமிக்கப்படவுள்ளார்கள், இவர்களுக்கான நியமன கடிதங்கள் எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் வைத்து வழங்கப்படவுள்ளது.

நாடு முழுவதும் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த மே மாதம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியிருந்த நிலையில் மாவட்ட ரீதியாக நேர்முகப்பரீட்சை இடம்பெற்றது.

அதில் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் தற்போது வெளியாகியுள்ளது. இதில் யாழ் மாவட்டத்தில் 45 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 பேரும், மன்னார் மாவட்டத்தில் 17 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 42 பேரும், வவுனியா மாவட்டத்தில் 6 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நியமன கடிதங்கள் வழங்கப்பட்ட பின்னர் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி வரை கண்டி மாவட்டத்தில் இவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படவுள்ளது. (ம-9)

# ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் அரசுக்கு பெரும் சுமை

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தை மூன்று மாதங்களுக்குள் துரிதமாக மறுசீரமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் அனுமதியின் கீழ் ஸ்ரீலங்கன் விமான நிலையத்தை வேறு ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவது குறித்து தற்போது பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் சுமையை அரசாங்கத்தினால் தொடர்ந்தும் சுமக்க முடியாது எனவும் அந்த சுமையில் இருந்து விடுபட வேண்டும் எனவும் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். (ம)

# புகையிரதங்களில் வியாபாரம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

புகையிரதத்தில் வியாபாரம் செய்வதற்கு தடை விதிக்க புகையிரத திணைக்களம் தீர்மானித்துள்ளது.

புகையிரதத்திற்குள் வியாபாரம் செய்வதால் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுவதுடன், உணவுப் பொருட்கள் சுத்தமற்றதாக இருப்பதாகவும் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளுக்கு அமைவாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புகையிரத திணைக்களத்தின் பொது முகாமையாளர் எஸ்.எம் அபேவிக்கிரம விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த வர்த்தகர்களின் நாளுக்குறிய வருமானம் இல்லாமல் போவதை கருத்திற் கொண்டு பிரதான புகையிரத நிலையங்கள் தவிர்ந்த ஏனைய புகையிரத நிலையங்களில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு தடையில்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ம)

# பரீட்சைகள் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் பணி நீக்கம்

(கொழும்பு)

பரீட்சைகள் திணைக்களத்தின் இரகசிய மற்றும் நிறுவன பரீட்சைகள் பிரிவின் பொறுப்பதிகாரி அந்தப் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு கூறியுள்ளது.

பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் ஒருவரே இவ்வாறு பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொறுப்புக்களை துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் தவறான நடத்தை போன்ற குற்றச்சாட்டு காரணமாக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு கூறியுள்ளது.

கல்வியமைச்சின் ஊடகச் செயலாளர் கல்ப குணரத்னவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது. (ம)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் கணபதிப்பிள்ளை அன்னலிங்கம்

தோற்றம் 20.02.1951 மறைவு 12.10.2017

திங்கள் ஒன்றென்ன ஆயிரம்தான் ஆனாலும்
ஆறாது எங்கள் துயர் காயாது எங்கள் கண்ணீர்!!
எம் குடும்பத்து மெழுகுவர்த்தியே
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
எங்கள் ஊரே இருட்டாகி விட்டதப்பா!!

அன்பும் அறிவும் கொண்ட அழகான அதிஷ்டதேவனே!
கேட்டவர்க்கெல்லாம் வாரிவழங்கும் கொடை வள்ளலே!
தோழமைக்குத் தோள்கொடுக்கும் வீராதி வீரனே!!
உம் இள்முகத்திற்கு இவ்வுலகில் ஈடிணை இல்லையப்பா!!

கோபுரமாய் உயர்ந்தீர்கள் காலம் ஏனோ சரிந்ததப்பா
நல்லவனாய் திகழ்ந்தீர்கள் சொர்க்கம் ஏனோ அழைத்ததப்பா
கனவெல்லாம் பலித்துவர சதி வந்து பறித்ததப்பா
ஊரெல்லாம் உம் செய்தி இடியாய் வந்து விழுந்ததப்பா.

நாமெல்லாம் வேண்டும் வரம் ஒன்றே ஒன்றே அப்பா
எம் வம்சத்தில் வாரிசாக மீண்டும் வந்திடுங்கள் அப்பா
உங்கள் ஆருயிர் மனைவியும், அன்பான பிள்ளைகளும்
உங்களுக்காக கண்ணீருடன் காத்திருக்கின்றோம்.

எமது அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்றையதினம் (11.11.2017) காலை 6.00 மணியளவில் இன்பர்சிட்டியிலுள்ள அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக் கிரியைகள் அன்னாரின் இல்லத்திலும் இடம்பெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைப்பதோடு, எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், ஊடகங்கள் வாயிலாக அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் சகல உதவிகளையும் முன்வந்து செய்த உள்ளங்களுக்கும் மற்றும் இன்றைய தினம் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

காண்டீபன் விளையாட்டுக்கழகம் அருகாமை,
இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(அ-330)



## ஏல விற்பனை

புனித சாள்ஸ் மகா வித்தியாலய வருடாந்த கணக்கெடுப்பின் பின்னர் கழிக்கப்பட்ட பொருட்கள் 15.11.2017 அன்று ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளன.

-அதிபர் (294)



Possible Green Private Limited Kilinochchi

## நாவல் விதைகள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் மூலிகைத் தேயிலை உற்பத்தி நிறுவனத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட நாவல் விதைகள் தேவைப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:-

0212283369/0769386017

(திங்கள்-வெள்ளி வரை காலை 9.30 மணி-4.30 மணிவரை)

(அ-352)

# போர்க்குற்ற நீதிமன்றில் படையினரை நிறுத்த அனுமதிக்க மாட்டேன்



## ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு)

**ஜனாதிபதியாகத் தான் இருக்கும்வரை இலங்கைப் படையினரை எந்தவொரு போர்க்குற்ற நீதிமன்றத்திலும் நிறுத்துவதற்கு அனுமதிக்கமாட்டேன் என்று மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.**

கொழும்பில் உள்ள இராணுவ மருத்துவமனை அரங்கில் நேற்று முன்தினம் மாலை இலங்கை இராணுவ கட்டளை அதிகாரிகள், மற்றும் சார்ஜன்ட் மேஜர் தர அதிகாரிகள் 350 பேரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்தார்.

பாதுகாப்பு செயலர் கபில வைத்தியரத்ன, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க ஆகியோரின் ஒழுங்கமைப்பில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

நாட்டை காப்பாற்றுவதற்காகவும், தேசிய பேரழிவுகளின் போதும், உங்கள் உயிரையும் மதிக்காமல் நீங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளீர்கள். அதற்காக நாங்கள் உங்களுக்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

அண்மையில் தேசிய தொற்று நோய்கள், நிலச்சரிவுகள் போன்றவை எங்களைத் தாக்கியபோது, முன்னணியில் நின்று பணியாற்றினீர்கள்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும், அமைதியான சமூகமாக நல்லிணக்கம், ஒற்றுமை, புரிந்துணர்வுடன் முன்னோக்கிச் செல்வதற்கும் உங்களின் தொடர்ச்சியான ஆதரவு எமக்குத் தேவை.

நாட்டின் தலைவராக நான் இருக்கும் வரைக்கும், எந்தவொரு போர் நீதிமன்றத்தின் முன்னாலும் உங்களை நிறுத்துவதற்கு அனுமதிக்கமாட்டேன் என்று உறுதியாக கூறுகிறேன்.

தவறு செய்த இராணுவத்தினர், நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதாக இருந்தால், நாட்டின் சட்டங்களுக்கு அமைவாகவே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சில அதிருப்தி அரசியல்வாதிகளும், ஓய்வுபெற்ற இராணுவத்தினரும்போர் வீரர்களைத் தண்டிக்க முயற்சி செய்வதாக குற்றம்சாட்டி வருகின்றனர். நான் இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில், வெளிநாட்டு நீதிபதிகள் போன்றவர்களால் எவரையும் விசாரணை செய்ய அனுமதிக்கமாட்டேன்.

எனவே ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் தவறான அறிக்கைகளால் நீங்கள் தவறாக வழிநடத்தப்படக் கூடாது.

உலகின் எந்த மனித உரிமை அமைப்புக்களும், எந்த அடிப்படையிலும், இராணுவத்தை கட்டுப்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது.

ஒரு இறைமையுள்ள அரசு என்ற வகையில், எந்தவொருதலையீடுகளும்இன்றி, எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆற்றல் இருப்பதாக, ஐ.நாவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கைகள், வதந்திகள் மற்றும் நம் எதிரிகளால் தவறாக வழிநடத்தப்படக் கூடாது, என்னை நம்புங்கள் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கை பேரழிவு காலங்களில் நீங்கள் வழங்கிய சிறந்த சேவைகளுக்கு நான் உங்களை பாராட்டுகிறேன், நாட்டில் நல்லிணக்கம் மற்றும் சமாதான வாழ்வுக்கான உங்கள் சிறந்த ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலங்களில் போலல்லாமல், போர் வீரர்களின் வெளிநாட்டு நுழைவிசைவுகள் எதிர்காலத்தில் நிராகரிக்கப்படாது, என்றும், தங்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு எந்த தடங்கலும் ஏற்படாமல் உதவுவோம் என்றும் நான் வலியுறுத்திக் கூறுகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில், போர்க் குற்றம் சாட்டப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களுக்கான நுழைவிசைவுகள் மறுக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே போன்ற இராணுவ அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர். (இ-7)

## புல்வெட்டச்சென்ற குடும்பஸ்தர் வழுக்கி விழுந்து பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

புல்வெட்டுவதற்காக சென்ற குடும்பஸ்தர் வெள்ளத்தில் வழுக்கி விழுந்ததில் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று காக்கைதீவு பகுதியில் இடம்பெற்றுள்ளது. ஆனைக்கோட்டை குருசுமதவடியை சேர்ந்த துரைசிங்கம் றூபசிங்கம்(வயது 56) என்றகுடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். குறித்த நபர், நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு தமது மாட்டுக்கு புல் வெட்டுவதற்கு காக்கைதீவு பகுதிக்கு செல்வதாக மனைவியிடம் கூறிவிட்டு சென்றுள்ளார்.

காக்கைதீவு வைரவர் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீதிக்கு அருகாக இருந்து புல்லை அறுத்துக் கொண்டிருந்துள்ளார். அப்பகுதி சேற்று நிலம் என்பதால் வழுக்கி விழுந்து 2 அடிக்கு மேல் தேங்கி நின்ற வெள்ளத்துக்குள் முகக் குப்புற விழுந்துள்ளார்.

இரவு 7 மணி ஆகியும் இவர் வீட்டிற்கு வராத காரணத்தினால் மனைவி குறித்த நபரை தேடி காக்கைதீவு பகுதிக்கு சென்றுள்ளார். அங்கு வெள்ளத்துக்குள் குறித்த நபர், முகக்குப்புற கிடப்பதை கண்ட மனைவி உடனடியாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார். அவரை பரிசோதித்த வைத்தியர் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளார். இவருக்கு திடீரென ஏற்பட்ட மாரடைப்பினாலே இந்த மரணம் ஏற்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-9)

## புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் அனைவரின் பங்களிப்பும் மிக அவசியம்

(கொழும்பு)

நாடு பிளவுபடுவதை தடுக்க வேண்டுமாயின் புதிய அரசியல் அமைப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் அனைத்து தரப்பினரதும் பங்களிப்பு மிக அவசியம் என்று நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் டிலான் தெரிவித்தார்.

அரசியல் அமைப்பு அறிக்கையிடும் குழுவிற்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அதன் மூலம் பாராளுமன்ற ஜனநாயகம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். (இ-7)

## எரிபொருள் விலைக்கான புதிய சூத்திரம் மார்ச்சில்

### நிதியமைச்சர் மங்கள தகவல்



(கொழும்பு)

எரிபொருள் விலைக்கான புதிய சூத்திரமொன்றை அடுத்த வருடம் மார்ச் மாதம் அளவில் அறிமுகப்படுத்தவுள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்ட 2018 நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு தொடர்பில் கொழும்பில் நேற்றுக்காலை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசின் வணிக மறுசீரமைப்பு செயல்முறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும், அதேபோல், 2019 ஆம் ஆண்டளவில் அரச வங்கிகள் தனது மூலதனத்தை சார்ந்த நிறுவனங்களாக மாற்றப்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)

## நாடாளுமன்றம் மூழ்கும் அபாயம்

## அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் உடனடி வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் நாடாளுமன்றம் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மெகா பொலிஸ் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்றைய தினம் முற்பகல் 9.30 அளவில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது.

வாய்மொழி விடைக்கான கேள்வி நேரத்தின்போது,



களனி கங்கை பெருக்கெடுக்கும் நேரத்தில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்கான முன்னேற்பாடுகள் என்ன என்பதை தெளிவுபடுத்தும்படி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க, எதிர்காலத்தில் அதிக மழையை எதிர்பார்க்கலாம். கடந்த காலங்களைப் போல் அல்லாமல் வளிமண்டலம் மற்றும் வங்களாவிரிகுடா தாழமுக்கம் அதிகமாக இருப்பதால் அசாதாரண மழையை எதிர்பார்க்கலாம்.

எனவே அம்பத்தலே மற்றும் மேல் மாகாணத்திலுள்ள சில ஆறுகள், குளங்கள் நிரம்பினால் வெள்ள நீரை தடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

தற்போதே அவற்றைசெய்யாவிட்டால் நாடாளுமன்றமும் வெள்ளத்தில் மூழ்கிவிடும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையுடனான டெஸ்ட் தொடர்

# பாண்ட்யாவுக்கு ஓய்வு

## இந்திய அணி அறிவிப்பு



இலங்கை அணிக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரிலிருந்து சகலதுறை வீரர் ஹர்திக் பாண்ட்யாவுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான முதல் 2 டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. அதில் பாண்ட்யா இடம்பெற்றிருந்தார். ஆனால் தொடர்ச்சியாக விளையாடுவதாலும் மேலும் அடுத்ததாக முக்கியமான தொடர்களில் பங்கேற்கவுள்ளதாலும் பாண்ட்யாவுக்கு டெஸ்ட் தொடரிலிருந்து ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நவம்பர் 16ஆம் திகதி கொல்கத்தாவில் ஆரம்பமாகிறது.

இந்திய அணி விபரம் வருமாறு,

1. விராட் ஹோலி (அணித் தலைவர்), 2. லோகேஷ் ராகுல், 3. முரளி விஜய், 4. தவான், 5. புஜாரா, 6. ரகானே, 7. ரோகித் சர்மா, 8. சகா (விக்கெட் காப்பாளர்), 9. அஸ்வின், 10. ஜடேஜா, 11. குல்தீப் யாதவ், 12. மொஹமட் ஷமி, 13. உமேஷ் யாதவ், 14. புவனேஸ்வர் குமார், 15. இசாந்த் ஷர்மா.

# இந்திய டெஸ்ட் தொடரை சவாலுடன் எதிர்நோக்குகின்றோம்

## டினேஸ் சண்டிமல்



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை சவாலுடன் எதிர்நோக்குகிறோம் என இலங்கை அணியின் தலைவர் தினேஷ் சண்டிமல் தெரிவித்தார்.

3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக டினேஷ் சண்டிமல் தலைமையிலான இலங்கை அணி, இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் வரும் 16ஆம் திகதி கொல்கத்தாவில் தொடங்குகிறது. இதையொட்டி கொல்கத்தாவில் இலங்கை அணியினர் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். இதன் பின்னர் டினேஷ் சண்டிமல் நிருபர்களிடம் தெரிவித்ததாவது,

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அதிலும் வெப்பம் மிகுந்த ஐக்கிய அரபு எமிரேட்ஷில் 6 துடுப்பாட்ட வீரர்கள், 5 பந்துவீச்சாளர்களுடன களமிறங்கியது நல்ல பலனை தந்தது.

4 பந்து வீச்சாளர்களுடன் விளையாடிய ஆட்டத்தில் வெற்றி பெறுவது எளிதாக இருந்தது இல்லை. ஆனால் இந்திய அணி சிறந்த பந்துவீச்சாளர்களை கொண்டுள்ளது. இதனால் நாங்கள் சகலதுறை வீரருக்கான இடம் குறித்து ஆலோசித்து வருகிறோம். ஆடுகளத்தை பார்வையிட்டு அதற்கு தகுந்தபடி திட்டமிடுவோம்.

இந்திய அணி நம்பர் வன் இடத்தில் இருப்பதை நாங்கள் அறிவோம். கடந்த இரு வருடங்களாக அவர்கள் சிறந்த கிரிக்கெட்டை விளையாடி வருகிறார்கள். அதேவேளையில் நாங்கள் பாகிஸ்தானுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி உள்ளோம். ஒரு அணியாக நாங்கள் சிறப்பாக செயற்பட்டுள்ளோம். இந்தியாவுக்கு எதிரான தொடரை சவாலுடன் எதிர்கொள்ள தயாராக உள்ளோம்.

இந்தத் தொடர் எங்களுக்கு சவாலானது தான். கடந்த காலத்தில் நடந்தவற்றை திரும்பி பார்க்க விரும்பவில்லை. ஆனால் முன்னேறிச் செல்ல விரும்புகிறோம். பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் சிறப்பாக செயல்பட்ட வீரர்கள் சிறந்த நிலையில் உள்ளனர். இதனால் இந்தியத் தொடரை ஆவலுடன் எதிரகொள்கிறோம். இதுவரை நாங்கள் இந்தியாவில் டெஸ்ட் தொடரை வென்றது இல்லை. இதனால் தொடரை வெல்ல வேண்டும் என்பது ஒவ்வொரு வீரரின் கனவாக உள்ளது. அஸ்வின், ஜடேஜாவை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என திட்டங்கள் வைத்துள்ளோம். அதை வெளியில் கூற முடியாது. இவ்வாறு டினேஷ் சண்டிமல் தெரிவித்தார்.

## சர்வதேச நட்புறவு கால்பந்து

# ஜப்பானை வீழ்த்தியது பிரேசில்



நெய்மர் தலைமையிலான பிரேசில் அணி ஜப்பானை நட்பு ரீதியிலான கால்பந்தில் 3-1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தியது.

பிரேசில் - ஜப்பான் அணிகளுக்கு இடையிலான நட்பு ரீதியிலான கால்பந்து ஆட்டம் பிரான்ஸில் நடைபெற்றது.

பலம் வாய்ந்த பிரேசில் அணி தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் பிரேசில் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதை பயன்படுத்தி நெய்மர் கோல் அடித்தார்.

17ஆவது நிமிடத்தில் மார்சிலோ ஒரு கோலும் கேப்ரியல் ஜீசஸ் 36ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடிக்க முதல் பாதி நேரத்தில் 3-0 என பிரேசில் முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி நேரத்தில் ஆட்டத்தின் 63-வது நிமிடத்தில் ஜப்பானின் டொமோயாகி மகினோ ஒரு கோல் அடிக்க பிரேசில் 3-1 என வெற்றி பெற்றது.

# தோனியை வசைபாடிய அகர்க்கரை டுவிட்டரில் புரட்டியெடுத்த ரசிகர்கள்



ரி20 கிரிக்கெட் போட்டியில் இருந்து விலகி இளைஞர்களுக்கு வழிவிட வேண்டும் என்று கூறிய அஜித் அகர்கரை, தோனி ரசிகர்கள் டுவிட்டரில் புரட்டியெடுத்துள்ளனர்.

இந்திய அணியின் சாதனைத் தலைவராக திகழ்ந்தவர் மகேந்திரசிங் தோனி.

டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுள்ள அவர், ஒருநாள் போட்டி மற்றும் ரி20 கிரிக்கெட் போட்டியில் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரராக திகழ்ந்து வருகிறார்.

ராஜ்கோட்டில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது ரி20 போட்டியில், 197 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டும் போது தோனி அதிரடியாக விளையாடவில்லை. இதனால் தோனி மீது விமர்சனம் எழும்பியது.

இந்திய அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் அஜித் அகர்கர், ரி20 கிரிக்கெட்டில் தோனி இளம் வீரர்களுக்கு வழிவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இதற்கு பல்வேறு தரப்பில் எதிர்ப்பு கிளம்பி வருகிறது. இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி, தோனிக்கு முழு ஆதரவு தெரிவித்து வருகிறார். இந்நிலையில் டுவிட்டரில் தோனி ரசிகர்கள் அகர்கரை புரட்டியெடுத்துள்ளனர்.

## குல்டர்-நைல் காயம்

# ஆஷஸ் கனவு கைகூடுமா?



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான நேதன் குல்டர்-நைல் முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆஷஸ் தொடரில் இருந்து வெளியேற்றப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஆஷஸ் தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதற்கான அவுஸ்திரேலிய அணியில் மிட்செல் ஸ்ரார்க், ஜோஷ் ஹசில்வுட் மற்றும் பட் கம்மின்ஸ் உடன் நேதன் குல்டர்- நைல் இணைந்து ஆஷஸ் தொடரில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

குல்டர்-நைல் ஒருநாள் சர்வதேச போட்டிகள் மற்றும் ரி20 போட்டிகளில் விளையாடி உள்ளார். ஆனால் டெஸ்ட் போட்டியில் விளையாடியதில்லை. ஆஷஸ் தொடரில் தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொள்ள இருந்தார். ஆனால் முதுகில் ஏற்பட்ட காயம் அவருடைய கனவு நிறைவேறுமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

சென்ற வாரம் நடைபெற்ற இரண்டு நாள் தொடரில் விளையாடிய பிறகு குல்டர்-நைலின் முதுகில் வலி ஏற்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய விளையாட்டு துறை மருத்துவ மேலாளர் அலெக்ஸ் தெரிவித்தார். ஸ்கான் செய்து பார்த்தபோது அவருக்கு இதற்கு முன் ஏற்பட்ட எலும்பு முறிவில் மீண்டும் காயம் ஏற்பட்டுள்ளது. ஆனால் காயம் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் அவர் விரைவில் குணமடைவார் என அலெக்ஸ் கூறினார்.

நாதன் குல்டர்-நைல் ஆஷஸ் தொடரில் பங்கேற்கவில்லை எனில் அவருக்கு பதிலாக ஜக்சன் பேர்ட் பயிற்சியில் ஈடுபடுவார் எனக் கூறப்படுகிறது.

# வரவு-செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட விசேட நீதிமன்றம் தேவையற்றது

## சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

2018-வரவு-செலவுத் திட்டத்தில்முன்மொழியப்பட்ட விசேட நீதிமன்றம் நாட்டுக்குத் தேவையற்றதொன்று எனவும் உள்ள நீதிமன்றங்களை வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளே தேவையானது எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் யு.ஆர்.டி. சில்வா இதனைக் கூறியுள்ளார். வழக்குகள் தாமதமாவதை தவிர்ப்பதற்கு வேறு நடவடிக்கைகள் முன்மொழிப்பட வேண்டுமே அல்லாமல் புதிதாக நீதிமன்றங்கள் உருவாக்கப்பட வேண்டியதில்லையெனவும், இதனால் சட்டத்துறையில் சிக்கல் நிலைமை உருவாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

**Ministry of National Integration and Reconciliation**

**தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு**

Financing and Construction of 50,000 Permanent Brick and Mortar Type Houses for Conflict Affected Displaced Families in the Northern and Eastern Provinces in Sri Lanka.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 50,000 நிரந்தர கல்வீடுகளை நிர்மாணித்தலும் நிதி ஈட்டலும்.

**Request for Proposal (RFP)**

முன்மொழிவுகளுக்கான கோரிக்கை

**To All Bidders**

சகல கேள்விதாரர்களுக்கும்

The Bid Submission Date has been extended up to 27th November 2017 (up to 2.00 p.m)

Brick and Mortar Type Construction can also use Cement Sand Blocks (Hollow and Solid) as an alternative in areas where bricks are in short supply.

Addendum with revision for quality, low-cost houses has been issued on 8.11.2017

Secretary
Ministry of National Integration and Reconciliation
No.34, Narahenpita Road,
Nawala, Sri Lanka.

(C-147)

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/ அரச தனியார் தொழில்
தொ.இ: B/7941

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா:13
உயரம்: 5'10"
தகைமை/தொழில் A/L/கனடா PR
தொ.இ: B/7942

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 5'3
தகைமை/தொழில்:Business management /நியூசிலாந்து Not PR
தொ.இ: B/7943

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 27
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:O/L/சொந்தத் தொழில்
தொ.இ: B/7945

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 RC
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:Bsc/ பொறியியலாளர்
தொ.இ: G/8000

பிறப்பு: 1991 RC
நட்சத்திரம்: சதயம்
கி.பா: சூரி செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L தனியார் தொழில்
தொ.இ: G/7202

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 51 செவ் 8இல்
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/7210

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc, ஆசிரியர்
தொ.இ: G/7211

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## இராசி பலன்

11.11.2017
ஐப்பசி 25, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
அட்டமி முன்னிரவு 6.40 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 4.59 மணிவரை
சுபநேரம் 3.06-4:36 மணிவரை
இராகுகாலம் 9.06-10.36 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூராடம், உத்தராடம்<br>மாலை 4.48 மணிக்கு<br>சிங்-சந் | | சந்<br>ராகு |
| கேது | | | |
| | சனி,<br>புத | சூரி, சுக்,<br>குரு | செவ் |

**மீனம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெரிய மனிதர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மேடம்**: தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், ஆடம்பர பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்**: மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**மிதுனம்**: கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக்கொள்வீர்கள், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, வாக்கு மேன்மையுண்டு, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**: தொழிலில் எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**கடகம்**: இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**மகரம்**: பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்**: மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு**: எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வீண் விரயங்கள் கூடும்.

**விருச்சிகம்**: வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விருந்தினர் வருகையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**துலாம்**: எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், குடும்பத்தில் சுகம் கூடும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**கன்னி**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.

# சுழிபுரம்–நெல்லியான் வீதியிலுள்ள மதகு புனரமைப்பு பூர்த்தியாகவில்லை





(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் - நெல்லியான் வீதியிலுள்ள பிரதான மதகு புனரமைப்புப் பணி உரிய காலத்தைக் கடந்தும் முடிவுறுத்தப்படாமையால் பொது மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த வீதிப் புனரமைப்பின்போது பொதுமக்களின் போக்குவரத்துக்கான பக்க வீதி உரியவாறு அமைக்கப்படவில்லை. இதனால் அந்த வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய மேற்படி வீதியில், கல்விளானுக்கு அண்மையிலுள்ள பிரதான மதகு தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் புனரமைப்புப் பணியின்போது பொது மக்களின் போக்குவரத்துக்கு உரிய பாதை அமைக்கப்பட வில்லை.

மதகுக்கு அருகே மண் போடப்பட்டுள்ள போதிலும் அது மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கான வீதியாக மாற்றியமைக்கப்படவில்லை. இதனால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்யும் மாணவர்கள், ஆசிரியர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உள்ளிட்ட அனைவரும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இவ்வீதியால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிலர் வழுக்கி வீழ்ந்து விபத்துக்களிலும் சிக்கியுள்ளனர்.

மேற்படி மதகுப் புனரமைப்பு கடந்த ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. செப்டெம்பர் மாதம் முடிவுறுத்தப்பட வேண்டிய நிலையில், இதுவரை முடிவடையவில்லை.

இதனாலேயே மழை காலத்தில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-9)

# மரநடுகை மாதத்தினை முன்னிட்டு மாணவரிடையே ஓவியப் போட்டி

(யாழப்பாணம்)

வட மாகாண மரநடுகை மாதத்தினை (கார்த்திகை 1-30) முன்னிட்டு மாணவர்களிடையே மரம் நடுகை மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக கனிஷ்ட பிரிவு (தரம் 6-8) மாணவர்களிடையே கீழ்வரும் ஒழுங்கிற்கமைவாக ஓவியப் போட்டியினை வட மாகாணத்தின் சகல வலயங்கள் ஊடாகவும் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணவிவசாயஅமைச்சர் க.சிவநேசனின் வேண்டுகோளிற்கு அமைவாக வட மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனினால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போட்டியின் கருப்பொருள் ‘‘ மரங்கள் சுற்றுச் சூழலின் பாதுகாவலர்கள்’’.

இப்போட்டி கனிஷ்ட பிரிவு மாணவர்களிடையே (தரம் 6-8) நடத்தப்படவுள்ளது. போட்டிகள் வலய ரீதியாக நடத்தி முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் ஆறுதல் பரிவு பெறும் 5 மாணவர்களுக்கும் பரிசில்கள் கீழ்வரும் ஒழுங்கிற்கு அமைவாக வழங்கப்படவுள்ளது.

1 ஆம் இடம்- ரூபா-3000
2 ஆம் இடம்- ரூபா 2000
3 ஆம் இடம்- ரூபா 1000
ஆறுதல் பரிசில்கள் (05) ஒவ்வொன்றும் ரூபா 500

போட்டிமுடிவுகள்மற்றும் ஆக்கங்கள் யாவும் 15.12.2017 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், விவசாய அமைச்சுக்குகிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்என வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ-7)

# கட்டடத் திறப்பு விழா

(யாழப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகபாதுகாப்புத் திணைக்களத்தின் மீள் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களத் தலைவர் ஆர். பாஸ்கரன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் இ. விக் னேஸ்வரன், சிறப்பு விருந்தி னர்களாக யாழ்.பல்கலைக் கழக பதிவாளர் வி. காண் டீபன் மற்றும் யாழ். பல் கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், விருந்தினர்களாக பாதுகாப்புத் திணைக்கள துறைத் தலைவர் கே. நாதன் மற்றும் ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர் என்.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இதேவேளை புதிய பாதுகாப்பு திணைக்கள கட்டடத்தில் இரத்ததான முகாமும் இடம்பெறும். (இ-10)

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையானது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 66 ஆம் பிரிவுக்கு அமைவாக நடப்பாண்டிலும் பிரதேச சபையின் எல்லைக்குள் கட்டாக்காலிகளாக திரியும் மாடுகள், ஆடுகளை கைப்பற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே. மாடுகள், ஆடுகள் வளர்ப்போர் அவற்றைக் கட்டி வளர்க்குமாறும் தவறும் பட்சத்தில் அவை பிரதேச சபையினால் கைப்பற்றப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நீரிழிவுப் பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கி ழமை வரை காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை யாழ். மத்திய சந்தைப் பொலிஸ் பிரிவில் இடம்பெறவுள்ளது.

மேலும் சர்வதேச நீரிழிவு தின சிறப்பு நிகழ்ச்சி எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (இ-10)

# சைவப்பிரகாச வித்தியாலய வைரவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் வைரவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நீர்வேலி இராச வீதியில் அமைந்துள்ள பொன் செல்வமஹால் மண்டபத்தில் அதிபர் சு.மோகனராஜன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, சிவன் அறக்கட்டளை நிதியஸ்தாபகர் க.வேலாயுதம், கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா. சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-102)

# மாணவர் மதிப்பளித்தல்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப்பாடசாலையின் மாணவர் மதிப்பளித்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் மா. மகாகேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக திட்டமிடல்பிரதிக்கல்விப்பணிப்பாளர் இ.தமிழ்மாறன் கலந்து கொள்வார். (இ-10)

# மாமனிதர் ரவிராஜ் நினைவுதினம் அனுஷ்டிப்பு





(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மனித வுரிமை சட்டத்தரணியுமான மாமனிதர் நடராஜா ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 11 ஆண்டுகளாகின்ற நிலையில் சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது உருவச்சிலையில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

காலை 9 மணியளவில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்பாக அமைந்துள்ள நினைவுத்தூபியின் முன்பாக இந்த அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் கேசவன் சயந்தன், தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி இணைப்பாளர் கந்தையா அருந்தவபாலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

2006 நவம்பர் 10 வெள்ளிக்கிழமை அன்று காலை 7 மணிக்கு ரவிராஜ் தொலைக்காட்சி ஒன்றில் நடந்த நேர்காணல் ஒன்றில் பங்குபற்றி விட்டு வீடு திரும்பி பின்னர் மீண்டும் வீட்டை விட்டு தனது வாகனத்தில் வெளியேறிய போது காலை 8.45 மணியளவில் கொழும்பு நாரஹேன்பிட்டி மனிங் டவுனில் உள்ள அவரது வீட்டுக்கருகில் வாகனம் ஒன்றில் வந்த இரண்டு இனந் தெரியாதோரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ரவிராஜ் சிகிச்சை பலனின்றி காலை 9.20 மணிக்கு உயிரிழந்தார். ரவிராஜின் மெய்ப் பாதுகாவலர் லக்சுமன் லொக்குவெல்ல என்பவரும் கொல்லப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-4-8.9)







ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்கவின் பிரியா விடை நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காங்கேசன்துறை பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிசில குமார ஹேரத் ரஞ்சித் மாசிங்கவிற்கு நினைவுப் பரிசு ஒன்றை வழங்கினார்.

(படங்கள்:- இளவாலை செய்தியாளர்)

# பிரதமர், மங்கள இந்தியா பயணம்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ளார்.

பிரதமரின் இந்த விஜயத்தின்போது நிதியமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்தை எதிர்வரும் மார்ச் மாதம் இந்தியாவிற்கு வழங்குவது தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளமை மற்றும் எட்கா உடன்படிக்கை குறித்த பேச்சுகளை இறுதிப்படுத்துவதே இந்த விஜயத்தின் நோக்கமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இருநாடுகளுக்கும் இடையில் முக்கிய பொருளாதார உடன்படிக்கைகள் சில கைச்சாத்திடப்படவுள்ளதாக பிரதமர் செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## செல்வி. துரைசிங்கம் அதிஸ்ரா



Congratulations

கிழக்கு பல்கலைக்கழகத்தில்
இன்று பட்டத்தைப் பெறும்
செல்வி துரைசிங்கம் அதிஸ்ரா
(பொது கலைமாணி)
அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று
சீரும் சிறப்புமாக...
தமிழ் அன்னை தாலாட்ட – எம்
தமிழ் உன்னை சீராட்ட
எங்கும் சென்று எதிலும் வென்று
கலைகள் கொண்டு களம் அமைக்க
வாழ்த்துகின்றோம்...

செல்வபுரம்,
கச்சார்வெளி, பளை.

சி-349

குடும்பத்தினர், உறவினர்கள்,
நண்பர்கள்.

# மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் தேசியமட்ட சாதனையாளர் கௌரவிப்பு விழா – 2017

கல்வியே கண்
1978

2017ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்கள்



2017ஆம் ஆண்டு கணித ஒலிம்பியாட் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றிபெற்ற மாணவன்




2017ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற 100 புள்ளிகளுக்கு மேல்பெற்றுக்கொண்ட மாணவர்கள்



2017ஆம் ஆண்டு தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு –1 வாசிப்பு இரண்டாமிடம் பெற்ற மாணவன்




2017ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்கள்



2016ஆம் ஆண்டு க.பொ.த (சா/தர)ப் பரீட்சையில் சாதனை படைத்த விசேட கல்வி மாணவி




மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்.

வாழ்த்துவோர் –
பாடசாலை சமூகம்

# பாலியாற்றின் கரையோரப்பகுதிகளை அத்துமீறி பிடிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்களம் அறிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக்குளம் வான் பகுதியில் இருந்து கழிவு நீரைக் கொண்டு செல்லும் பாலியாற்றின் இருபக்கங்களிலும் உள்ள கரையோரப்பகுதிகளை அத்துமீறிப் பிடிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்களம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழ் உள்ள நீர்ப்பாசன வாய்க்கால்கள், வீதிகள் உள்ளிட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான பல காணிகள் அத்துமீறிப் பிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வவுனிக் குளத்திற்கு நீரைச்சேர்க்கும் பாலியாற்றில் மேற்பகுதியிலும் பல இடங்கள் அத்துமீறி பிடிக்கப்பட்டுள்ளன.

குளத்தின் வான்பகுதியிலிருந்து கழிவு நீரைக் கொண்டு செல்லும் பாலியாற்றின் இரு கரையோரங்களும் அத்துமீறிப் பிடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஆற்றிலிருந்து இரு பக்கங்களும் தலா 132 அடி வரையான கரையோரப்பகுதிகளை பாதுகாக்கும் நோக்கோடு எல்லைக்கற்கள் போடப்பட்டுள்ளன. அத்துடன் கரையோரப்பகுதிகளை பாதுகாப்பதற்கும் மண் அரிப்புக்களை தடுப்பதற்கும் ஏற்ற வகையில் கரையோரப் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கரையோரப் பகுதிகளை அத்துமீறிப் பிடிப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (2-315)

# வவுனியாவில் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் 3 கோடியாம்

## பெரியளவில் முதற்தடவை என பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி 3 கோடியென வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம்.எமில். எம்.தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் 3 கோடி ரூபாய் பெறுமதியான 2 கிலோ 265 கிராம் ஹெரோயின் வவுனியா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வல் வெட்டித்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே ஹெரோயினுடன் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதி 3 கோடி எனவும் வவுனியாவில் பெரியளவில் ஹெரோயின் கைப்பற்றப்பட்டமை இதுவே முதல் தடவை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-250)

# உடைப்பெடுத்த மன்னாகண்டல் குளத்தின் புனரமைப்பு வேலைகள் துரிதகதியில்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட மன்னாகண்டல் குளம் கடந்த 6ஆம் திகதி அன்று உடைப்பெடுத்திருந்தது.

இந்நிலையில் அதிகாரிகளின் விரைந்த நடவடிக்கையின் பயனாக உடனடியாகவே குளத்தை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

இந்தக் குளம் உடைப்பெடுத்ததன் காரணமாக குளத்தின் கீழுள்ள குறித்தளவு வயல் நிலங்கள் சேதமடைந்துள்ளதோடு நீரும் வீண் விரயமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## இருபது மில்லியன் ரூபா நிதியில்

# ஐயங்கன், பனங்காமம் குளங்களின் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக் குளம் நீர்ப்பாசனத்திணைக் களத்தின் கீழ் உள்ள ஐயன் கன்குளம், பனங்காமம் குளம் ஆகியவற்றின் கீழ் பல் வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் இருபது மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்களத்திற்குட்பட்ட 12 குளங்களிலும் பல்வேறு அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

இதில் ஐயன்கன்குளம், பனங்காமம் குளம் ஆகியவற்றின் கீழ் நீர் விநியோக வாய்க்கால்கள், மதகுகள், பாலங்கள் என்பன சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையில் முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்ட இருபது மில்லியன் ரூபா நிதியில் பனங்காமம் குளத்தின் கீழான கட்டுமானப்பணிகள் பத்து மில்லியன் ரூபா செலவிலும் ஐயன்கன்குளத்தினுடைய கட்டுமானப்பணிகள் பத்து மில்லியன் ரூபா செலவிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது நீர் விநியோக வாய்க்கால்கள், மதகுகள், பாலங்கள் அமைத்தல் மற்றும் கொங்கிறீட் வாய்க்கால்கள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதன் வேலைகள் முடியும் தறுவாயில் இருப்பதாகவும் நீர்ப்பாசனத் திணைக்கள தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை வளம்படுத்தும் நோக்கோடு தனது பணியினை ஆற்றிவரும் துணுக்காய் ஒளிரும் வாழ்வு பிரதிநிதிகளுக்கும் லிபரா பவுண்டேஷன் அமைப்பின் நிறுவுனர் கந்தையா.பாஸ் கரனுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் ஒளிரும் வாழ்வு அமைப்பு துணுக்காய் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது அமைப்பின் உறுப்பினர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தும் தொழிற் சாலைகளை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சந்திப்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா கலந்து கொண்டார். (2-281)

# 'பிரகாசம்' சஞ்சிகை வெளியீடு



(குருமன்காடு)

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், "பிரகாசம்" சஞ்சிகை வெளியீடும் கல்லூரி முதல்வர் பா.கமலேஸ்வரி தலைமையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் நகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், வவுனியா தெற்கு வலயக் கல்வி, வவுனியா தெற்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.பீ.நடராஜ் , வவுனியா சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் யோ.கெனடி , மதத்தலைவர்கள், அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# தேனீ வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தேனீவளர்ப்பை உக்குவிக்கும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட விவசாயத்திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகியன பல்வேறு திட்டங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது தேனீ வளர்ப்பும் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதுதொடர்பில் மாவட்ட விவசாயத் திணைக்களத் தகவலின்படி 2017ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 30 பயனாளிகளும் தேசிய உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 60 பயனாளிகளும் இரணைமடு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 170 பயனாளிகளுக்கும் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாண்டு நெல் உற்பத்தி மறுவயல் பயிர்ச்செய்கை பெறுமதி செயற்றிட்டம், காளான் உற்பத்தி, பழமரச்செய்கை விவசாயப்பயிற்சி உள்ளிட்ட ஆறு வகையான 19 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மேற்படி திணைக்களத்திணைக்களத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# வவுனியா வளாகம் நடத்தும் மாபெரும் தொழில் சந்தை

(குருமன்காடு)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின், வவுனியா வளாகம் நடத்தும் மாபெரும் தொழில் சந்தை நேற்றும் இன்றும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வானது யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் தலைமையில் பம்பைமடுவில் அமைந்துள்ள வவுனியா வளாகத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இலங்கையின் பிரபலமான 30 இற்கு மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் நேரடியாக பங்குகொண்டுள்ளதுடன் வேலைவாய்ப்புக்களையும் வழங்கவுள்ளது.

அத்துடன் இன்று நடைபெறவிருக்கும் தொழில் சந்தைக்கான நிகழ்விற்கு வவுனியாவிலிருந்து பம்பைமடுவிற்கு விசேட பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இலவச தொழில் வழிகாட்டி கருத்தரங்குகள் இரண்டு நாட்களுக்கு இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தொழில் தேடி வருபவர்கள் தங்கள் சுய விபரக்கோவையின் பல பிரதிகளை எடுத்து வருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (2-250)

# தேர்தல் விதிகள் தொடர்பான தெளிவூட்டும் கருத்தமர்வு

(பனிக்கன்குளம்)

வன்னி மேம்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் முள்ளியவளை பிரதேசத்தில் தேர்தல் விதிகள் தொடர்பான மக்கமர்வு ஒன்று முள்ளியவளை கணுக்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.எம்.எம். ஹபீர் கலந்து கொண்டு புதிய தேர்தல் விதிமுறைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டினார்.

இதில் வடக்குமாகாண விவசாய அமைச்சர் உள்ளிட்ட பொது அமைப்புக்களை சார்ந்தவர்கள்,மக்கள் என பலர் கலந்து கொண்டுள்ளார்கள். (2-281)

# கேப்பாப்பிலவு காணிகளை விடுவிக்கக்கோரி ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சி தலைவர் கடிதம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களது காணி விடுவிப்பு தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் இரா சம்பந்தன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

தமிழ்ப் பிரஜைகளுக்கு உரித்தான முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவுக் காணி என்ற தலைப்பில் அனுப்பப்பட்டுள்ள இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2017 ஜூலை 20 ஆம் திகதியும். 2017 ஓகஸ்ட் 11 ஆம் திகதியும் நான் தங்களுக்கு அனுப்பிய கடிதங்களுக்கு மேலதிகமாக இதனை எழுதுகின்றேன். பாராளுமன்ற உறுப்பினர்களாகிய மாவை சேனாதிராஜா. எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கடந்த 2017 ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி இது விடயமாகத் தங்களைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது 132 ஏக்கர் தனியார் காணிகள் விடுவிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது. 3 மாத காலத்தினுள், அதாவது 2017 ஓகஸ்ட் 22 இலிருந்து 2017 நவம்பர் மாதம் 23 ஆம் திகதிக்கிடையில் இக் காணிகளைத் தங்களால் விடுவிக்க முடியும் என இராணுவம் நம்பிக்கை கொண்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் தனது 2017 ஒக்டோபர் 10 ஆம் திகதியிடப்பட்ட கடிதமூலம் குறித்த 133 ஏக்கர்களும் 2017 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்பு விடுவிக்கப்படும் என எனக்கு அறிவித்திருந்தார்.

குறித்த காணிகள் மிக விரைவில் தங்களுக்கு விடுவிக்கப்பட வேண்டுமெனக் கோரி இக்காணியின் வாசலில் கடந்த 250 நாட்களுக்கும் மேலாக மக்கள் வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாது தமது போராட்டங்களைச் செய்து வருகின்றனர்.

மிகுதியாகவுள்ள தனியாருக்குச் சொந்தமான காணி 73 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. இக் காணி மக்களின் சம்மதமின்றி இராணுவத்தால் அடாத்தாகக் கையேற்கப்பட்டுள்ளது.

இக்காணியில் இராணுவம் தொடர்ந்தும் தங்கியிருப்பதை நியாயப்படுத்த முடியாதென்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பிரஜைகள் வேறு மாற்றுக் காணிகளைப் பெறுவதற்கோ அல்லது நட்டஈட்டைப் பெறுவதற்கோ விருப்பமுடையவர்களாக இல்லை. இக்காணிகளில் அவர்களுக்குரிய உரிமை மிக வலுவானது. அதனால் எத்தகைய மாற்றீடுகளும் அவர்களுக்குத் திருப்தியளிக்காது.

இராணுவத்துக்குத் தேவையாக இருந்தால் போதியளவு வேறு காணிகள் அங்கேயுள்ளன. அங்கே நட்டஈடு எதுவும் செலுத்தாது அவர்கள் தங்கியிருக்க முடியும்.

ஆகவே. குறிப்பிட்ட 73 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட காணிகளும் கூடிய விரைவாக அவற்றிற்குரிய பிரஜைகளுக்கு மீளக் கையளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

இந்த விடயத்தில் தாங்கள் தலையீடு செய்யுமாறு கோருகிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# காணி விடுவிப்பின்றிய நிலை நீடிக்குமாகில் குடும்பங்களாக உயிரை மாய்க்கும் நிலை ஏற்படும்

## கேப்பாப்பிலவு மக்கள் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தமக்கு தீர்வு கிடைக்காது இந்நிலை நீடிக்குமானால் குடும்பங்களாக உயிரை மாய்க்கும் நிலை நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி ஆரம்பித்த நிலமீட்புப் போராட்டம் நேற்றுடன் 255 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அங்கு போராடிவரும் மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

எமது காணிகள் விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டாலும் உறுதியான பதில் கிடைக்கவில்லை. மழை வெள்ளம் காரணமாக பெரிதும் பாதிக்கப்படும் நாம் நோய் நொடிகளுக்கு உள்ளாகியுள்ளோம். அதனைவிட விஷ ஜந்துக்கள் வாழும் இடத்தில் வீதியருகே நாம் இருப்பதால் அவற்றினாலும் பாதிக்கப்படுகிறோம்.

கூலி வேலை செய்து பிழைக்கும் நாம் நேற்று 255 நாளாக வீதியோரத்தில் கிடக்கிறோம். எமது குடும்பத்தை பாக்க எமது வருமானம் போதாதுள்ளது. பிள்ளைகளைப் பாடசாலை அனுப்ப முடியவில்லை. எமது காணிகளை விடுவித்தால் எமது காணிகளில் விவசாயம் செய்து பயன்தரு மரங்களில் கிடைக்கும் பயன்கள் மூலம் நிம்மதியாக வாழ்வோம். அவ்வாறு இல்லாது இந்த வீதியில் வாழும் நிலை தொடருமானால் குடும்பங்களாக உயிரை மாய்க்கும் நிலை நேரிடும் எனவும் தெரிவித்துள்ளனர். (2-281)

# மேய்ச்சல் தரவையின்றி வீதிகளில் கால்நடைகள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான வீதிகளில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் பயணம் செய்யும் போது சிரமங்களை எதிர் கொள்வதாகவும் சில வேளைகளில் விபத்து ஏற்பட்டு மரணத்தை சம்பவிக்க நேரிடுவதாகவும் பயணிகள், சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கால்நடை உரிமையாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

காலபோக நெற்செய்கை காரணமாக பெரும்பாலும் கால்நடைகளைக் கொண்டு சென்று பராமரிக்க மேய்ச்சல் தரவை இல்லாத காரணத்தால் வீதிகளிலும் காடுகளிலுமே மாடுகளை மேய்க்க வேண்டியுள்ளது.

இதனைவிட முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரை ஒரு தொகுதி மேய்ச்சல் தரவைகள் முப்படைகளின் சுபீகரிப்பில் உள்ளது. அதனைவிட அலை கரைகளில் நீர்வந்துள்ளதால் அங்கும் சென்று மேய்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

எனவே காட்டுக் கரைகளிலும் வீதிகளிலுமே நாம் கால்நடைகளை மேய்ப்பதற்காக தள்ளப்பட்டுள்ளோம். இந்நிலையில் எமக்கான மேய்ச்சல் தரவை கடந்த 5 வருடமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியும் பதில் இல்லை. எனவே காட்டுக்கரைகளில் கால்நடைகளை மேய்க்கும்போது அவை வயல் நிலங்களுக்குள் சென்று பாதிப்பை ஏற்படுத்துகிறது. வீதிகளில் மேய்க்கும் போது வீதியில் செல்பவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுக்கின்றனர். நாம் என்ன செய்வது?

கால்நடைகளை மேய்ப்பதற்கு மேய்ச்சல் தரவைகளை பெற்றுக் கொடுத்து எமது அசௌகரியங்களை நீக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (2-281)




# கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்களால் பணம், நகைகள் கொள்ளையிடப்பட்டன

## குமாரசாமிபுரத்தில் சம்பவம்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள குமாரசாமிபுரம் கிராமத்தில் வர்த்தக நிலையத்துடன், இணைந்திருந்த வீட்டில் வீட்டார் உறக்கத்தில் இருந்த வேளை கதவை உடைத்துக் கொண்டு உள் நுழைந்த திருடர்கள் வீட்டின் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 2 இலட்சம் ரூபா பணம். தங்க நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் என்பனவற்றைத் திருடிச்சென்றுள்ள சம்பவம் நடைபெற்றுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் நடைபெற்றுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது,

குமாரசாமிபுரம் கிராமத்திலுள்ள 4 வீடுகளுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணியளவில் மழை பெய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வீட்டார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை உட்புகுந்து பெறுமதியான பொருட்களைத் தேடியுள்ளனர்.

ஆயினும், ஏனைய 3 வீடுகளில் ஏதுவும் கிடைக்காத நிலையில் 4 ஆவதாக வர்த்தக நிலையத்துடன் இணைந்திருந்த வீட்டையும், கடையையும் உடைத்துக் கொண்டு உள் நுழைந்த திருடர்கள் வீட்டின் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 2 இலட்சம் ரூபா பணத்தையும், தங்க நகைகளையும் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் சிலவற்றையும் களவாடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் திருட்டு இடம்பெற்ற வீட்டின் உரிமையாளரினால் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற தருமபுரம் பொலிஸார் தடயங்களைச் சேகரித்ததுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தருமபுரம் பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# கனகராயன் ஆற்றில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு

## வரம்புகள், வேலிகள் சேதம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு புனிமச்சிநாதிக்குளம் கிராமத்தின் ஒரு பகுதியால் செல்லும் கனகராயன் ஆற்றில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு பாரியளவில் நடைபெறுவதாக இப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் புனிமச்சி நாதகுளம் கிராம மக்கள் தமது பகுதியை அண்டிய கனகராயன் ஆற்றுப் பகுதியில் மணல் அகழ்வு நடைபெறுவதாக தெரிவித் துள்ளனர்

இவ்வாறு முறைகேடான அகழ்வுகளால் மரங்கள் பல விழுந்திருப்பதையும் விவசாய நிலங்கள் சேதமடைந்தும் காணப்படுகின்றன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மக்களுடன் சென்று உறுதிப்படுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மணல் ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட இடங்கள் விவசாயிகளின் வயல் நிலங்களாக இருப்பதையும் தமது வயல் வரம்புகள் மற்றும் வேலிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் விவசாயிகள் இதன்போது சுட்டிக்காட்டினார்கள். (2-315)

# 12 ஆயிரத்து 218 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்க வேண்டும்

## முல்லை.மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல்படி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட 6 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள 136 கிராம அலுவலர் பிரிவுகளிலும் நாட்டில் இடம்பெற்று முடிந்த இறுதிக்கட்ட யுத்தத்திற்கு பின்னரான மக்கள் மீள்குடியேற்றத்தின் போது சுமார் 42 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள நிலையில், இங்குள்ள குடும்பங்களில் வறுமை நிலையில் உள்ள 23 ஆயிரத்து 324 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்க வேண்டியுள்ள நிலையில் தற்போது 11 ஆயிரத்து 106 குடும்பங்களுக்கு மட்டுமே சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகவும் மிகுதியாக இருக்கும் 12 ஆயிரத்து 218 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் புள்ளிவிபரத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 23 கிராம அலுவலர் பிரிவுகளில் ஏனைய இடங்களில் மக்கள் மீள்குடியேற்றம் நடைபெற்ற காலப்பகுதியில் இந்த கிராமங்களில் மீள்குடியேற்றம் நடைபெறவில்லை.

இதனால், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 13 கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு பெறத் தகுதியான 4 ஆயிரத்து 839 குடும்பங்களும், கரைதுறைப்பற்று பிரதே செயலகப் பிரிவிற்குட்பட்ட 10 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 772 குடும்பங்களுமாக மொத்தம் 6 ஆயிரத்து 611 குடும்பங்களில் இதுவரை ஒரு குடும்பத்திற்குக்கூட சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

இதனை விட ஏனைய 113 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சமுர்த்தி நிவாரணம் பெறத் தகுதியான நிலையில் இன்னமும் 5 ஆயிரத்து 607 குடும்பங்களின் விபரங்களைத் திரட்டியுள்ள நிலையில் ஒட்டுமொத்தமாக இன்னமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 ஆயிரத்து 218 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியுள்ளது.

இந்த புள்ளிவிபரத் தகவல்களை சமுர்த்தி நிவாரண அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து அனுமதி கிடைக்கப் பெற்றதும் இந்த குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் புள்ளிவிபரத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# நீலப்பசுமை பட்ஜெட்-2018

நாட்டின் பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்பும் நோக்கை இலக்காகக் கொண்டு "நீலப் பசுமை" எனும் தொனிப்பொருளில் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் (பட்ஜெட்-2018) நேற்று முன்தினம் பிற்பகல் (09.11.2017) நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.



பகுதி I

முன்னுரை

01. சபாநாயகர் அவர்களே, நாம் எமது 70 ஆவது சுதந்திரத்தினை கொண்டாடவுள்ள இத்தருணத்தில், இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான வரலாற்றில் 2018 ஆம் ஆண்டானது எம்மனைவருக்கும் மிக முக்கியமான ஒரு ஆண்டாக விளங்குகின்றது.

இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்கு முன்னதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினதும், மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினதும் தலைமையிலான எமது தேசிய அரசாங்கத்தின் நான்காவது ஆண்டிற்கான, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சராக எனது முதலாவது வரவு-செலவுத்திட்டமாக 2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தினை உங்கள் முன் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமையையிட்டு மிகவும் பெருமை அடைகின்றேன்:

02. சபாநாயகர் அவர்களே, எமது சிறிய இலங்கைத் தேசம் நீண்ட கால காலனித்துவ ஆட்சியின் முடிவுக்குப் பின்னர், 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சுதந்திரத்தினைப் பெற்றுக் கொண்டது. அவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் எமது நாட்டு மக்களும், ஏனைய உலக நாடுகளும் இந்நாட்டின் எதிர்காலம் தொடர்பாக பெரிய எதிர்பார்ப்புக்களையும், மற்றும் நம்பிக்கையையும் வைத்திருந்தன. காலஞ்சென்ற சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் யு அவர்கள் ஒரு முறை அவரது நினைவேட்டில் "இலங்கை சுதந்திரம் அடைந்த போது பொதுநலவாய நாடுகளுக்கிடையில் முன்மாதிரியான ஒரு காலனியாக இருந்ததாக" இலங்கை தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தார். சுதந்திரம் கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து செய்திப் பத்திரிகைகள் கூட, இலங்கை அதன் மனித வள மற்றும் இயற்கை வளங்களின் வலிமையின் காரணமாக எதிர்காலத்தில் "கிழக்குல கின் சுவிட்சர்லாந்தாக" விளங்கும் என எதிர்வு கூறின. 1948 ஆம் ஆண்டில், எமது தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, ஆசியாவில் ஜப்பானிற்கு மாத்திரமே இரண்டாவதாகக் காணப்பட்ட அதேவேளை, ஏனைய நாடுகள் இலங்கைக்குப் பின்னதாகவே காணப்பட்டன.

03. ஆயினும், சுதந்திரம் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, அரசியல் சித்தாந்தங்கள், இனம், மதம் மற்றும் சாதிகளின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொண்டோம். இதன் காரணமாக கடந்த 70 ஆண்டு காலப்பகுதியில், இளைஞர்களின் அமைதியின்மை காரணமாக உக்கிரமடைந்தன் காரணமாக இரண்டு கிளர்ச்சிகளுக்கும் மற்றும் மூன்று தசாப்த காலங்களாக கொடூரமான யுத்தமொன்றுக்கும் முகங்கொடுத்துள்ளோம். 2009 ஆம் ஆண்டுமே மாதத்தில் யுத்தம் முடிவுறுத்தப்பட்ட போதும், கடந்த காலத்தில் கற்றவைகளைப் பாடமாகக் கொண்டு தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்வதன் மூலம் பன்முகப்படுத்தலை மதிக்கும், விரும்பும் நாடொன்றாக இலங்கையினை சித்திரிப்பதற்கான பெறுமதியான வாய்ப்பொன்று கிடைக்கப்பெற்றிருந்தாலும், கடந்த கால ஆட்சியாளர்கள் அவ்வரலாற்றுச் சந்தர்ப்பத்தை தமது சொந்த நலனுக்காகவும், இருப்புக்காகவும் பயன்படுத்தினர்.

04. அரச பயங்கரவாதம் மற்றும் ஊழலானது சர்வசாதாரணமாகக் காணப்பட்டதுடன் தூர நோக்கற்ற மோசமான பொருளாதாரக் கொள்கைகள், சர்வதேசத்திலிருந்து நாடு முழுமையாகத் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் மற்றும் மீதொட்டமுல்ல குப்பை மேட்டினை விடவும் பாரிய அளவிலான கடன் சுமைகள் கூடிய ஒரு நெருக்கடியான சூழ்நிலையிலே 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

### எமது அரசாங்கத்தின் முன்னைய வரவு- செலவுத் திட்டங்கள்

05. சபாநாயகர் அவர்களே, எமது புதிய அரசாங்கமானது 2015 ஆம் ஆண்டுக்கு முன்னரான நடவடிக்கைகளின் காரணமாக, பொருளாதாரத்தில் உருவாக்கப்பட்டிருந்த உடனடியான மற்றும் குறுகிய காலப் பலவீனங்களுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பலசவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. நாம் ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தின் தூண்களை அடிப்படையாகக் கொண்ட உறுதியான அடித்தளமொன்றினை ஏற்படுத்தியதோடு, அதன் மீது நியாயமானதும், சமத்துவமானதுமான முறையில் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தக் கூடிய, புத்தாக்கத்தின் மூலம் வழிநடத்தப்படும் சமூக சந்தைப் பொருளாதாரமொன்றை கட்டியெழுப்புவதை ஆரம்பித்தோம். கௌரவ சபாநாயகர் அவர்களே, எனது முன்னிருந்த கௌரவ ரவி கருணாநாயக்கா அவர்கள் நாட்டின் அரச நிதி முகாமைத்துவத்தினை சரியான பாதையில் எடுத்துச் செல்வதற்காக தைரியமாகவும், நேரடியாகவும் சவால்களை முகங்கொடுத்தமையினை நான் பாராட்ட விரும்புகின்றேன்.

### 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட பாரிய பொருளாதார சவால்கள்

06. சபாநாயகர் அவர்களே, துரிதமாகவும், தொடர்ச்சியாகவும் வீழ்ச்சியடைந்து செல்லும் அரச வருமானம் மற்றும் மலை போன்ற படுகடன் தொகையும் நாம் முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட பிரதான சவால்களுள் ஒன்றாகக் காணப்பட்ட அதேவேளை, நீண்ட வரட்சி, அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப் பெருக்கங்கள் மற்றும் மண் சரிவுகளும் கூட இக்காலப் பகுதியில் நாம் எதிர்கொண்ட பிரதான சவால்களாகும். இம்மோசமான காலநிலைத்தாக்கத்தின் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்ப இழப்பீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 1 சதவீதமென மதிப்பிடப்பட்டுள்ளது. கேள்விப் பக்க அழுத்தங்கள் தொடர்ந்தும் அதிகரித்தமையானது சென்மதி நிலுவையையும் பாதிப்படையச் செய்தது.

### அரச நிதியில் தீர்க்கமான திருப்பு முனைகள்

07. சபாநாயகர் அவர்களே, இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் கூட, நாம் உசிதமான பொருளாதார முகாமைத்துவக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக சில சாதகமான விளைவுகளை நாம் ஏற்கனவே அனுபவிக்கின்றோம். ஒரு புதிய அரசாங்கம் என்ற வகையில், குறுகிய காலப்பகுதியொன்றில் அரச நிதி முகாமைத்துவத்தில் தீர்க்கமான திருப்புமுனையொன்றினை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. நாம் உள்நாட்டு வருமானத் திரட்டுகைக்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியதோடு, சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்களுக்கிடையில் இழக்கப்பெற்ற இலங்கை தொடர்பான நம்பிக்கையை மீள உருவாக்குவதற்கும் வினைத்திறனான முறையில் செயற்பட்டுள்ளோம். இத்தகைய செயற்பாடுகளின் காரணமாக பல தசாப்தங்களாக வீழ்ச்சியடைந்து சென்ற அரச வருமானத்தை, அதாவது 2014 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.5 சதவீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 14.2 சதவீதம் வரை மொத்தமாக 41 சதவீதத்தினால் வளர்ச்சியடையச் செய்யக்கூடியதாக இருந்தது. 2017 ஆம் ஆண்டில், அரசாங்க வருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தில் 15 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதோடு 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் அரச வருமானமானது 1.3 சதவீத வளர்ச்சியை உறுதிப்படுத்தும் என நான் உறுதியாக நம்புகின்றேன். அரச வருமானத்தை நடுத்தர காலப் பகுதியில் மொத்த 'தேசிய' உற்பத்தியில் 2.0 சதவீதத்திற்கு அண்மிய அளவாக அதிகரிக்கும் நோக்குடன் அரசாங்க வருமானம் தொடர்பாக சீர்திருத்தங்கள் பலவற்றை மேற்கொண்டுவருவதோடு, அவற்றுள் உள்நாட்டு இறைவரி, சுங்கவரி, மது வரி (கலால்) மற்றும் ஏனைய வரிகளும் இவற்றுள் உள்ளடங்குகின்றன. அவ்வாறு அரசாங்க வருமானமானது அதிகரிக்கப்படும் போது அரசாங்க செலவீனமானது தொடர்ந்துச் சிறப்பாக இலக்குப்படுத்தப்பட்டு நியாயப்படுத்தப்படும். இதன் மூலம் மொத்த வரவு-செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2020 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.5 சதவீதம் வரையில் பேணுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

08. சபாநாயகர் அவர்களே, 2017 ஆம் ஆண்டில், பொருளாதார வளர்ச்சியினை சுமார் 4.5 சதவீதம் வரை வளர்ச்சியுறச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, வேலையின்மையினை சுமார் 4 சதவீத மட்டத்தில் பேணும் அதேவேளை 2020 ஆம் ஆண்டளவில் சுமார் 6 சதவீத உயர்வான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியொன்றிற்குப் படிப்படியாக நகர்வதற்குத் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் உத்தியோக பூர்வ ஒதுக்குகளை வலுப்படுத்தவும் நாம் ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அண்மிய ஒருசில மாதங்களாக அவதானிக்கப்பட்டு வரும் ஒப்பீட்டளவிலான உயர்வான பணவீக்கமானது, நிரம்பல் பக்கத்தில் காணப்படும் பாதகமான நிலைமைகள் நீங்கியவுடன் வீழ்ச்சியடையும் என எதிர் பார்க்கப்படு கின்றது. நடுத்தர காலத்தில் உண்மை வட்டி வீதங்களையும், உண்மை செலாவணி வீதங்களையும் சமநிலை மட்டத்திற்குச் சரிப்படுத் துவதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

### வளர்ச்சி சார் சீர்திருத்தங்கள்

09. கௌரவ சபாநாயகர் அவர்களே, பேரண்டப் பொருளாதாரத்தின் ஸ்திரத் தன்மையை மிகவும் நிலைபேறான முறையில் அடைவதற்கு தொடர்ச்சியான முயற்சி அவசியமாக உள்ளது. 2025 தூர நோக்கிற்கு ஏற்ப, விரைவானதும், நிலைபேறானதுமான வளர்ச்சியொன்றினை ஊக்குவிக்கும் நோக்குடன் சந்தைக் கோட்பாடுகளுக்கு ஏற்ப விலை திரிபுகளை ஒழிப்பதற்கும் மற்றும் சொத்துரிமைகளை மீள் உறுதிப்படுத்துவதற்கும் காரணிச் சந்தைகளில் உறுதியான சீர்த்திருத்தங்களை நாம் எடுக்க வேண்டியுள்ளது. நடுத்தர காலத்திலும், அதற்கு அப்பாலும் உயர்வான வளர்ச்சியொன்றினை உறுதிப்படுத்த வேண்டுமாயின், மூலதனச் சந்தையின் முழுத்திறனையும் அடைவதற்கு மூலதனச் சந்தைச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அனைவருக்கும் சுபீட்சத்தை உறுதிப்படுத்தக் கூடிய துரித வளர்ச்சியை காணி மற்றும் சொத்துக்களின் உரிமையின்றி எந்தவொரு நாடும் அடைந்து விட முடியாது. இச்சூழ்நிலையில், நாட்டின் காணி மற்றும் சொத்துக்களின் உரித்து தொடர்பான பிரச்சினைகளுக்கு கவனமானதும், அவசரமானதுமான முன் ஆய்வு ஒன்றை மேற்கொள்வது அவசியமாக உள்ளது. பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் வாய்ந்த வளங்களைப் பயன்படுத்துவதற்கான முன்னோக்கிய பாதையை வழி வகுப்பதற்கு தொழிலாளர்களின் நிரம்பல் மீதான கட்டுப்பாடுகளுக்கு எதிரான நாட்டின் தொழிலாளர்களுக்கான கேள்வியானது, தொழிலாளர் சட்டங்கள் உள்ளடங்கலாக தொழிலாளர் சந்தையின் சகல பரப்புகளிலும், ஒரு நுணுக்கமான ஆய்வு தேவைப்படுகின்றது.

10. சபாநாயகர் அவர்களே, 2025 ஆம் ஆண்டளவில், இலங்கை உயர் நடுத்தர வருமான மட்டத்தினை அடைவதற்கு தடைகளற்ற பொருளாதார வளர்ச்சியொன்று அவசியமாக உள்ளது. இலங்கையில் தாராளமயமாக்கலும், உலகமயமாக்கலும் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். (10 ஆம் பக்கம் பார்க்க...)

# நீலப்பசுமை பட்ஜெட்-2018

02

இலங்கையானது அதற்கே உரிய வர்த்தக மற்றும் வியாபார மையமாக திகழ்வதற்கு உறங்கு நிலையிலுள்ள போட்டித் தன்மையினை தட்டியெழுப்புதல் வேண்டும். நாட்டை காப்பு வாதம் மற்றும் உள்நோக்கிய பார்வையிலிருந்து மீட்கப்படல் வேண்டும். இலங்கையின் வர்த்தகம் தொடர்பான எல்லை கட்டுப்பாட்டு நடைமுறையானது சிறந்த இலக்குகளைக் கொண்ட மற்றும் காலவரையறைக்கு உட்பட்ட வர்த்தக சீர்திருத்த ஊக்குவிப்பு வளர்ச்சியின் ஊடாக பூரணமாக சீரமைக்கப்பட வேண்டியுள் ளது. வர்த்தக ரீதியில் முக்கியதுவம் அற்ற பொருட்களின் மீது கூடுதலாக தங்கியிருத்தல் எதிர்வரும் தசாப்தங்களில் வளர்ச்சிக்கு பெரும் சவாலாக அமையும்.

11. சபாநாயகர் அவர்களே, 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுக் கூட்டத்தின் 70 ஆம் தொடரின் போது ஜனாதிபதி அவர்கள் உறுதிப்படுத்தியது போன்று, இலங்கை 2015 இற்குப் பின்னரான நிலைபேறான அபிவிருத்தி நிரலையும் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும் (SDGs) அடைவதில் உறுதியாக உள்ளது. அவ்வாறே, இன்று என்னால் சமர்ப்பிக்கப்படும் வரவு-செலவுத் திட்டமானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது.

### 'நீல-பசுமை வரவு-செலவுத்திட்டம்: என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா'

12. சபாநாயகர் அவர்களே, நான் தற்போது பசுமை மற்றும் நீல வரவு செலவுத்திட்டம்: என்டர்பிரைஸ் - ஸ்ரீ லங்காவை ஆரம்பித்தல்' எனும் தொனியின் கீழ் 2018 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்ட உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றேன். அது பசுமையானது. ஏனெனில் நாம் எமது பொருளாதாரத்தினை சுற்றுச் சூழல் ரீதியாக நிலைபேறான அபிவிருத்தி உபாயத்தின் மீது கட்டியெழுப்புகின்றோம். அது நீலமானது. ஏனெனில் மொத்த வளர்ச்சி உபாயத்தினை உருவாக்குவதில் கடலின் பூரண பொருளாதார வாய்ப்புக்களை ஒன்றிணைப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா எமது மூதாதையர்களின் தொழில் முயற்சியாண்மை துடிப்பை மீள் எழுப்பி இலங்கை இயங்கு நிலை 4 வர்த்தக மையமாக, நிலையமாக வருவதனை இயலுமானதாக்குவதுடன் சகல இலங்கையர்களும் ஒரு வளர்ச்சியடைந்த நாட்டின் இணை உரித்துடையவர்களாக வருவதனை ஊக்குவிக்கும்.

13. 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு-செலவுத்திட்டம் ஐ.அ.டொ.5,000 தனிநபர் வருமானம், ஒரு மில்லியன் புதிய வேலை வாய்ப்புக்கள், ஐ.அ.டொ. 5 பில்லியன் வெளிநாட்டு நேரடி முதலீடு, மற்றும் ஐ.அ.டொ. 20 மில்லியன்களாக ஏற்றுமதிகளின் இரட்டிப்பு போன்ற இன்னோரன்ன திட்டமிடப்பட்ட நடுத்தர கால இலக்குகளை அடைவதற்கு ஆதரவளிக்கும். 2018 ஆம் ஆண்டில், 5 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியையும், சுமார் 6 சதவீத பணவீக்கத்தினையும் திட்டமிட்டுள்ளதோடு, பெரும்பாலும் 6 தசாப்த காலப்பகுதியில் முதல் தடவையாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சதவீத பாதீட்டின் ஆரம்ப மீதியை அடைவதற்கும் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீத வரவு-செலவுத்திட்டப் பாதீட்டொன்றினையும் அடைவதற்கு எதிர் பார்க்கின்றோம்.

## பகுதி II

### தாராளமயமாக்கல் வழிமுறையை விரைவுபடுத்தல்

14. சபாநாயகர் அவர்களே, 1977 இல் திறந்த பொருளாதாரக் கொள்கையினை அறிமுகப்படுத்திய ஆசியாவின் முன்னணி நாடுகளுள் ஒன்றாக நாம் விளங்கிய போதும் கடந்த தசாப்தத்தில் அந்த முன்னெடுத்தலை தொலைத்து விட்டோம். எமது சட்டங்கள் பலவும் காலங் கடந்தவையாகவும் பிற்போக்கு விளைவுகளைக் கொண்டவையாகவும் உள்ளன. சுங்கக் கட்டளைச் சட்டம் 1869 ஆம் ஆண்டில் முதலில் அறிமுகப்படுத்தப் பட்டது. கலால் (மது) வரிக் கட்டளைச் சட்டம் 1912 இல் ஆக்கப்பட்டது. கல்விக் கட்டளைச் சட்டம் 1939 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் சபை, புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இன்னும் பலவற்றை செய்ய வேண்டியுள்ளது.

உதாரணமாக 1972 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க வாடகைச் சட்டம், வீடுகளின் உடைமை மற்றும் அறவிடப்படக் கூடிய வாடகை என்பவற்றை மட்டுப்படுத்தியுள்ளது. 1973 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க விவசாய காணிச் சட்டமானது மாற்றுப் பயிர்ச்செய்கைக்கு வழிவிடக் கூடியவாறு திருத்தப்பட வேண்டியுள்ளது. தொழிலாளர்கள் / ஊழியர்கள் தமது வேலை செய்யும் நேரத்தினை தெரிவு செய்யக் கூடிய வகையில் 1954 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் கட்டளைச் சட்டத்தினை திருத்தியமைக்க வேண்டும். வங்குரோத்து நிலை பற்றிய சட்டங்கள் அவற்றின் வினைத்திறனை அதிகரிக்கக் கூடியவாறு திருத்தி அமைக்கப்பட வேண்டியுள்ளது. முன்மொழியப் பட்டுள்ள இந்த மாற்றங்கள் இலங்கையினை ஒரு செயலாக்கம் கொண்ட இயங்கு நிலையுடைய சந்தைப் பொருளாதாரமாக அமைய வழிகோலும் என்பது எனது நம்பிக்கையாகும். அறிமுகப்படுத்தப்படவுள்ள சட்டங்கள், இல்லாதொழிக்கப்படவுள்ள சட்டங்கள் மற்றும் திருத்தப் படவுள்ள சட்டங்கள் பற்றிய ஒரு பட்டியல் தொழில்நுட்பக் குறிப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

### கடல்சார் மற்றும் பசுமை சார் பொருளாதாரம்

15. சபாநாயகர் அவர்களே, 2016 ஜனவரியில் கடல்சார் மற்றும் பசுமை சார் பொருளாதார உபாய வழியை பின்பற்றுதல் பற்றிய எமது கொள்கையை அறிவித்திருந்தோம். இது பாரிஸில் நடைபெற்ற தரப்பினரின் மாநாடு 2015 (Conference of Parties 2015) இல் எமது சர்வதேச அர்ப்பணிப்பு அல்லது 2030 ஆம் ஆண்டளவில் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான எமது அர்ப்பணிப்பு என்பதற்காக மட்டுமல்லாது எமக்கு மட்டுமின்றி எதிர்கால சந்ததியினருக்குமாக எம்மால் செய்யப்பட வேண்டிய ஒரு மிக முக்கிய பொறுப்புடைமையாகும். தயாரிப்புத்துறை, மீன்பிடித்துறை மற்றும் விவசாயத்துறை போன்றவற்றில் புதிய மற்றும் நிலைபேறுடைய தொழில்நுட்பங்களை உள்வாங்குதல் மற்றும் அதிகளவில் பயன்படுத்தப்படாத எமது கடல்சார் வளங்களைப் பயன்பாட்டிற்கு கொண்டு



வருதல் போன்றவற்றினால் எமது பொருளாதார பல்வகைப்படுத்தலினை வசதியளிப்பு செய்து வளர்ச்சியினை ஏற்படுத்துவதனை முன்மொழிவு செய்கின்றோம். இது சுற்றுச் சூழல் அபாய நேர்வு மற்றும் சூழலியல் அருமைத் தன்மை என்பவற்றைக் குறைக்கும். இதன்படி நான் பின் வருவனவற்றை முன்மொழிவு செய்கின்றேன்.

16. சபாநாயகர் அவர்களே, எமது மோட்டார் வாகனக் கொள்கையினை இங்கு முன்வைக்க விரும்பிக்கின்றேன். கடந்த காலங்களில் எமது மோட்டார் வாகனக் கொள்கை தூய்மை அல்லது பசுமை சார்ந்து அமைந்திருக்கவில்லை. 2040 ஆம் ஆண்டளவில் நாட்டிலுள்ள அனைத்து வாகனங்களும் புத்துருவாக்கக் கூடிய சக்தி மூலங்களில் இருந்து வலுவேற்றப்படுபவையாக இருத்தல் வேண்டும் என நாம் முன்மொழிவு செய்கின்றோம்.

இதற்கிணங்க அனைத்து அரசாங்க வாகனங்களும் 2025 ஆம் ஆண்டளவில் மின்வலு அல்லது இருமை முறைமையில் வலுவேற்றப்பட்ட வாகனங்களாக மாற்றப்படவுள்ளது.

17. இது தொடர்பில் நாம் ஒரு ஊக்குவிப்புக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தவுள்ளோம். அதன்படி, மின்வலு முச்சக்கரவண்டிகள் மற்றும் பேருந்துகள் உட்பட மின்வலு வாகனங்கள் மீதான இறக்குமதி வரி குறைக்கப்படவுள்ளதுடன் மீளளிப்பு செய்ய முடியாத (பெற்றோலிய வலு) வலு வாகனங்கள் மீதான இறக்குமதி வரி நியாயப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளது. வரி வருமானத்தில் கசிவுகளை/ இழப்புக்களை இழிவுபடுத்தக் கூடியவாறு வரிவிதிப்புக்கான புதிய சமன்பாடு இயந்திரத்தின் இயலளவு அடிப்படையில் அமைக்கப்படவுள்ளது.

- சபாநாயகர் அவர்களே, மின்வலு வாகனங்கள் மீதான இறக்குமதி வரி ஆகக் குறைந்தது ஒரு மில்லியனால் குறைக்கப்படவுள்ள அதேவேளை பெற்றோலியம் மூலம் வலுவளிக்கப்படுகின்ற மேல்நிலை வாகனங்கள் மீதான வரி அநேகமாக ரூபா 2.5 மில்லியன்களால் அதிகரிக்கப்படும்.
- 2,500 உருளைக் கொள்ளளவு இயந்திர இயலளவு கொண்ட அதி ஆடம்பர வாகனங்கள் மீது ஒரு விசேட வரி விதிக்கப்படவுள்ளது.
- சுற்றுச்சூழல் நட்புறவான மின்வலு முச்சக்கரவண்டிகளுக்கு இடைமாறும் போக்கினை ஆர்வப்படுத்தக் கூடியவாறு டீசல் வலு முச்சக்கர வண்டிகள் மீதான இறக்குமதி வரி ரூபா 50,000 அளவில் அதிகரிக்கப்படவுள்ளது.

18. மின்வலு பேருந்துகள் மற்றும் மின்வலு முச்சக்கரவண்டிகளுக்கான கடன் பெறுமதி விகிதம் 90:10 ஆக திருத்தப்படவுள்ளது. இது உள்நாட்டில் பொருத்தப்பட்ட மின்வலு மகிழுந்து மற்றும் பேருந்துகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

19. வாகன இறக்குமதிகள் மீதான கப்பலேற்றுகைக்கு முந்திய சான்றிதழ் மீள்வரைவு செய்யப்படுவதுடன் வாகனங்களின் புகை வெளியேற்றுகை மற்றும் பாதுகாப்பு சார் நியமங்களும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

20. இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துத் தொகுதிக்கு 50 மின்வலு பேருந்துகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொது போக்குவரத்து முறைமையின் நிறைமாறுகையின் முன்னோடிகளாக அமைவோம். தனியார் பேருந்து உடைமையாளர்களும் மின்வலு பேருந்துகளை சேவைப்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்படவுள்ளனர். (ரூ.500 மில்.)

21. தேசிய மின் கட்டமைப்புக்கு புறமாக சூரிய சக்தி/வலுவைப் பயன்படுத்தி மின்வலு வாகன வலு மீளேற்றுகை நிலையங்கள் அமைத்தல் மற்றும் விவசாயம், விவசாயப் பதப்படுத்தல், துளி நீர்ப் பாசனம், கோழிவளர்ப்பு, தகரத்திலிடல், பெருந் தோட்டத்துறை மற்றும் விருந்தக தொழில் துறை ஆகியவற்றில் பயன் படுத்துவதற்கு ஊக்கப்படுத்தக் கூடியவாறு வெகுமதிகள் வழங்கப்படவுள்ளது. (ரூ.5300 மில்.)

22. வாகனங்களுக்கு காபன் வரியை அறிமுகப்படுத்த நான் முன்மொழிகின்றேன். இதன்படி ஈருருளி, மகிழுந்து மற்றும் பயணிகள் பேருந்து ஆகியவற்றுக்கு ஒரு நாளுக்கு முறையே 17 சதம், ஒரு ரூபா எழுபத்தியெட்டு சதம் மற்றும் இரண்டு ரூபா எழுபத்தி நான்கு சதம் என அறவிடப்படவுள்ளது. இதனால், பெறப்படும் நிதி சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படவுள்ளது.

23. பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையில் ஆர்வமின்மையை ஏற்படுத்தும் நோக்குடன் ஒரு கிலோ கிராம் பிளாஸ்டிக் கூறுகளுக்கு பத்து ரூபா என்றவாறு ஒரு உற்பத்தி வரி விதிக்கவுள்ளோம். தனியார் துறையினர் சுற்றுச்சூழல் நட்பான மாற்றுவழிகளுக்கு உள்வாங்கச் செய்வதற்கு தூண்டப்படுவதுடன் சேதன முறையில் அழிவடையக் கூடிய மூலப்பொருட்களான வாழைத்தார், ஓலைகள், தெங்குத்தும்பு மற்றும் மூங்கில் இழை போன்றவற்றைப் பயன்படுத்தி பைகள் மற்றும் பொதியிடல் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபடக் கூடியவாறு ஆர்வப்படுத்தப்படவுள்ளனர். (ரூ.75 மில்.)

24. சேதனமுறையில் அழிவடையக் கூடிய பொதியிடல் பொருட்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தக் கூடிய இ யந்திரங்கள், பொறிகள் மற்றும் மூலப் பொருட்கள் மீதான சுங்கவரி விலக்கப்படவுள்ளது.

25. சபாநாயகர் அவர்களே, நாம் கழிவு அகற்றல் தொடர்பான பிரச்சினைகளுக்குக் கவனம் செலுத்தும் இவ்வேளையில் பின்வரும் முன்மொழிவுகளை முன்வைக்க விரும்புகின்றேன்.

26. அறுவக்காலு கழிவு அகற்றல் மற்றும் முகாமைத்துவ நிலையத்தினை ஆரம்பிக்கும் பணிகளை விரைவுபடுத்தவுள்ளோம். (ரூ.3000 மில்.)


(தொடரும்...)

பாரதம்

# சசிகலா குடும்பத்தை இலக்கு

# மெகா ரெய்டு!





சசிகலா, டி.டி.வி. தினகரன் ஆகியோரின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களின் வீடுகள், அலுவலகங்கள் உள்ளிட்ட 187 இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சோதனை நடத்தினர்.

சோதனை நடந்த இடங்கள் பற்றிய விபரம் வருமாறு,

❖ சசிகலாவின் கணவர் நடராஜனின் வீடு. (தஞ்சை அருளானந்த நகர்)

❖ சசிகலாவின் அண்ணன் சுந்தரவதனத்தின் மகனும், டி.டி.வி.தினகரனின் மைத்துனருமான டாக்டர் வெங்கடேஷ் வீடு. (தஞ்சை மேலவஸ்தாசாவடி)

❖ சசிகலாவின் அண்ணன் மகன் மறைந்த டி.வி. மகாதேவன் வீடு. (தஞ்சை பரிசுத்தம் நகர்)

❖ டி.வி.மகாதேவனின் சகோதரர் தங்கமணி வீடு. (தஞ்சை அருளானந்தநகர்)

❖ நடராஜனின் சகோதரி மகன் சின்னையா என்ற வெங்கடேசன் வீடு. (தஞ்சை கோட்டை வங்கி ஊழியர் காலனி)

❖ சசிகலாவின் சகோதரர் திவாகரன் வீடு. (திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி மன்னை நகர்.)

❖ திவாகரன் வீடு. (சுந்தரக்கோட்டை)

❖ திவாகரனின்பண்ணை வீடு.(மன்னார்குடியை அடுத்த ரிஷியூர்)

❖ திவாகரனுக்கு சொந்தமான மன்னார்குடி செங்கமலத்தாயார் கல்வி அறக்கட்டளை மகளிர் கல்லூரி.

அருளானந்த நகர்)

❖ ஜெயலலிதா பேரவை மாநில இணை செயலாளர் (அம்மாஅணி) ராஜேஸ்வரன் வீடு. (தஞ்சை பிலோமினா நகர்)

❖ தஞ்சை வடக்கு மாவட்ட அ.தி.மு.க. (அம்மா அணி) சட்டப்பிரிவு செயலாளர் சட்டத்தரணி வேலுகார்த்திகேயன் வீடு. (தஞ்சை மாதாக்

❖ அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் (அம்மா அணி) டிடிவி.தினகரன் வீடு. (மன்னார்குடி மன்னை நகர்)

❖ திருவாரூர் மாவட்ட அ.தி.மு.க. (அம்மா அணி) செயலாளர் எஸ்.காமராஜ் வீடு. (மன்னார்குடி)

(மன்னார் குடி)

❖ அ.தி.மு.க. (எடப்பாடி அணி) மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் பொன். வாசுகி ராம் (மன்னார்குடி)

❖ சசிகலாவின் சகோதரி வனிதா மணி வீடு.

(மன்னார்குடி மன்னை நகர்)

❖ திவாகரனின் உறவினர் அக்ரி ராஜேந்திரன் வீடு. (புள்ளவராயன் குடிக்காடு)

❖ திரைப்பட விநியோகஸ்தர் வெங்கடாசலத்தின் வீடு. (நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த கருப்பம் புலம்)




❖ திவாகரனின் நண்பர் தமிழ்ச்செல்வன் வீடு. (மன்னார்குடி மன்னை நகர்)

❖ திவாகரனின் உதவியாளர் விநாயகம் வீடு. (மன்னார்குடியை அடுத்த கீழத்திருப்பாலக்குடி)

❖ முன்னாள் கவுன்சிலர் ராசுப்பிள்ளை. (மன்னார்குடி)

❖ திவாகரனின் ஆதரவாளர் சுஜய். (மன்னார்குடி)

❖ திவாகரனின் ஆதரவாளர் செல்வம் வீடு. (மன்னார்குடி)

❖ ஓய்வு பெற்ற முன்னாள் வேளாண்மை அதிகாரி நடேசன். (திருத்துறைப் பூண்டி)

❖ செங்கமலத்தாயார் அறக்கட்டளை மகளிர் கல் லூரி ஊழியர் அன்புக்கரசி வீடு. (மேலமரவாக்காடு)

❖ திவாகரன் ஆதரவாளர் சித்தார்த்தன் வீடு. (மன் னார்குடி அருகே உள்ள அசேஷம்)

❖ அமைச்சர் காமராஜ் உறவினர் சட்டத்தரணி உதயகுமார் வீடு.

## தமிழகத்தில் தொடர் மழை பாதிப்புக்கள் அதிகரிப்பு



(சென்னை)

தமிழகத்தில் தொடர்ச்சியாக பருவமழை பெய்து வருகின்ற நிலையில், இன்றும் பல இடங்களில் மழை நீடிக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

வானிலை ஆய்வு மையம் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம்மற்றும்சென்னை, புதுச்சேரி, காஞ்சிபுரம், விழுப்புரம் ஆகிய இடங்களில், இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

இதனால்முக்கிய அணைகளில் நீர்மட்டம் அதிகரிப்பதுடன், வெள்ளத்தின் பாதிப்பும் அதிகரிக்கும்.

எனவே மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியேறும்படி வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரெய்டில் முக்கிய ஆ கைப்பற்றிய வருமான


(சென்னை)

சசிகலா உறவினர்கள் இல்லத்தில் நடத்தப்பட்ட சோதனையில் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக வருமான வரித்துறை அதிகாரிகள் தகவலளித்துள்ளனர்.

சசிகலா குடும்பத்தினர் வசம் இருக்கும் ஜெயா தொலைக்காட்சி, நமது எம்.ஜி.ஆர் நாளிதழ் உள்ளிட்ட 187 இடங்களில் நேற்றுக் காலை சுமார் 7 மணி முதல் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். சசிகலாவின் உறவினர் இளவரசியின் மகள் கிருஷ்ண பிரியாவின் இல்லம், ஜெயா தொலைக்காட்சி இயக்குநர் விவேக் இல்லம் மற்றும்மன்னார் குடியிலுள்ள சசிகலாவின் உறவினர் கள் இல்லத்திலும் சோதனை நடைபெற்றது.

ஜாஸ் சினிமாஸ் அலுவலகம், சசி கலா ஆதரவாளர் புகழேந்தி இல்லம், டி.டி.வி தினகரன் இல்லம் ஆகியவற்றிலும் சோதனை நடந்தது. சசிகலா குடும்பத்தினர் மட்டுமல்லாது அவரது ஆதரவாளர்களின் இல்லத்திலும் சோதனை நடந்தது. சுமார் 1800 அதிகாரிகள் மொத்தமாக இந்த சோதனைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பல இடங்களில்நடத்தப்பட்ட இந்த சோதனையின் போது முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)



# வெளிநாடு

## ...வைத்து

❖ நாமக்கல்லில் உள்ள சசிகலாவின் சட்டத்தரணி செந்தில் வீடு.

❖ சட்டத்தரணி செந்தி லின் ஜூனியர் சட்டத்தரணி பாண்டியன் வீடு.

❖ சட்டத்தரணி செந்திலின் நண்பர் சட்டத்தரணி பிரகாஷ் அலுவலகம்.

❖ சட்டத்தரணி செந்திலுடன் இணைந்து தொழில் செய்யும் சுப்பிரமணியன் என்பவரின் வீடு, அலுவலகம்.

❖ மோகனூர் அருகே உள்ள சுப்பிரமணியனின் கோழிப்பண்ணை.

❖ தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய உறுப்பினர் ஏ.வி. பாலுசாமியின் வீடு. (அலுவலகம்)

❖ கோடநாடு எஸ்டேட், நீலகிரி மாவட்டம்.

❖ கர்சன் எஸ்டேட்.

❖ கோடநாடு பங்களாவில் வேலை பார்த்த ஜீவனின் கடைகள், கோப்பி எஸ்டேட், ஷோரூம், குடோன்.

❖ கோவையைச் சேர்ந்த மணல் குத்தகைதாரர் ஆறுமுகசாமியின் அலுவலகம், வீடு.

❖ கடலூர் சரசுவதி நகரில் உள்ள சசிகலாவின் குடும்ப ஜோதிடர் சந்திரசேகரின் வீடு.

❖ ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அருகே உள்ள சசிகலா ஆதரவாளரின் காகித ஆலை.

❖ திருச்சி கே.கே.நகரில் உள்ள சசிகலாவின் அண்ணன் மனைவி இளவரசியின் சம்பந்தி கலியபெருமாள் வீடு.

❖ திருச்சி ராஜா காலனியில் உள்ள டாக்டர் சிவகுமார் வீடு.

❖ புதுக்கோட்டை மாவட்டம் நெற்குப்பையில் உள்ள அ.தி.மு.க. (அம்மா) மாவட்ட செயலாளர் பரணி கார்த்திகேயன் வீடு.

❖ புதுச்சேரி அருகே ஆரோவில் பொம்மையார் பாளையத்தில் உள்ள டி.டி.வி. தினகரனின் பண்ணை வீடு.

❖ பெங்களூரில் உள்ள தினகரனின் ஆதரவாளர் வா.புகழேந்தியின் வீடு, கர்நாடக மாநில அ.தி.மு.க. அலுவலகம் உள்ளிட்ட 187 இடங்களில் சோதனை நடைபெற்றது. (இ-7)

# கன்னித்தீவு கதைபோல் தொடரும் வருமான வரித்துறை சோதனைகள்

## மு.க.ஸ்டாலின் விமர்சனம்

(சென்னை)

வருமான வரித்துறையினர் நடத்தும் சோதனைகள் கன்னித்தீவுகதை போன்று தொடர்ந்து நடைபெறுவதாக மு.க.ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

அ.தி.மு.க. அம்மா அணி துணை பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன், சசிகலாவின் கணவர் நடராஜன் மற்றும் அவர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள், கட்சி நிர்வாகிகளின் வீடுகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் சோதனை நடத்தினர். ஜெயா டிவி அலுவலகம், போயஸ் கார்டன் அலுவலகம், கோடநாடு எஸ்டேட் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் சோதனை நடத்தப்படுகிறது.



இந்த சோதனையின் பின்னணியில் மத்திய அரசு இருப்பதாக தினகரன் தரப்பினர் குற்றம்சாட்டி வருகின்றனர். சோதனை குறித்து பல்வேறு தலைவர்களும் தங்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

அவ்வகையில் தி.மு.க. செயல்தலைவர் மு.க.ஸ்டாலினிடம் இந்த சோதனை குறித்து நிருபர்கள் கேட்டனர். இதற்கு பதிலளித்த மு.க.ஸ்டாலின், ஏற்கனவே நடந்த வருமான வரித்துறை சோதனைகளை பட்டியலிட்டார்.

வருமான வரித்துறையினர் நடத்தும் சோதனைகள் கன்னித்தீவு கதை போல தொடர்ந்து நடைபெறுகிறது. அன்புநாதன், விஜயபாஸ்கர், சேகர் ரெட்டி, ராம மோகன ராவ் உள்ளிட்ட பலரின் வீடுகளில் இதற்கு முன்பு வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்த சோதனைகள் மீது எடுத்த நடவடிக்கை என்ன? தற்போது அதன் நிலை என்ன? என்பதை அரசு தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு இந்தச் சோதனை குறித்து கூறுகிறேன்' என்றார் ஸ்டாலின்.

டி.டி.வி. தினகரன் வீட்டில் நடைபெற்ற சோதனையில் அரசியல் பின்னணி இருக்கிறதா? என்ற கேள்விக்கு பதிலளிக்கவில்லை. (இ-7)

# பேரழிவை எதிர்நோக்கும் அபாயத்தில் ஏமன்

## வைத்தியர்கள் எச்சரிக்கை



(சனா)

ஏமன் நாடானது, அடுத்த வாரமளவில் பாரிய உயிரிழப்பை எதிர்நோக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மருந்துப் பொருட்களின் பற்றாக்குறையினால், ஏமன் தலைநகர் ஏற்கனவே போராடி வருகின்றது. இந்நிலையில், ஏமனுக்கான அவசர மருந்துப் பொருட்களின் விநியோகத்தை சவுதி அரேபியா அனுமதிக்காத பட்சத்தில் நிலைமை தீவிரமடையும் என வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

மருந்து பற்றாக்குறையினால், புற்றுநோய், நீரிழிவு மற்றும் சிறுநீரக செயலிழப்பினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலை காணப்படுகிறது. அந்தவகையில், மருந்து விநியோகத்தில் அபாயகரமான நிலையை நாடு எதிர்நோக்கி வருவதாகவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சவுதியானது, ஏமன் மீதான தடைகளை நீக்கி, ஏமன் நாட்டிற்கான அவசர மருந்துப் பொருட்களின் விநியோகத்தை துரிதப்படுத்தாவிடின், சிகிச்சை மூலம் குணமடையக் கூடிய நோயாளர்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

ரியாத் நோக்கி ஹௌதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஏவுகணை தாக்குதலை தொடர்ந்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் சவுதி ஏமனுக்கான வான், கடல் மற்றும் நில மார்க்கமான அனைத்து பாதைகளையும் மூடியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வருமான வரித்துறைசோதனையில் 60 போலி நிறுவனங்கள் சிக்கின

(சென்னை)

வருமான வரித்துறையினர் மேற்கொண்டுவரும் 'operation click black momy' என்னும் சோதனையில், 60 போலி நிறுவனங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தொடங்கிய இந்த சோதனை, சில முக்கிய இடங்களில் நேற்றும் இடம்பெற்ற நிலையில், ஊடகவியலாளர்களைச் சந்தித்த வரித்துறை அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளதாவது.

குறித்த சோதனையின் போது எவ்வளவு கறுப்பு பணம் கைப்பற்றப்பட்டது மற்றும் சசிகலாவின் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் 317 வங்கிக் கணக்கு உட்பட பிடிபட்டுள்ள ஆவணங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் தஞ்சையில் 7 இடங்களில், வருமான வரித்துறை அதிகாரிகள் 2 ஆவது நாளாக சோதனை நடத்தி வருகின்றனர். சசிகலாவின் அண்ணன்மகன் மகாதேவன் வீடு, மருத்துவர் வெங்கடேஷ் மற்றும் அவரது நண்பர் வீடு உள்ளிட்ட 7 இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்காவும் சீனாவும் சிறந்த பங்காளிகளாக திகழ வேண்டும்

## சீன ஜனாதிபதி வலியுறுத்து



(வோஷிங்டன்)

அமெரிக்காவும் சீனாவும் எதிரிகளாக அன்றி, சிறந்த பங்காளிகளாக திகழ வேண்டும் என சீன ஜனாதிபதி ஜிஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதிக்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இராப்போசன விருந்துபசார நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் புதிய அத்தியாயமொன்றை தொடங்குவதற்கான சிறந்த ஆரம்பமாக இது அமைந்துள்ளது. இதன்மூலம் அனைத்து பங்குதாரர்களின் எதிர்பார்ப்புக்களுக்கும் புதிய பங்களிப்பை செய்ய முடியும்.


பகிரப்பட்ட நலன்களுடன் சீனாவும் அமெரிக்காவும் முன்னேற்றகரமான சமூகமாக உருவெடுத்து வருகிறது.

உலக சமாதான ஸ்திரத்தைப் பாதுகாத்தல் மற்றும் பொதுவான வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவற்றில் இரு நாடுகளும் கனமான பொறுப்புகளை வகித்து வருகிறது என்றார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி, சீன ஜனாதிபதியின் அன்பான வரவேற்பிற்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

மேலும், அமெரிக்காவிற்கும், சீனாவிற்கும் இடையிலான ஒத்துழைப்பு, இரு தரப்பினருக்கும் பயனளிப்பதுடன், உலகின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கும் வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார். (இ-7)

# ...நிறுவனங்களை

## ...ன வரித்துறை



# அம்பாந்தோட்டையில் சீனாவின் தலையீடுகளால் பாதிப்பு இல்லை

## இந்தியக் கடலோரக் காவற்படை பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் தலையீடுகள் குறித்து, இந்திய கடலோரக் காவற்படை கவலை கொள்ளவில்லை என்று இந்திய கடலோரக் காவற்படையின் பணிப்பாளர் ராஜேந்திர சிங் தெரிவித்துள்ளார்.



ரைம்ஸ் ஒவ் இந்தியா நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா 99 ஆண்டு குத்தகைக்கு பெற்றுக் கொண்டிருப்பது இந்தியாவுக்கு என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்று இந்திய கடலோரக் காவற்படையின் பணிப்பாளர் ராஜேந்திர சிங்கிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு, நாம் இலங்கையுடன், புரிந்துணர்வு உடன்பாடுசெய்திருக்கிறோம். சீனாவின் தலையீடுகளால் எமது உறவுகளில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் பதிலளித்துள்ளார். (இ-7)

# மலையக தமிழ் கட்சிகளை வளைத்துப் போடும் மகிந்த ராஜபக்ஷவின் முயற்சி தோல்வி

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தம்முடன் இணைந்து போட்டியிடுமாறு; முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார். எனினும் நாம் அவரது அழைப்பை நிராகரித்துவிட்டோம் என்று கல்வி இராஜாங்க அமைச்சரும் கட்சியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இதனை தெரிவித்தார். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டு வருகிறோம். அரசியல் ரீதியில் சாதகமான வழியையே தேர்ந்தெடுப்போம். யாருடன் இணைந்து போட்டியிட்டால், தமிழ் தரப்புக்கு சாதகமான நிலை ஏற்படும் என்பது தொடர்பில். வியூகம் மேற்கொண்டு வருகிறோம்.

"அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடுவது என்பது, எங்களது நோக்கமல்ல. மகிந்த தரப்பினரும் (பொதுஜன பெரமுண) தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு அழைப்பு விடுத்துள்ளனர். எனினும், அவர்களது கோரிக்கையை நிராகரித்து விட்டோம். ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியனவும் அழைப்பு விடுத்துள்ளன. எனினும், தேர்தலில் தனித்து போட்டியிடுவது சிறந்ததாக அமையும். எதிர்வரும் இரு வாரங்களில் எமது நிலைப்பாட்டை அறிவிப்போம்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இரட்டைக் குடியுரிமை தொடர்பாக சகல எம்.பிக்களிடமும் விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் இரட்டைக் குடியுரிமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது. இது தொடர்பில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் சத்தியக் கடதாசிகள் பெற்றுக்கொள்ளுமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் பவ்ரல் அமைப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, இது தொடர்பிலான சர்ச்சைகள் எழுப்பப்பட்டு வருகின்றன. இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொண்டுள்ளனரா? இல்லையா? என்பது குறித்து அறிந்து கொள்வதற்கு அனைவரிடமும் சத்தியக் கடதாசிகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அரச ஊழியர்களை ஏமாற்றிய பட்ஜெட்



(கொழும்பு)

வரவு- செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்த்த அரசாங்க ஊழியர்கள் மற்றும் தனியார் துறையினர் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு வரவு- செலவு திட்டத்தில்அரசாங்க ஊழியர்கள் மற்றும் தனியார் துறையினர் எதிர்பார்த்த சம்பள அதிகரிப்பு கிடைக்கவில்லை. அரசாங்க ஊழியர்களுக்காக கூட்டு சம்பள முறை ஒன்று ஏற்படுத்தப்படும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர வரவு- செலவு திட்டத்தில் அறிவித்துள்ளார்.

எனினும் இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டங்களிலும் இது கூறப்பட்டதற்கு நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வியப்பை ஏற்படுத்திய முட்டை கோஸ்

(கொழும்பு)

மலையகத்தின் ஹைபொரஸ்ட் பிரதேசத்தில் பாரிய முட்டை கோஸ் ஒன்று வளர்ந்துள்ளது.

இதன் நிறை 12 கிலோ கிராம் என அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

ஹைபொரஸ்ட் பகுதியில் மரக்கறி கொள்வனவு செய்ய சென்ற ஆர்.எம்.விஜேகோன் பண்டாவுக்கு அந்த மிகப்பெரிய முட்டை கோஸ் கிடைத்துள்ளது.

பாரிய முட்டை கோஸினை கார்கில்சினால் நடத்தி செல்லப்படும் மரக்கறி நிலையத்திடம் அவர் ஒப்படைத்துள்ளார்.

அங்கிருந்து கண்டியை சேர்ந்த ஒருவர் 1.200 ரூபா கொடுத்து அந்த முட்டை கோஸை கொள்வனவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மிகப் பெரிய முட்டை கோஸினை பார்வையிட்ட மக்கள் பலர் வியப்படைந்துள்ளனர். (இ-7)



## இன்று ஒரு தகவல்

### ஒரே குழப்பமாக உள்ளதா?

துணிக்கடைக்குப் போய் புடைவை, சட்டையை எடுப்பது முதல் முக்கியமான முடிவுகளை எடுப்பது வரை மனிதர்கள் அனைவருக்கும் குழப்பமோ குழப்பம்!

நண்பர் ஒருவர் சொன்னார் வர்ற தை மாதம் ஒரே நாளில் மூன்று ஊர்களில் மூன்று திருமணங்கள் எதற்குப் போவது என்றே முடிவெடுக்க முடியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது. நானும் ஒரு வாரமா இதையே யோசிச்சுக்கிட்டிருக்கேன். ஒன்றுமே புரியலை என்றார்.

பத்து நிமிடத்தில் முடிவு எடுத்து விடலாமே! இதற்கு ஏன் ஒரு வாரம் யோசனை? மூன்று திருமணங்களைப் பற்றியும் சொல்லுங்க என்றேன் சொன்னார்.

மூன்றாமவர் நீங்க வரலைன்னாலும் தப்பா எடுத்துக்காமல் உங்க நிலைமையைப் புரிஞ்சுக்கிறவர்னுசொல்றீங்க. எனவே அவருக்கு உடனே வாழ்த்து அனுப்புங்க போதும்!

முதலாமவர் முக்கியம்கிறீங்க. ஆனா அவர் வீட்டில் இன்னும் ரெண்டு திருமணம் இருக்கு அப்படீன்னு வேற சொல்றீங்க! அந்த ரெண்டிலும் கலந்துகிட்டு அந்நாளை ஒரே அமுக்கா அமுக்கிடலாம். நீங்க இரண்டாமவர் வீட்டுத் திருமணத்திலேயே கலந்துக்குங்க சரிதானே?

அவர் முகத்தில் பெரிய ஒளி –ஏதோ உலகமகா உண்மையை நான் சொல்லிவிட்டமாதிரி!

சிலநேரங்களில் எல்லாமுடிவுகளுமே மோசமான முடிவுகளாக இருக்கும். அதாவது கார் ஓட்டும் ஒருவர் எதிர்பாராமல் பிரேக் பிடிக்காமல் போக எதிலாவது மோதித்தான் நிறுத்த வேண்டும் என்கிற கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படலாம். லொறி மீது மோதுவதா புளியமரத்தின் மீது மோதுவதா என்று முடிவு எடுக்க வேண்டியநிலை. மோதல் தவிர்க்கவே முடியாது என்கிற போது புளிய மரம் உத்தமம். ஆக குறைவான பாதிப்பு எது என்பதைக் கண்டறிந்து அதையொட்டி முடிவெடுக்க வேண்டும்.

பல யோசனைகள் தோன்றும் நேரத்தில் முடிவெடுப்பது என்பது ஒரு கலை. அது ஒரு ஓவியன் புதிதாக ஒரு வெள்ளைத் துணியில் ஓவியம் வரைவதைப் போன்றதல்ல.

மாறாக ஒரு சிற்பி ஒரு பாறையில் தேவையற்ற பகுதிகளை நீக்கி அதைச் சிலையாக வடிக்கின்றானே அதைப் போன்றது.

எந்த இரண்டு மூன்று யோசனை முன் வைக்கப்பட்டாலும் உடனே ஒண்ணுமே புரியலே உலகத்திலே! என்று குழம்பிப் போகிற மனிதர்கள் இந்த Elemenating Theoryயைப் பின்பற்றலாம்.

அதாவது எடுத்தவுடன் அவசரப்பட்டு ஒற்றையா ரெட்டையா? பாணியில் முடிவு எடுக்காமல் ஒவ்வொன்றாகக் கழித்துக் கொண்டே வரவேண்டும். இறுதியில் மிஞ்சியிருப்பது தான் நாம் எடுக்கப் போகும் முடிவு.

அதுவே மிகச் சிறந்த முடிவு!

அதற்குப் பிறகு குழப்பத்திற்கு ஏது இடம்?

**லேனா தமிழ்வாணன்**

# பட்ஜெட் குறித்து அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு

(கொழும்பு)

2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம், நல்லாட்சி அரசாங்கத்தின் 3ஆவது வரவு-செலவுத்திட்டமாகும். இதேவேளை நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டம் குறித்து பலரும் பல கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

**காணி அமைச்சர் கயந்த**



இளம் சமூகத்தினரை முன்னிலைப்படுத்தி வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கதாகும். முழு நாட்டையும் கவனத்தில் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ள மங்கலகரமான மங்களவின் வரவு-செலவுத்திட்டம் இது வாகும் என்றார்.

**அமைச்சர் ரவூப் ஹக்கீம்**



2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் அனைத்து தரப்பினருக்கும் முன்னுரிமை வழங்கும் வகையில் அமைந்துள்ளது. வடக்கு- கிழக்கு மட்டுமன்றி நாடளாவிய ரீதியில் வரவு-செலவுத்திட்டத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. நீலப்பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வரவு-செலவுத்திட்டமாக இது அமைந்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையிலும் இது அமைந்துள்ளது. இது வரவேற்கத்தக்கது என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

**அமைச்சர் பழனி திகாம்பரம்**



காணி வீடு ஆகிய விடயங்களில் மலையக மக்களுக்கும் வரவு-செலவுத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டமை பாராட்டத்தக்க விடயமாகும். கடந்த கால வரவு-செலவுத்திட்டம் அனைத்துமே வெளிநாடுகளில் இலங்கை பெற்ற கடன்களை திருப்பி செலுத்துவதிலேயே பெரும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் இம்முறை அவ்வாறான நிலை இல்லை என்றார்.

**அமைச்சர் ராஜித சேனாரட்ன**



2025ஆம் ஆண்டு இலக்கை நோக்கி நாம் பயணிப்பதற்கான வேலைத்திட்டம் வரவு-செலவுத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. நாட்டைக்கட்டியெழுப்புவதற்கு இது பெரிதும் உதவும்.

**அமைச்சர் தயாசிறி ஜயசேகர**



பசுமை வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பல வருடங்களிற்கு பின்னர் நாட்டில் இளைஞர், யுவதிகளின் வேலையில்லா பிரச்சினை தீர்வுக்கு சரியான முன்மொழிவுகள் இடம்பெற்றுள்ளன.

விளையாட்டுத் துறைக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை பாராட்டவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

**அமைச்சர் சம்பிக்க ரணவக்க**



அரசாங்கத்தின் வருமானம் 2 மடங்காக அதிகரிப்பதற்கு வரவு-செலவுத்திட்டத்தில் முன்மொழிவு இடம்பெற்றுள்ளது. நாளாந்த வாழ்க்கைச் செலவை சமாளிக்கக்கூடியதாக இது அமைந்துள்ளது. இது பாரிய வெற்றியாகும்.

**அமைச்சர் றிசாத் பதியுதீன்**



நாம் எதிர்பார்த்த விடயங்கள் தொடர்பில் வரவு-செலவுத் திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வுகளாக முன்மொழிவுகள் சில அமைந்துள்ளன.

நாடு மேலும் முன்னோக்கி பயணிப்பதற்கு பெரும் வழிகாட்டியாக இது அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

**அமைச்சர் எரான் விக்ரமரட்ன**



பெண்களை வலுவூட்டக்கூடிய புதிய கடன் திட்டங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

**இராஜாங்க அமைச்சர் ருவான்**



தேசிய பாதுகாப்பு குறித்து வரவு-செலவுத் திட்டத்தில் முக்கியம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர்**




நாட்டிற்குள் புதியதொரு அபிவிருத்தியை ஏற்படுத்தும் விதம் வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக உலகிற்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. புதிய அரசியல் யாப்பின் மூலம் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தக்கூடிய பின்புலத்தை வரவு-செலவுத் திட்ட யோசனைகள் உருவாக்கும் என்றார்.

**நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார**



வரவு-செலவுத்திட்டத்தில் வேலைவாய்ப்பு பிரச்சினைக்கு தீர்வில்லை. நாட்டின் சொத்துக்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கே இதில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (இ-7)

## பாராளுமன்ற உறுப்பினராக பியசேன சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக பியசேன கமகே நேற்று பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்தார்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்தார்.

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கீதா குமாரசிங்கவுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை காணப்படுவதால் அவருக்கு பாராளுமன்ற உறுப்பினராக அங்கம் வகிக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து வெற்றிடமான இடத்துக்கு பியசேன கமகே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கை-தாய்லாந்து இடையே சுதந்திர வர்த்தக உடன்பாடு




(கொழும்பு)

இலங்கைக்கும் தாய்லாந்துக்குமிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்துவது பற்றி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக தாய்லாந்து தூதுவர் சூலாமணி சாட்சுவான் தெரிவித்துள்ளார்.

இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகம் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் அவர் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சி நேற்று முன்தினம் இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனத்தில் இடம் பெற்றது. இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 11 1952



மறைவு 03 11 2015

திதி:- அபரபக்க அட்டமி 11.11.2017

அமரர் விஜயமலர் (மலர்) செல்வராசா

ஆண்டு இரண்டு ஓடி மறைந்ததம்மா
உன் அன்பு முகம் எம் மனதில்
நிலையாய் வாழுதம்மா
தேம்பி அழுது நிதம் உன் நினைவால்
இதயம் விம்மி வெடிக்குதம்மா
ஆண்டுகள் ஓடி மறையும்
ஆனாலும் உன் நினைவு
அழியாது எம் மனங்களில்

57, பிறம்படி லேன்,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(12581)

யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*மதசார்பற்றது *ரகசியமானது *இலவச சேவை

021 222 8117, 077 900 8776

வவுனியாவில்: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

(5675-சி)

# இரட்டைப்பிரஜாவுரிமை மறைக்கப்பட்டால் சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும்

## அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

**உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிந்து கொண்ட பின்னரும் யாராவது இரட்டைப் பிரஜாவுரிமையை பாராளுமன்றத்துக்கு மறைத்தால் அவர்களுக்கு நீதிமன்றத்தின் தீர்ப்புடன் சிறைத் தண்டனையும் வழங்கப்பட வேண்டும் என துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைப் பிரஜாவுரிமையை வகிக்க முடியாது என உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் மற்றும் தீர்ப்பின் மூலம் அது சட்டமாக்கப்பட்டிருப்பதை நாட்டு மக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் தற்போது அறிந்துள்ளனர்.

இந்நிலையில் இதற்கு பின்னரும் யாரும் அதனை மறைத்து செயற்பட முடியாது. மேலும் கீதா குமாரசிங்க இரட்டைப் பிரஜாவுரிமையுடன் பாராளுமன்ற உறுப்பினராக செயற்படுவது சட்ட விரோதம் என தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் பிரகாரம் நீதிமன்றம் அவருக்கு தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாது எனத் தீர்ப்பளித்திருந்தது.

அத்துடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை உயர் நீதிமன்றமும் உறுதிப்படுத்தி தீர்ப்பளித்திருந்தது. இதன்மூலம் கீதா குமாரசிங்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போவதுடன் பாராளுமன்ற பதவிமூலம் அவர் பெற்றுக் கொண்ட அனைத்து செலவினங்களையும் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்நிலையில் இரட்டை பிரஜாவுரிமை வகிப்பவர்கள் தெரிந்து கொண்டே அதனை பாராளுமன்றத்திற்கு மறைத்தால் அவர்களுக்கு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மாத்திரம் போதாது. மாறாக அவ்வாறானவர்களுக்கு சிறைத் தண்டனையும் வழங்கப்படவேண்டும். ஏனெனில் இரட்டை பிரஜாவுரிமை வகிப்பவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாது என்ற உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை அறிந்து கொண்டே இவர்கள் பாராளுமன்றத்துக்கு மறைத்த குற்றம் இவர்கள் மீது சுமத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நாட்டை மீளக்கட்டியெழுப்பும் மாற்றத்தை நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டது

### பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பாரிய மாற்றத்தை சமகால நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமகால அரசாங்கம் பதவியேற்ற பொழுது இந்த நாடு பாரிய கடன் சுமையினால் பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருந்தது.

அந்த நிலைமையை மாற்றுவதற்கு சமகால நல்லாட்சி அரசாங்கம் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இதன் அடிப்படையில். வினைத்திறன் மிக்க பொருளாதார கொள்கைகள் அமுல்படுத்தப்பட்டன. இதன் மூலம் கடன் பளுவை கிரமமாக குறைக்கக்கூடிய விசேட பொறிமுறை ஒன்றும் உருவாக்கப்பட்டது என்று பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதற்கும் முறையான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டின் நிதி நிலைமை பலமடைந்துள்ளது.

வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த நாட்டை மீள கட்டியெழுப்பி, எழுச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடிந்ததாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பட்ஜெட் விருந்துபசாரம்









(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்றாவது வரவு-செலவு திட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவினால் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரின் வரவு- செலவுத் திட்ட உரை பிற்பகல் 3.10 - 5.45 வரை இடம்பெற்றது. 2018 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட உரைக்கு பின்னர் விருந்து உபசாரம் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. (இ-7)

## நன்கு திட்டமிடப்பட்ட பாதீடே சமர்ப்பிக்கப்பட்டது

### மகிந்த அமரவீர தெரிவிப்பு

எதிர்காலத்தை கருத்திற் கொண்டு உயரிய அளவில் திட்டமிடப்பட்ட வரவு- செலவுத் திட்டமே 2018 ஆம் ஆண்டுக்காக நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட தாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாதீடு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்ததோடு, மீண்டும் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் தான் திருப்தியடைவதாகவும் கூறினார். மேலும் கூட்டு எதிரணி நிதி அமைச்சரின் பாதீடு உரையை கவனிக்காது செயற்பட்டதால் அது தொடர்பான பூரண தெளிவின்றி பேசுவதாகவும் அவர் கூறினார்.

மகிந்த அணியினர் சைக்கிளில் வருகைதந்து அனைவருக்கும் ஒரு முன் மாதிரியை காட்டியுள்ளதாகவும், அதற்கமைய எதிர்காலத்தில் தானும் அதனை பரீட்சித்து பார்க்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

## ஐ.றோட் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்பில் வீதிக்கான ஒருங்கிணைந்த முதலீட்டு திட்டத்துக்கான (iRoad) ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் கடந்த போதும் இதுவரை எந்தவிதமான அபிவிருத்தி பணியும் முன்னெடுக்கப்படுவதாக தெரியவில்லை என சங்கானை பட்டின அபிவிருத்திச்சபை குற்றம் சாட்டியுள்ளது.

யாழ்.மாவட்டம் கடந்த 30 வருட கால போரினால் முற்றாக அழிவடைந்த பிரதேசம். இங்குள்ள கிராம வீதிகளில் 80 வீத வீதிகள் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளது. அடிக்கடி விபத்துக்கள் ஏற்படக்கூடிய வகையில் உள்ளது.

ஐ றோட் திட்டம் கடந்த வருடம் ஜூன் மாதம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் உள்ள பல வீதிகள் காப்பெற் வீதிகளாக புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஜி.பி.எஸ். அளவீடு, வீடியோ படம்மூலமான அளவீடு, வரைபடம் என்பன தயாரிக்கப்பட்டுள்ள போதும் இதுவரையில் மேற்படி திட்டத்தை முன்னெடுக்கக்கூடிய எந்தவிதமான நடவடிக்கையும் இடம்பெறுவதாக தெரியவில்லை.

வலி.மேற்கு பிரதேசத்தை பொறுத்தவரையில் மிக முக்கியமான 16 வீதிகள் இத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. இத் திட்டம் நடைபெறாத காரணத்தால் வேறு திட்டத்துக்கும் மாற்ற முடியாதுள்ளது.

மிக முக்கியமாக சங்கானை வைத்தியசாலைக்கு செல்லும் வீதிகளான ஆஸ்பத்திரி வீதி, மமுனாவ வீதி, தொட்டிலடி ஆஸ்பத்திரி முன் வீதி ஆகியன மிகவும் பழுதடைந்து காணப்படுகின்றன. அம்புலன்ஸ் கூட செல்ல முடியாதவாறு பாரிய குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

எனவே இவ் விடயத்தில் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நடைமுறைக்கு சாத்தியமான முறையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த வீதிகளைப் புனரமைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளுக்கு ஏற்ற பட்ஜெட்

## கூட்டு எதிரணி விமர்சனம்

(கொழும்பு)

குதிரையில் சவாரி செய்பவர் மாறினாலும் குதிரை மாறாது. நொண்டிக் குதிரை தொடர்ந்தும் சவாரியில் ஈடுபடுவதைப் போன்று அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் அமைந்திருப்பதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி விமர்சித்துள்ளது.

முன்னாள் நிதி அமைச்சர் கடந்த இரண்டு வருடங்களாக பொருளாதாரத்தை சிதைக்கும் வகையில் முன்வைத்த வரவு-செலவு த்திட்டத்தைப்போல, எந்தவொரு பொருளாதார முன்னேற்றங்களுக்கும் வழிவகுக்காத வகையில் 2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் அமைந்திருப்பதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த அவர், நாம் விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு ஏற்ற வகையிலேயே வரவு- செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது எனக் கூறினார். 2016ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது. நாணய நிதியத்திலிருந்து கடனைப் பெறுவதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றும் வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்புக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு வெளியே சென்று மங்கள சமரவீரவினால் வரவு-செலவுத்திட்டத்தை தயாரிக்க முடியாது.

அதிக வரிச்சுமையை சுமத்தும், மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தைவிட பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளை அதிகரித்துள் ளது.

நூற்றுக்கு நூறுவீதம் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைக்காது, கடன் சுமையை மேலும் அதிகரிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத்திட்டமாக இது அமைந்துள்ளது என ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். நிதி நெருக்கடி, வாழ்க்கைச் செலவு, வேலைவாய்ப்பு நெருக்கடி என்பவற்றுக்கு இந்த வரவு- செலவுத்திட்டத்தில் எந்த யோசனைகளும்இல்லை. அது மாத்திரமன்றி தேசிய வியாபாரத்துறை சீர்குலைந்துள்ளது. வெற்றியளிக்காத பொருளாதார சிக்கலை அதிகரிக்கும் வரவு- செலவுத்திட்டமாக இது அமைந்துள்ளது என்றும் தெரிவித்தார். (இ-7)

# இந்தோனேசியாவில் 19 இலங்கையர்கள் கைது

விசா நடைமுறையை மீறிய குற்றச்சாட்டின் பேரில் 19 இலங்கையர்கள் இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.


சுற்றுலாப் பயணிகளாக சென்ற அவர்கள், லிப்ப என்ற கிராமத்தில் தங்கியிருந்த போதே கைது செய்யப்பட்டனர்.

சுற்றுலாப் பயணிகளாக சென்ற அவர்கள், ஹோட்டலில் தங்குவதற்கு பதிலாக கடந்த மூன்று தினங்களாக வீடுகளில் தங்கியிருந்துள்ளனர்.

அதிகாரிகள் விசாரணை செய்த போது தாம் இந்தோனேசியாவில் நிரந்தர விசாவை பெற்றுள்ளதாக குறித்த இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் விசாரணைகளின் நிமித்தம் 19 இலங்கையர்களினதும் கடவுச்சீட்டுக்கள் இந்தோனேசிய அதிகாரிகளால் முடக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

# வெலிமடையில் 'போரா 12' உள்நாட்டு துப்பாக்கி மீட்பு



(கொழும்பு)

பண்டாரவளை - வெலிமடை பிரதான வீதியில் நேற்று அதிகாலை பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த பொலிஸார் அனுமதிப் பத்திரமற்ற 'போரா 12' ரக உள்நாட்டு துப்பாக்கியொன்றினை மீட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமாக வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ ஒன்றினை சோதனையிட்ட போதே இந்த துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த ஆட்டோவில் பயணித்த 03 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

# பொலித்தீன் பாவனை இன்றி தேர்தலை நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலின் போது கேகாலை மாவட்டத்தில் பொலித்தீன் பாவனை இன்றி தேர்தலை நடத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



கேகாலை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் மார்ஷல் பெரேரா தலைமையில், கேகாலை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய,

"பொலித்தீன் பாவனையால் நுளம்பு பெருகி வருகிறது. இதன் காரணத்தினாலேயே தேர்தல் காலங்களில் "பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எனவே, எதிர்வரும் தேர்தலின்போது கேகாலை மாவட்டத்தில் பொலித்தீன் பாவனை இன்றி பிரசாரங்களை நடத்துவதற்கு, அனைவராலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என அவர் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் துசிதா விஜயமான, சுஜித் சஞ்ஜய பெரேரா, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் எச்.பி.குலரத்ன, கேகாலை மாவட்ட செயலாளர் சந்திர சிறி பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1246

Search for people, places and things    Nagendram    Home


**விபூஷணன்**




**கோமதி**




**குணம்**




**வளர்மதி**




**மதுமிதா**

காலையில் எழுந்ததுமே எதுக்கு பெனியனும் சட்டையும் போட்டுக்கிறீங்க?

வெறும் வயிற்றில மாத்திரை சாப்பிடக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரு!

**கேசவன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் மக்களுக்கு நன்மை தரும் நல்லாட்சி அரசின் பட்ஜெட்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பு

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கும் நாட்டின் அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக்கும் வகையில் நல்லாட்சி அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு- செலவுத் திட்டம் அமைந்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளிட்ட தமிழ் மக்களின் தேவைகள் மற்றும் அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக்கும் வகையில் அரசாங்கம் வரவு- செலவுத் திட்டத்தை தயாரித்திருக்கிறது.

அரசாங்கம் முன்வைத்துள்ள இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கங்களை ஆழமாக அவதானிக்க வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டம் தமிழ் மக்களுக்கு ஓரளவு நன்மை பயக்கும் வகையில் அமைந்திருப்பதாகவும், இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமே அதன் பயனை மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

"நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புவது உள்ளிட்ட விடயங்களில் கூட்டமைப்பு முன்வைத்திருந்த யோசனைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

முன்னாள் போராளிகளுக்கான மறுவாழ்வு, வேலைவாய்ப்பு, மாற்றுத்திறனாளி பெண்களுக்கான வீடுகள், கணவனை இழந்த பெண்களுக்கான தேவைகள், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை கருத்திற்கொண்டு அவற்றுக்கான முதலீடுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் முன்வைத்துள்ள இந்த யோசனைகள் தமிழ் மக்களுக்கு ஓரளவு பயனளிக்கும் வகையில் அமைந்திருப்பதுடன், இவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

# தேக்கு வளர்ப்பு





உலகில் பல்வேறு விவசாய நாடுகளில் தேக்கு மரச் செய்கை பெருமளவில் பிரபல்யம் அடைந்துள்ளது. காடழித்தலின் பின் மீள் வனமாக்கல் செயற்பாட்டின் மூலம் அதிகமாக தேக்கு மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இதனால் தேக்கு மரங்களின் பயன்பாடும் அதிகரித்து காணப்படுகின்றன. இன்றைய காலத்தில் தளபாட உற்பத்தியில் அதிகளவு பயன்படுத்தும் மரங்களாக தேக்கு காணப்படுகின்றது.

இலங்கையில் தற்போது 31713 Ha நிலப்பரப்பில் தேக்குமரச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தளபாட உற்பத்தியில் ஏனைய மரங்களை விட தேக்குமரத் தண்டின் கவர்ச்சித் தன்மை, நிறம், வைரம், பாவனைக் காலம், மென்மைத் தன்மை நோய்த்தொற்று எதிர்ப்புத்திறன் ஆகிய இயல்புகளில் முதன்மை வகிக்கின்றது.

பொன் போன்ற மண்ணிற (Golden brown) நிறத்தை கொண்ட தேக்கு மரத் தண்டுகள் அதிகளவான கவர்ச்சியும் தரமும் கொண்டவை.

உலகில் பல நாடுகளில் தேக்கு செய்கை பரவலடைந்துள்ளது. இந்தியா, தாய்லாந்து, சீனா, கானா, பிரேசில், அமெரிக்கா போன்ற நாடுகளில் அதிகளவில் தேக்கு மரங்கள் காணப்படுகின்றன.

விஞ்ஞானப் பெயர் :- Tectonagrandis

### சாதகமான காலநிலை

பரந்த காலநிலை வீச்சினுள் வளரக்கூடிய இயல்பினைக் கொண்டுள்ளது.

அதிக ஒளிச்செறிவு வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கும் போசணைத் தன்மை குறைவான மண்ணிலும் சிறப்பாக வளரக்கூடியது.

அதிக உலர் வலயம் , ஈரவலயங்களிலும் சிறப்பாக வளரக்கூடியது.

### இனப்பெருக்க முறை

தேக்கு விதைகள் பொதுவாக முளைதிறன் குறைந்தவை . அவற்றின் உறங்கு நிலைகாலம் அதிகமாகும்.

பல்வேறு விதைப்பரிகரணங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே மேடையில் விதைகள் நடுகை செய்யப்படும்.

### தேக்குவிதைப் பரிகரணமுறை

- ❖ தரமான நோய்த் தாக்கமற்ற விதைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ❖ பொதுவாக மாசி மாதங்களிலே விதைகள் சேகரிக்கப்படும்.
- ❖ விதைகளை தரம் பிரித்தல் வேண்டும்.
- ❖ சிறிய அளவான விதைகள், நோய் தாக்கிய விதைகளை தவிர்த்தல் வேண்டும்.
- ❖ விதைகளை 3 நாட்கள் சுத்தமான தரையில் பரவிவிடல் வேண்டும்.
- ❖ பரவிய விதைகள் மீது நீர் தெளித்து 3 நாட்கள் ஊறவிடல் வேண்டும்.
- ❖ 3 நாட்கள் இடைவெளியில் காயவைத்து, ஊறவிட்டு தொடர்ச்சியாக 21 நாட்கள் மேற்கொள்ளப்படும்.
- ❖ இதன் போது விதைகளின் மேற்றோல் அகற்றப்படும்.
- ❖ விதைகளின் ஈரலிப்பு 10-15% வரும் வரை நன்கு காய விடல் வேண்டும்.
- ❖ இதன்போது விதைகளின் உறங்கு நிலை அகற்றப்படும்.
- ❖ பெறப்பட்ட விதைகளை மணல் நாற்று மேடைகளில் நடுகை செய்யப்படும்.
- ❖ 2 இலைகள் வரை வளர்ந்த நாற்றுக்களை பொதிகளில் மீள்நடுகை செய்யப்படும்.

நன்கு வளர்ந்த நாற்றுக்கள் நடுகைக்கு பயன்படுத்தப்படும்.

நாற்று மேடையில் விதைகள் நடுகை செய்யப்பட்டு தேக்கு நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது.

நாற்று மேடையில் 30-50 வீதமான வித்துக்களே முளை திறனைக் கொண்டிருக்கின்றன.

இதன் காரணமாக விதைகள் மூலம் தேக்கு நாற்றுக்கள் உற்பத்தி செய்வது மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

தற்போது தேக்கு பயிர்ச் செய்கையில் மேம்படுத்தப்பட்ட விதைகள் நடுகைப் பொருட்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

01 Ha நிலப்பரப்பில் நடுகை செய்வதற்கு 08Kg அளவில் விதைகள் தேவைப்படுகின்றன.

நடுகை இடைவெளி (2m X 2m / 3m X 3m / 4m X 4m /5m X 5m ) என பல்வேறுபட்ட இடைவெளிகளில் நடுகை செய்யப்படுகின்றது.

3m X 3m இடைவெளிகளில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 445மரங்கள் நடுகை செய்யப்படுகின்றது.

4m X 2m இடைவெளிகளில் ஒருஏக்கர் நிலப்பரப்பில் 500 மரங்கள் நடுகை செய்யப்படுகின்றது.

### நடுகைக் காலம்

மேமாதம் தொடக்கம் ஜூலை வரையான காலப் பகுதியிலே அதிகளவான மரங்கள் நடுகை செய்யப்படும்.

நடுகை செய்து 1-3 வருடங்கள் வரை அதிகளவான பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

களையகற்றல் தண்டில் மேலதிக கிளைகளை அகற்றல் ஆகிய பராமரிப்பு நடவடிக்கைகள் மூலம் நேரான வீரியமான தேக்கு தண்டுகளை பெற்றுக் கொள்ளலாம்.

40-50 வருட வயதுடைய மரங்கள் தளபாட தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றின் இலைகளில் காணப்படும் இரசாயனப் பதார்த்தம் ஏனைய பயிர்களின் வளர்ச்சியை பெருமளவில் பாதிப்படையச் செய்வதனால் ஏனைய பயிர்களுடன் கலப்புப் பயிராக செய்கை பண்ணப்படுவதில்லை.

நாம் அனைவரும் வேலிகளில் எல்லைப் பயிராகவும் நடுகை செய்து சிறந்ததொரு பொருளாதாரத்தை பெற்றுக் கொள்ளவும்.

தில்லை நடேசன்லிசோ
முள்ளியவளை விவசாயப் போதனாசிரியர்,
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்
அலுவலகம், முல்லைத்தீவு

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 134

## உணவு உற்பத்திக்கான ஆண்டாக 2018 பிரகடனம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

2018 இனை உணவுற்பத்திக்கான ஆண்டாக இலங்கை பிரகடனம் செய்திருக்கின்றது. இந்த பிரகடனத்தின் பின்னால் பல விடயங்கள் உட்பொதிந்திருக்கின்றன. குறிப்பாக உணவுற்பத்தி என்பது உழவர்களை மையப்படுத்தியிருந்தாலும் உணவுற்பத்தியில் இணைந்திருப்பவர்கள் அனைவரும் உழவுத்தொழிலுடன் ஒன்றிணைந்தவர்களே யாவர். எமது நாட்டுக்கான உணவுற்பத்தியினை பல மடங்கு பெருக்கும் நோக்குடன் இந்த உணவு

சாயம் சாத்தியமா இல்லையா என்பதல்ல வாதம். சேதன விவசாயத்தை நோக்கியதான எமது பயிர்ச்செய்கை நிச்சயமாக எமது வளமான சந்ததியை கட்டியெழுப்ப உதவும். உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளை நாம் பரிந்துரைத்தும் அதற்காக பயன்படுத்தக்கூடிய தேவையான உயிரிகள் போதுமானதாக கிடைக்கக் கூடியதாக இல்லையென்றே கூறலாம். இந்த நிலையை மாற்றியமைக்க எமது சூழல் தொகுதியில் காணப்படும் உயிரிகளை இனங்கண்டு அவற்றை பெருக்கி நாம் மண்ணை வளமாக்கவும் பீடைகளைக் கட்டுப்படுத்தவும்

யினை வீட்டுத்தோட்டம் என கொள்ளலாம். வீட்டுக்குத் தேவையான அனைத்தையும் நாம் உற்பத்தி செய்து பெற்றுக் கொள்ளுதல் இந்த வீட்டுத்தோட்டத்தினுள் பொதிந்திருக்கும் உண்மையாகும். இது சாத்தியமா? இல்லையா? என்பது பற்றிய வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பால் நாம் செய்ய முடியும் என முடிவெடுத்து விட்டால் முடியாதா என்ன? இதற்கெல்லாம் கூட்டம் கூட்டி அளவளாவி செய்யலாமா இல்லையா என முடிவெடுக்க வேண்டுமா?

உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு என்பதனை

நம்பலாம்.

உலக உணவு தாபனத்தின் தரவுகளின்படி குடும்ப விவசாயம் தான் தற்போது உலகளாவிய ரீதியில் பெருகிவரும் சனத்தொகைக்கு உணவளிக்கக்கூடியதாயிருக்கின்றது. இதன்படி 90 சதவீதத்திற்கு அதிகமாக பண்ணைகள் தனிப்பட்ட ஒருவரினாலேயோ அல்லது விவசாய குடும்பத்திலுள்ள உறுப்பினராலேயோ பராமரிக்கப்படுகின்றன. 70-80 சதவீதமான விளைச்சல் குடும்ப விவசாய முறையினாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. உலகில் உற்பத்தியாகப்படும் உணவின் 80 சதவீதமானவை குடும்ப விவசாயத்தினாலேயே உற்பத்தியாக்கப்படுகின்றன. பல்வகைத்தன்மையான பயிர்களை உற்பத்தி செய்வதன் மூலம் குடும்ப விவசாயமானது உணவு பாதுகாப்பிற்கு தனது முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றது. இந்த வகையில் பார்த்தால் எமது

ஏக்கராகவும் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. இந்த வகையில் பார்த்தால் எமது பிரதேசத்திலும் இது போன்ற அளவிலேயே எமது குடும்ப விவசாய பரப்பினளவும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 150

ற்பத்தி ஆண்டு பிரகடனம் உருக்கொள்கின்றது. 2018 பட்ஜெட் இதற்கு கட்டியங்கூறியதாக அமைந்திருக்கின்றது. விவசாயிகளுக்கான கடன் வசதிகள், விவசாய இயந்திரங்களை கொள்வனவு செய்வதில் வரிவிலக்கம் என பல நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன.

எமது நாடு ஒரு விவசாய நாடு. விவசாய உற்பத்திக்கு கொடுக்கும் முக்கியத்துவம் பின்னர் அதனுடனான தொழில்நுட்ப அபிவிருத்திக்கும் அது வித்திடும். உணவுற்பத்தியை அதிகரிக்க முடியுமாயின் நிச்சயமாக எமது நாடு உணவு ஏற்றுமதி செய்வதற்கும் இறக்குமதியை தவிர்ப்பதற்கும் அதனுடனிணைந்து தொழில்நுட்ப விருத்திக்கும் முன்னிற்கும். இதன்மூலம் வேலைவாய்ப்பினை அதிகரிப்பதற்கும் அந்தந்த மாகாணங்களின் மொத்த உள்ளூர் உற்பத்தி வெளிநாட்டு சந்தையை மையப்படுத்தி அதிகரிக்கும். எமது பொருட்களாக உலகசந்தையில் வலம் வரக்கூடிய பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்து அதிலிருந்து எமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

விவசாய உற்பத்தியில் கணிசமானளவுக்கு அசேதன இரசாயனங்களின் பாவனை மண்ணையும், மக்களையும் இன்னும் நன்மை தரும் உயிரினங்களையும் வெகுவாக பாதித்திருக்கின்றன. இந் நிலையில் இவற்றிலிருந்து எமது மண்ணையும் குறிப்பாக சூழலையும் காப்பாற்ற வேண்டுமாயின் நாம் அதற்கு மாற்று வழிகளை கண்டறிந்தாக வேண்டும். இந் நிலையில் சேதன விவசாயத்தினை நோக்கிய நகர்வு தேசத்தின் விருத்திக்கு நல்லதொரு சகுனமென்றே கூறலாம். சேதன விவ

பயன்படுத்த முடியும். இதனை மையப்படுத்தி உயிருரங்கள் மற்றும் உயிரியல் பீடைநாசினிகளுக்

வீடு சார்ந்த பிரச்சினையாக உள்வாங்கினால் அதற்கான தீர்வினை கண்டு கொள்ளல் இலகுவான

பிரதேசத்திலும் குடும்ப விவசாயத்தின் ஆதிக்கமே மேலோங்கியிருக்கின்றது. உலக தரவுகளின்



கான உலகளாவிய மாநாடு எதிர்வரும் 26-28 ஆம் திகதிகளில் உலக நீர் முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது. முதன்முறையாக நடைபெறும் உலகளாவிய கருத்தரங்கு ஆகையால் அதனிலிருந்து பலத்த எதிர்பார்ப்புக்களுண்டு.

உணவுற்பத்தியின் இன்னொரு அடித்தளமாகவே வீட்டுத்தோட்டத்தை காண்கிறோம். வீட்டுத்தோட்டம் என்பது வீடும் வீடு சார்ந்த நிலப்பரப்பில் வளர்க்கப்படும் தாவரங்கள் அல்லது பயிர்களைக் குறிக்கும். இங்கே ஆண்டுப்பயிர்கள், ஈராண்டு மற்றும் பல்லாண்டுப் பயிர்களும் உள்ளடக்கம். வீடு அமைந்திருக்கும் நிலப்பரப்பில் அமைக்கப்படும் அல்லது வளர்க்கப்படும் தாவரங்களடங்கிய தொகுதி

தாகும். நஞ்சற்ற உலகம் மற்றும் நஞ்சற்ற தேசம் என்பதனை கொள்கையாக கொண்டால் இந்த அவல நிலைக்கு நாம் அனைவரும் இணைந்தே முற்றுப்புள்ளி வைக்கலாம். அந்த வகையில் வீட்டுத் தோட்டங்கள் இணைந்த கிராமத்தை வளர்த்தெடுப்பதே இங்கு முன்வைக்கப்பட்டுள்ள முன் முயற்சியாகும். அந்த வகையில் பத்தாயிரம் பசுமைக் கிராமங்கள் என்பது நல்லமுயற்சியாக இருக்கும் அதேநேரத்தில் கிராமத்தை நோக்கிய தொழில்நுட்பத்தின் வருகையும் தொழிற்சாலைகளை கிராமம் நோக்கி நகர்த்து அங்குள்ளவர்களுக்கான வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டால் இவையனைத்தும் சாத்தியப்படும் காலம் உண்டு என

படி குடும்ப விவசாயத்தில் சீனா 35 சதவீதமும், இந்தியா 24 சதவீதமும் ஏனைய ஆசிய நாடுகள் 15 சதவீதமும் மிகுதியான 27 சதவீதமானவை மற்றைய நாடுகளாகவும் இருக்கின்றன. இவற்றுள் 72 சதவீதமான குடும்ப விவசாயத்தின் விஸ்தீரணமாக ஒரு கெக்டருக்கு குறைவானதாகவும் 6 சதவீதமானவை 5 ஹெக்டயருக்கு அதிகமானவையாகவும் மிகுதியான 22 சதவீதமானவை மற்றைய அளவுகளைக் கொண்டிருப்பதாகவும் கணிக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடத்தக்க விடயமென்னவெனில் 57 சதவீதமான குடும்ப விவசாய பரப்பின் அளவு 1.0 - 1.5 ஏக்கராகவும் 47 சதவீத மான இந்திய குடும்ப விவசாய பரப்பின் அளவு 1.0-1.5

அமைந்திருக்கின்றதனை காணலாம். மேலும் குடும்ப விவசாயத்தின் மூலமாக உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் எனவும், இதன் மூலம் சமூகத்தை பாதுகாக்கும் சட்டதிட்டங்களை அமுல்படுத்த முடியும் எனவும் மேலும் சமூகத்தினுடைய நலனை மேம்படுத்த முடியும் எனவும் கருதப்படுகின்றது. விவசாயத்தைப் பொறுத்த வரையில் உலகளாவிய நீர் தேவையில் 70 சதவீதமானவை விவசாயத்திற்காகவே பயன்படுத்தப்படுகின்றது. மேலும் உயிர் பல்வகைத்தன்மையினை விவசாய செய்கையின் மூலமே பாதுகாக்கின்றதென்பதனையும் கண்டறிந்துள்ளனர். மேலும் சூழல் தொகுதியினுடைய சேவைகளானவை விவசாயத்தின் மூலமாகவே கிடைக்கின்றதென்பதனையும் கண்டறிந்துள்ளனர். எனவே விவசாய செய்கையினை மேற்குறிப்பிட்ட பயன்களைப் பெறும் வகையில் நாம் மாற்றியமைத்து எமது சூழல் தொகுதியினை வளப்படுத்தி உணவுற்பத்தியில் நாம் தன்னிறைவடைய முயற்சிக்க வேண்டும். குடும்ப விவசாயத்தின் தன்மை எமக்கு முழுமையாக பொருந்துவதனால் அதனது பயன்களையும் நாம் பெற்றுக் கொள்ள முடியும். உலக உணவு தாபனத்தினால் வழங்கப்படும் தகவல்கள் அனைத்தும் எமக்கு பயனுள்ளதாக இருக்கின்றதென்பதனை உணர்ந்து அவற்றை பயன்படுத்த முயற்சி செய்வோம்.

முயற்சிதானே வாழ்க்கையின் வெற்றி. நாம் அனைவரும் இணைந்து இந்த வெற்றிக்காக பாடுபடுவோம். எமது தேசத்தின் உணவுற்பத்தியை அதிகரிக்க அனைவரும் ஒன்றிணைந்தால் நாம் நினைத்ததை அடையலாம். தேசமும் வளமானதாகும்.




# முக்திக்கு வித்து

பாண்டவருக்கும் துரியோதனாதியர்க்கும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீரர்களும் படைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தனர். கௌரவர் படைக்கு அன்று கர்ணன் படையை நடத்தத் தயாரானான். இந்தச் செய்தியைக் கண்ணன் அறிந்தான். பாண்டவர் தாயான குந்திதேவியைத் தேடிச் சென்றான்.

அவளின் நலம் விசாரித்துப் பின் பேசினான். "அத்தை, உங்களின் மூத்த புதல்வனைப் பற்றிய செய்தி ஏதேனும் தெரிந்ததா?"

"அதை இப்போது ஏன் நினைவுபடுத்துகிறாய் கண்ணா?"

"காரணம் இருக்கிறது. உங்கள் மூத்த மகன்தான் அந்தக் கர்ணன். இதைத் தெரிந்து கொண்டுதான் தங்களிடம் சொல்ல வந்தேன். நீங்களே இதை நேரில் சென்று பரீட்சித்துப் பாருங்கள்" என்றான் கபடமாக.

உடனே தன் மூத்த மகனைக் காணப் புறப்பட்டு விட்டாள் குந்திதேவி.

"சற்று இருங்கள் அத்தை. அவன்தான் தங்களின் மூத்த மகன் என்று தெரிந்த பின் அவனை பாண்டவர் பக்கம் வந்து சேர்ந்து விடச் சொல்லுங்கள். அவன் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்றால் இரண்டு வரங்களையாவது வாங்கி வாருங்கள்."

"வரமா? நான் கேட்பதா?" என்று தயங்கினாள் குந்தி.

"ஆம் அத்தை. கர்ணன் சுத்த வீரன். அவனுக்கு இணையானவன் அர்ஜுனன் ஒருவன்தான். எனவே அர்ஜுனன் தவிர வேறு யாருடனும் போரிடக் கூடாது. அத்துடன் அவனிடமுள்ள நாகாஸ்திரத்தை அர்ஜுனன் மீது ஒருமுறைக்கு மேல் மறுமுறை ஏவக் கூடாது. என்ற இரு வரங்களை மட்டும் பெற்று வாருங்கள்" என்றான்.

குந்தியும் சம்மதித்தாள். மகனைக் காண ஆவலுடன் சென்றாள்.

கர்ணன் அவளை வணங்கி வரவேற்றான். அவள் தன்னை மகனே என அழைத்தது கேட்டு மகிழ்ந்தான். தன்னிடமிருந்த பட்டுச் சேலையைக் காட்டி குந்தி அதைத் தன் மீது போர்த்துக் கொண்டு அழுததைக் கண்டு அவளே தன் தாய் எனக் கண்டு கொண்டான். மனம் மிக மகிழ்ந்தான்.வெகுநேரம் கடந்தபின் குந்தி,

"மகனே,நீ பாண்டவருக்கு மூத்தவன். குருசேத்திரப் போரில் பாண்டவர் வெற்றி பெற்றபின் நீயே இந்த நாட்டுக்கு மன்னனாக முடிசூட வேண்டியவன். கௌரவரை விட்டு பாண்டவர் பக்கம் வந்து விடு.உன் தம்பிமாரான தருமன் முதலானோர் மிகவும் மகிழ்வார்கள்" என்று மெதுவாக கேட்டுக் கொண்டாள்.



அவள் மடியில் படுத்திருந்த கர்ணன், விருட்டென எழுந்தான். "தாயே, என்ன வார்த்தையம்மா கூறினீர்கள், துரியோதனன் என் உயிரினும் மேலானவன். மானம் காத்த மாமனிதன். இன்னுயிரினும் மானம் மேலானதன்றோ மன்னனுக்கு? நானோ நேற்றுவரை அநாதையாக இருந்தவன். தேரோட்டி மகன் நான்.மன்னர் சபையில் என் மானம் காத்து என்னை அங்க தேசத்தின் மன்னன் என்று அனைவரிடமும் கூறி என்னைத் தலை நிமிர வைத்தவன் அல்லவா அம்மா அவன்? அவனை எப்படிப் பிரிவேன். என் உயிர் கூட அவனுக்குத் தானே சொந்தம்?"

"கர்ணா, உன் உடன் பிறந்தவருடன் சேர்ந்து இருக்க உனக்கு விருப்பமில்லையா?"

"அம்மா, இதைவிடுத்து வேறு என்ன வேண்டுமானாலும் தருகிறேன் கேளுங்கள். ஆனால் நன்றி மறக்கும் செயலை மட்டும் செய்யச் சொல்லாதீர்கள். என்னை மன்னித்து விடுங்கள் அம்மா. துரியோதனனின் அன்பை நான் மறந்தால் எனக்குப் பெரும் பாவம் மட்டுமல்ல பழியும் வந்து சேரும்"

"அப்படியானால் நீ அர்ஜுனனைத் தவிர வேறு யாரையும் கொல்லக் கூடாது. நாகாஸ்திரத்தை அர்ஜுனன் மீது ஒருமுறைக்கு மேல் பிரயோகிக்கக் கூடாது.இந்த இரண்டு வரங்களைத் தருவாயா?"

"நிச்சயமாகத் தருகிறேன். தாங்களும் எனக்கொரு வரம் தரவேண்டும்."

"கேள் மகனே"

"போர்க்களத்தில் நான் இறந்து விட்டால் தாங்கள் என்னை மடியில் வைத்து மகனே என்று கூவி அழ வேண்டும்.இந்த உலகுக்கெல்லாம் நான் தங்கள் மகன் என்ற உண்மையைப் பறைசாற்றவேண்டும். நான் இறக்கும் வரை இந்த உண்மையை யாரிடமும் தெரிவிக்கக் கூடாது. இந்த வரத்தை எனக்குத் தாங்கள் தரவேண்டும் அம்மா"

கண்களில் கண்ணீருடன் குந்தி "அப்படியே செய்கிறேன் கர்ணா" என்றபடியே திரும்பி இருப்பிடம் வந்து சேர்ந்தாள்.

தம்பியரானாலும் தாயானாலும் கர்ணனுக்கு துரியோதனனின் நன்றிக்கடனுக்கு முன் எதுவும் முக்கியமல்ல.

இவனது இரண்டு முக்கியமான செயல்களாலேயே இறைவனின் அன்புக்குப் பாத்திரமானான்.

இவனது நன்றி மறவாமை. மற்றொன்று அள்ளிக் கொடுக்கும் வள்ளல் தன்மை.

இந்தப் பண்புகளாலேயே இதிகாசத்தில் இவன் போற்றப்படுகிறான். வள்ளுவரின் குறளுக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறான்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

கர்ணனின் முக்திக்கு அவனது நன்றி மறவாத் தன்மையே வித்தாக இருந்தது. குழந்தைகளே நாமும் கர்ணன் போன்று நன்றி மறவாது இருப்போம்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖1831- அடிமைப் புரட்சியில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்ட நாட் டர்னர் வேர்ஜீனியாவில் தூக்கிலிடப்பட்டான்.
- ❖1865- பூட்டா ஆற்றின் கிழக்குப் பகுதிகளை பூட்டான் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்குக் கொடுத்தது.
- ❖1889- வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் 42வது மாநிலமாகச் இணைக்கப்பட்டது.
- ❖1918- ஜோசப் பிதசூத்ஸ்கி வார்சாவுக்குத் திரும்பி போலந்தின் உயர் இராணுவப் பதவியைப் பெற்றான். போலந்து விடுதலை பெற்றது.
- ❖1919- இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.
- ❖1930-அல்பேர்ட் ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர் தமது கண்டுபிடிப்பான ஐன்ஸ்டைன் குளிர்சாதனப்பெட்டிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- ❖1933- யாழ்.பொது நூல் நிலையம் அமைக்கப்பட்டது.
- ❖1942- இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனி பிரான்ஸ் மீதான தனது முற்றுகையை முடித்தது.
- ❖1960- தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நியோடின் டியெம் மீதான இராணுவப் புரட்சி தோல்வியில் முடிந்தது.
- ❖1968- மாலைதீவுகளில் இரண்டாவது குடியரசு அறிவிக்கப்பட்டது.
- ❖1975- அவுஸ்திரேலியப் பிரதமர் கஃப் விட்லம் தலைமையிலான அரசை அதன் ஆளுநர் கலைத்தார்.
- ❖1992- இங்கிலாந்து திருச்சபை பெண்களையும் சமய குருக்களாக சேர்ப்பதற்கு முடிவெடுத்தது.

### பிறப்புகள்

- ❖1847- பிரெட்ரிக் வில்லியம் ஸ்டீவென்ஸ், பிரித்தானியக் கட்டடக் கலைஞர் (இ. 1900)
- ❖1888- அபுல் கலாம் ஆசாத், இந்திய அரசியல்வாதி (இ. 1958)
- ❖1888- ஆச்சார்ய கிருபளானி, இந்திய அரசியல்வாதி (இ. 1982)
- ❖1898- கி. ஆ. பெ. விசுவநாதம், தமிழறிஞர் (இ. 1994)
- ❖1917- மரகதம் சந்திரசேகர், இந்திய அரசியல்வாதி (இ. 2001)
- ❖1922- கர்ட் வானெகெட், அமெரிக்க எழுத்தாளர் (இ. 2007)
- ❖1937- ப. ஆப்டீன், ஈழத்து எழுத்தாளர்
- ❖1937- இசுரீபன் லூவிசு, கனடிய அரசியல்வாதி
- ❖1945- டானியல் ஒர்டேகா, நிக்கராகுவா அரசுத்தலைவர்
- ❖1957- மிசேல் டி கிரெட்சர், இலங்கை-அவுஸ்திரேலியப் புதின எழுத்தாளர்
- ❖1974- லியோனார்டோ டிகாப்ரியோ, அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

- ❖1993- கப்டன் மயூரன், தமிழீழ விடுதலைப் புலிப் போராளி (பி. 1970)
- ❖1995- சுந்தா, தமிழக எழுத்தாளர், கல்கியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் (பி. 1913)
- ❖2004- யாசிர் அரஃபாத், பாலஸ்தீனத் தலைவர், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1929)
- ❖2005-பீட்டர் டிரக்கர், ஆஸ்திரிய-அமெரிக்க எழுத்தாளர் (பி. 1909)

### சிறப்பு நாள்

- ❖ குழந்தைகள் நாள் (குரோவாசியா)
- ❖ நினைவுறுத்தும் நாள்
- ❖ விடுதலை நாள் (அங்கோலா, 1975)
- ❖ தேசிய கல்வி தினம் (இந்தியா)
- ❖ குடியரசு நாள் (மாலைதீவுகள்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார்மடம் | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 160 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 90 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 450 | 600 | 600 | 400 |
| தக்காளி | 100 | 100 | 90 | 120 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 20 | 20 | 50 | 50 | 60 |
| கோவா | 150 | 120 | 80 | 120 | 140 | 120 | 120 |
| கரட் | 120 | 80 | 80 | 100 | 80 | 200 | 200 |
| பூசணி | 80 | 100 | 60 | 50 | 50 | 80 | 80 |
| புடோல் | 120 | 100 | 70 | 80 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 100 | 60 | 80 | 70 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 250 | 300 | 300 | 350 | 100 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 170 | 200 | 150 | 200 | 160 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 200 | 400 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 | 100 | 100 | 160 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 70 | 80 | 80 |
| பயற்றங்காய் | 200 | 140 | 170 | 140 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 250 | 170 | 200 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 60 | 120 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 300 | 250 | 250 | 280 | 260 | 300 | 320 |
| முருங்கைக்காய் | 300 | 100 | 110 | 100 | 400 | 250 | 100 |
| போஞ்சி | 250 | 200 | 100 | 120 | 140 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 100 | — | 200 | 160 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 30 | 40 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 60 | 150 | 120 | 100 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 75 | 90 | 90 | 60-100 |
| இராசவள்ளி | — | — | 200 | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | 250 | — | 200 | — | 200 |
| முள்ளங்கி | 80 | — | 30 | 80 | 90 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | — | 30 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | — | 15 | 20 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | — | — | 100 | 60 | 80 |

உலகம் நீங்கள் கொடுப்பதை மணலில் எழுதுகிறது. நீங்கள் பெறுவதை அது இரும்புக் கரங்களால் எழுதுகிறது. - யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இதிகாசங்களின் படைப்பு மனிதர்களுக்கான படிப்பு

திருக்குறளைத் தந்த வள்ளுவன் சொல்லாத விடயம் எதுவும் இல்லை எனலாம்.

அந்தளவுக்கு திருக்குறள் எல்லா விடயங்கள் பற்றியும் பேசுகின்றது. திருக்குறளைக் கற்றறிந்த ஒருவர் அதன் வழி நடந்தால் அதுவே மானிடத்தின் வரைவிலக்கணம் எனலாம்.

தெய்வப் புலவன் திருவள்ளுவர் தமிழ் மொழியில் திருக்குறளைத் தந்தது போல வேறு பல மொழிகளிலும் காப்பியங்கள், இதிகாசங்கள் தோன்றின. இவை அனைத்தும் மனித வாழ்வைச் செப்பனிடுவதற்கானது.

எப்படி வாழ வேண்டும் என்பதைக் காட்டுவது மட்டுமல்ல; எப்படி வாழக்கூடாது என்பதை எடுத்துரைப்பதும் இதிகாசங்கள் மற்றும் காப்பியங்களின் நோக்கமாகும்.

மகாபாரதம், இராமாயணம் என்ற இதிகாசங்கள் சமஸ்கிருத மொழியில் தோன்றியவை. அவற்றின் கனதி அறிந்து அவை தமிழிலும் ஆக்கப்பட்டன.

இராமாயணம் என்ற இதிகாசத்தில் பாட்டுடைத் தலைவனாக இராமபிரான் காட்டப்படுகிறார்.

இங்குதான் பாட்டுடைத் தலைவன் இராமன் எதையும் விட்டுக் கொடுத்ததால் மிகப் பெரும் துன்பத்தை அனுபவித்தான் என்ற உண்மைத் தத்துவம் விளக்கப்படுகின்றது.

இராமாயணம் என்ற இதிகாசத்தில் இராவணன் அறத்தை மீறியதால் அழிந்தான். இராமன் அளவுக்கதிகமாக விட்டுக் கொடுத்ததால் நீண்ட நெடுந்துயரை வலிந்து பெற்றுக் கொண்டான்.

இராமா! உன் தந்தை உன்னைக் காடேகுமாறு கூறினார் என்று கைகேயி சொல்கிறார்.

இச்சந்தர்ப்பத்தில் ஏன் தாயே! நான் காடு செல்ல வேண்டும்? எதற்காக அப்படி என் தந்தை உத்தரவிட்டார். அவரை நேரில் சந்தித்து என்னைக் காட்டுக்கு அனுப்புவதன் நோக்கம் என்ன என்று வினவ வேண்டும். இப்படித்தான் இராமன் கைகேயியிடம் கூறியிருக்க வேண்டும். ஆனால் அதனை இராமன் சொல்லத் தவறினான்.

தாயே! என் தந்தை என்ன உத்தரவிட்டாலும் நான் காடு செல்லத் தயங்கேன் என்று கூறுகிறான். இது கெட்டவர் சிந்தைக்குச் சிறப்பு பூசை செய்வது போன்றது.

கைகேயிக்கு வரம் கொடுத்தது தசரதன். தேவையாயின் தசரதன் காடு செல்வது பொருத்தமேயன்றி இராமன் காடு செல்வது பொருத்தமன்று.

தவிர தசரதனுக்கு இராமன் புத்திரனாயினும் சீதைக்கு அவன் கணவன். ஆக திருமண பந்தத்தில் இணைந்து விட்ட பின்பு இராமனைக் காடேகும்படி கட்டளையிடுவது தந்தை என்ற ஸ்தானத்துக்கோ மன்னன் என்ற மாட்சிக்கோ அழகன்று.

எனவே, காடு செல் என்ற தசரதனின் உத்தரவு கைகேயி ஊடாக வந்தபோது அதனைக் கடுமையாக இராமன் எதிர்த்திருக்க வேண்டும்.

அதனை இராமன் செய்யத் தவறியதால், காடு செல்ல நேரிட்டது. சீதையை இராவணன் கவர்ந்தான்; வாலியை வதம் செய்து தீராப் பழியை இராமபிரான் தனதாக்கினான். ஏன் தந்தை தசரதன் கூட மரணித்துப் போகும் அளவில் நிலைமை ஆயிற்று.

இவற்றையெல்லாம் வகுத்து, தொகுத்து பார்க்கும்போது இராமனின் விட்டுக்கொடுப்புத்தான் நடந்த அத்தனை துன்பங்களுக்கும் காரணம் என்பதைக் கண்டறிய முடியும்.

ஆக, விட்டுக் கொடுப்பதற்கு ஓர் எல்லையுண்டு. நாங்கள் தோற்றுவிட்டோம். போரில் எல்லாவற்றையும் இழந்து விட்டோம்.

ஆகையால் தருவதைப்பெற்றுக் கொள்வோம் என்று நினைப்பது தொடர்ந்தும் துன்பத்தைத் தருமேயன்றி வேறில்லை என்பதை உணர்தல் அறிவுடைமையாகும்.

### மர்மமான முறையில் உயிரிழந்த

## தாயின் சடலத்துடன் 2 நாட்கள் தனிமையில் இருந்த குழந்தை

(கொழும்பு)

ஒரு பிள்ளையின் தாயான 22 வயதுடைய இளம் பெண் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொட, மாதம்பாகம, இடம்தொட்ட பிரதேசத்தில் வசிக்கும் விமுசிகா தில்கானி என்ற இளம் தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் மீன்பிடி தொழிலில் ஈடுபடக்கூடியவர் என்பதுடன், கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி அவர் மீன்பிடி நடவடிக்கைக்காக காலி மீன்பிடி துறைமுகத்தில் இருந்து ஆழ்கடல் மீன்பிடிக்காக சென்றுள்ளார்.

கணவர் வீட்டில் இல்லாத காரணத்தால் தனது தாயின் வீட்டிற்கு சென்று சிறிது நாட்கள் தங்கியிருந்துவிட்டு கடந்த 7ஆம் திகதி மாலை 6 மணியளவில் மீண்டும் வீடு திரும்பிய பெண், தாயிடம் தொலைபேசியூடாக வீடு வந்து சேர்ந்ததை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்பின்னர் கடந்த புதன் மற்றும் வியாழன் (9ஆம் திகதிகளில்) குறித்த பெண்ணிடம் இருந்து எவ்வித தொலைபேசி அழைப்புக்களும் கிடைக்காத காரணத்தால், கடந்த 9ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் அந்தப் பெண்ணின் வீட்டிற்கு சென்றுள்ளார்.

மூடப்பட்டிருந்த கதவை திறந்து கொண்டு உள்ளே சென்று பார்த்தபோது ஒன்றரை வயதுடைய பெண் குழந்தை உயிரிழந்த பெண்ணுக்கு அருகில் உள்ள கட்டிலில் இருப்பதை கண்ட உயிரிழந்த பெண்ணின் தாய் அதிர்ச்சியடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொட பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் மூக்கில் இருந்து இரத்தம் வடிந்துள்ள அதேவேளை வேறு எவ்வித காயங்களும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வெலிக்கடை துப்பாக்கிச்சூடு இழப்பீடு கிடைக்காதவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத் தில் உயிரிழந்த மற்றும் காயமடைநதவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கப்படாதிருந்தால் அறிவிக்குமாறு சிறைச்சாலை மறு சீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் 10 பேருக்கும் காயமடைந்த ஐவருக்கும் நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

2012ஆம்ஆண்டுவெலிக்கடை சிறைச்சாலையில் இடம் பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்த கைதி ஒருவருக்காக 20 இலட்சம் ரூபாவும் காயமடைந்த ஒருவருக்கு 5 இலட்சம் ரூபாவும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைவாக இந்த இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மின்சார நிலைய வீதி, Grand Bazzar, விக்ரோறியா வீதி, பருத்தித்துறை வீதியில் ஒரு பகுதி, பூதர்மடம், கோப்பாய் சந்தி, இருபாலை, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, இராமலிங்கம் சந்தி, கோப்பாய் பொலிஸ், பாற்பண்ணை திருநெல்வேலி, GPS றோட், திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, இராமலிங்கம் சந்தியிலிருந்து முடமாவடி கிளிகடை வரை, பூங்கனிச் சோலை, நவாலி, மூத்த விநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அட்டகிரி, வேலக்கை, அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி, கச்சாய் வீதி, சாவகச்சேரி நகரம், நுணாவில், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதி, வேலணைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி, வல்லான், ஆலடி சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்குடுதீவு கடற்படை முகாம், ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, சிறி நதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, ரொப்பாஸ் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில கொக்காவில் இராணுவ முகாம் I, கொக்காவில் இராணுவமுகாம் II ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பஸார் வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, இலுப்பையடி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)


## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கர்ப்ப காலத்தில் மெருகேற்று கர்மங்கள் எவை?**

அளவான உணவு, அளவான தேகப்பயிற்சி, அளவான ஓய்வு ஆகியவை அவசியமாகும். கோபம், சோகம், மனச்சோர்வு ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். பயம் தரும் காட்சிகளைக் காண்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் ஒரு சிறு பயம் கூட வயிற்றில் இருக்கும் சிசுவைப் பாதிக்க வாய்ப்புள்ளது.

யாரையும் இம்சிக்கக் கூடாது. பூனையை அடிப்பது, பிற ஜீவராசிகளைத் துன்புறுத்துவது போன்றவற்றைச் செய்யக் கூடாது. எந்த நேரமும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும். வாசற்படியில் உட்காரக் கூடாது. மாலை வேளைகளில் துவைக்கவோ, குளிக்கவோ கூடாது. சாய்ந்தே படுக்க வேண்டும். திரும்பிப் படுக்க வேண்டும் என்றால் எழுந்து உட்கார்ந்து திரும்பிப் படுக்க வேண்டும். படுத்து உருளக் கூடாது. மாலை மற்றும் இரவு வேளைகளில் வெளியில் போகக் கூடாது. (தொடரும்)




திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

இந்த வேங்கடாசலபதி ஒரு சுயம்பு. தன்னைத் தரிசிப்பவரை அந்த தயாளன் ஆசிர்வதிக்கிறான், ஆற்றுப்படுத்துகிறான். ஆனந்தப்படுத்துகிறான்.

அவனைக் கண்ட மாத்திரத்தில் யுகம் யுகமாய் உடன் இருந்து வருபவனைப் போலக் காண்பவர் உணர்கிறார். கடவுள் தன்னிடம் கனிமொழியில் பேசியதாகக் களிக்கிறார்.

அது தோற்ற மாயை அன்று. எண்ண மாயையும் அன்று. உணரப்பட்ட உண்மை. இந்த ஒரு காரணத்துக்காகவே மக்கள் மறுபடி மறுபடி அந்தப் பாலகனைத் தரிசிக்க மலையேறுகிறார்கள். எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே ஆவோம். உனக்கே நாம் ஆட்செய்வோம் என்று உருகுகிறார்கள். (தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உனக்குள் இருக்கும் தெய்வத் தன்மையை வெளியே காட்ட வேண்டும். அவ்வாறு செய்தால்,உன்னைச் சுற்றியுள்ள எல்லாம் இசைவாக ஒழுங்குபடுத்தப்படும்.
- நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும் உன்னிடம் இருக்கும் வரை அனைத்தும் முன்னேற்றமடையும்.
- மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரினையும் வழிபடுங்கள்.
- ஆசைக்கும் கோபத்திற்கும் அடிமையாய் இருந்தால், உண்மையான சுதந்திரத்தின் இன்பத்தை ஒருவனால் உய்த்துணர முடியாது.
- எப்போதும் இனிமையோடும், புன்னகையோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.
- சுயநலமே ஒழுக்கக்கேடு, சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுதான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம்.
- உங்களுடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுங்கள், நமக்குத் தேவை, இரும்பைப் போன்ற தசைகளும், எஃகைப் போன்ற நரம்புகளும் தாம். காலமெல்லாம் அழுதுகொண்டிருந்தது போதும், இனி அழுகை என்ற பேச்சே இருக்கக் கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

# மைலோ கிண்ண உதைபந்தாட்டம்
# வலைப்பாடு ஜெகமீட்பர் சம்பியன்







இரண்டாம் பாதியில் அதிகரித்த வேகத்தில் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து, மைலோ கிண்ணத்தில், கிளிநொச்சி மாவட்ட அணி முதன்முறையாக சாதித்து என்ற பெருமையுடன் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.







நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையிலான மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தின.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள லீக் அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்று, சுப்பர் - 20 சுற்றுக்கு 20 அணிகள் தெரிவு செய்யப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 6 அணிகளும், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 14 அணிகளும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டன. இதனைவிட, கடந்த முறை மைலோ கிண்ணப் போட்டிகளில் அரையிறுதி வரையில் முன்னேறிய அணிகளும், இதனுடன் இணைந்து, இம்முறை மாவட்ட மட்டச் சுற்றில் 23 அணிகள் விளையாடின.

மாவட்டச் சுற்றிலிருந்து, அரையிறுதி ஆட்டங்களுக்கு ஆனைக்கோட்டை யூனியன், பாசையூர் சென்.அன்ரனீஸ், வலைபபாடு ஜெகமீட்பர், வேலணை துறையூர் ஐயனார் அணி ஆகியன நுழைந்தன. அரையிறுதி ஆட்டங்களில், ஆனைக்கோட்டை யூனியன் அணி 1:0 என்ற கோல்கள் கணக்கில் சென்.அன்ரனீஸ் அணியையும், ஜெகமீட்பர் அணி, பனால்ட்டி உதையில் 5:4 என்ற கோல்கள் கணக்கில் துறையூர் ஐயனார் அணியையும் வென்றன.

தொடர்ந்து, இறுதிப்போட்டி 9 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

போட்டி தொடங்கி 4 ஆவது நிமிடத்தில் ஜெகமீட்பர் அணியின், குலேந்திரன் கோல் கம்பத்துக்கு மேலால் அடித்து, சந்தர்ப்பத்தை தவறவிட்டார். 5 ஆவது நிமிடத்தில் யூனியன் அணியின், ஜ.பிறினோராஜ், அருமையான கோல்வாய்ப்பொன்றை வீணடித்தார்.

தொடர்ந்து, 12 ஆவது நிமிடத்திலும் அவர் அதே தவறைச் செய்து, ஏமாற்றினார். போட்டியின் 13 ஆவது நிமிடத்தில் யூனியன் அணியின் ஸ்ரீபன்ராஜ் கொடுத்த பந்தை, தில்லைகாந்தன் வெளியில் அடித்து வீணாக்கினார். ஆட்டத்தை கைக்குள் வைத்திருந்த யூனியன் அணிக்கு 14 ஆவது நிமிடத்தில் பயன் கிடைத்தது. யூனியன் அணியின், தனுஜன் அசத்தலான கோல் ஒன்றை அடித்தார்.

17 ஆவது நிமிடத்தில் யூனியன் அணியின், நிரோஜனுக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. 20 ஆவது நிமிடத்தில் ஜெகமீட்பர் அணிக்கு கிடைத்த வாய்ப்பை, அவ்வணியின், கிருஸ்துராஜ், கோல் கம்பத்துக்கு மேலால் அடித்து வீணாக்கினார். முதல் பாதியாட்டத்தின் யூனியன் அணி, 1:0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில், ஜெகமீட்பர் அணியின் தனித்துவமான ஆட்டம் மைதானத்தில் அரங்கேறியது. போட்டியின் 32 ஆவது நிமிடத்தின் யூனியன அணியின், தனுஜன் அடித்த கோலை, ஜெகமீட்பர் அணியின் கோல் காப்பாளர், தடுத்தார். 33 ஆவது நிமிடத்தில் ஜெகமீட்பர் அணியின் ஏ.கிறிஸ்துராஜ், கோனர் பக்கமாக இருந்து, தூக்கி அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு கோலாக மாறியது.

அதன் பின்னர் ஜெகமீட்பர் அணியின் வேகம் அதிகரித்தது. 35 ஆவது நிமிட்த்தில் அடுத்தடுத்து கிடைத்த இரண்டு வாய்ப்புக்கள் ஜெகமீட்பர் அணியினால் தவறவிடப்பட்டது, 39 ஆவது நிமிடத்தில், அலெக்ஸ்நாதனுக்கு மஞ்சள் அட்டை நடுவரால் காட்டப்பட்டது.

47 ஆவது நிமிடத்தில், ஜெகமீட்பர் அணியின் ஜெ.ரூபினாஸ் அடித்த கோலை, ஓவ் திசையில் இருந்து அடிக்கப்பட்ட கோல் என நடுவர் நிராகரித்தார்.

விடாது ஆடிய ஜெகமீட்பர் அணி, 52 ஆவது நிமிடத்தில் அசத்தலான கோல் ஒன்றை அடித்தது. பி.கனிஸியஸ் கொடுத்த அருமையான பாஸ் ஒன்றை, எஸ். சஜீவன் கோலாக மாற்றினார். 53 மற்றும் 27 ஆவது நிமிடங்களில் யூனியன் அணிக்கு கிடைத்த வாய்ப்புக்களை அவ்வணி கோலாக மாற்றத்தவறியது. அதேபோல், ஜெகமீட்பர் அணியும் 54 மற்றும் 55 ஆது நிமிடங்களில் கிடைத்த வாய்ப்புக்களை வீணடித்தது.

முடிவில் ஜெகமீட்பர் அணி, 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

மைலோ கிண்ணம் 2017 ஆம் ஆண்டு சுற்றுப்போட்டியில் சிறந்த நன்னடத்தை அணியாக நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியும், சிறந்த கோல் காப்பாளராக ஜெகமீட்பர் அணியின் ஜெ.ஜெபராஜாவும், இறுதிப்போட்டியின் நாயகனாக அதே அணியின் ஏ.கிறிஸ்துராஜாவும், தொடர் நாயகனாக யூனியன் அணியின், தனுஜனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம்
# யாழ். பல்கலைக்கழக அணி முன்னிலை



ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 8வது வருடமாக தொடர்ந்து நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் Rating 01.01. 2017 இல் இருந்து 31.08. 2017 வரை 120 போட்டிகள் நடைபெற்றன. 20 ஓவர் போட்டிகளும் 28 போட்டியும், 30 ஓவர் போட்டிகளும், 40 ஓவர் போட்டியில் 3 போட்டிகளும் 50 ஓவர் போட்டியில் 59 போட்டிகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. யாழ். பல்கலைக் கழக அணி 16 போட்டிகளில் பங்குபற்றி 12 போட்டிகளில் வெற்றி பெற்று98.62 புள்ளிகளை பெற்று 1ம் இடத்திலும் சென்ற லைட்ஸ் அணி 16 போட்டி களில் பங்குபற்றி 12 போட்டிகளில் வெற்றி பெற்று 98.18 புள்ளிகளை பெற்று, 2ஆம் இடத்திலும் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 16 போட்டிகளில் பங்குபற்றி 11 போட்டிகளில் வெற்றி பெற்று 93.07 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளன. ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு- யாழ். ஜொனியன்ஸ் 89.47 (14/11), கே.சி.சி.சி. 68.35 (15/09), ஜொலிஸ்ரார் 63.87 (14/07), ஸ்ரான்லி 60.24 (13/06) ஓல்ட்கோல்ஸ் 55.08 (10/05), அரியாலை சென்றல் 49.60 (11/07), ஹாட்லியைற்ஸ் 48.07 (09/06), யாழ் .சென்றல் 43.18 (09/05), கிறாஸ் கொப்பர்ஸ், 40.92 (10/04), யூனியன்ஸ், 35.12 (08/04), மானிப்பாய் பரிஸ் 34.67 (07/03), திரு நெல்வேலி வை.எம்.எச்.ஏ.27.43 (08/02), பற்றீசியன்ஸ் 26.33 (06/02), டிறிபேக்ஸ்ரார் 26.21 (09/02), விங்ஸ் 25.95 (07/02), ஸ்கந்தஸ்ரார் 25.51 (08/02) நியூஸ்ரார் 21.86 (07/02), மூளாய் விக்டோறி 20.25 (07/01), சிறிகாமாட்சி 19.58 (07/01), றெயின்போ 13.80 (07/00), டிறைற் ரோன் 8.65 (03/01).

இந்நிகழ்வில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று அணிகளும் 2018 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் முக்கோண போட்டிக்கு தகுதி பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# யாழ். ஹாட்லி மாணவன் மிதுன்ராஜ் புதிய சாதனை



ஹோமாகம மகிந்த ராஜ பக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான சேர் ஜோன் டாப்ட் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் ஹாட்லி மாணவன் சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் நிகழ்ச்சியில் புதிய சாதனை நிலை நாட்டியுள்ளார்.

இவர் தட்டெறிதல் போட்டியில் 53.23 மீற்றர் தூரம் எறிந்தே இந்த புதிய சாதனையை நிலை நாட்டினார்.

முன்னைய சாதனையை விட இது 7 மீற்றர் அதிகமானதாகும்.

இதே போட்டியில் இவரது கல்லூரியைச் சேர்ந்த பிரேம குமார் மிதுஷான் 43.43 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்து வெண்கலப்பதக்கத்தை வென்றார்.

புதனன்று நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் (13.41 மீற்றர்) வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார்.

இதேவேளை கடந்த புதன்கிழமை ஆரம்பமான இப் போட்டிகளில் நேற்று பிற்பகல் 3 மணிவரை 14 புதிய சாதனைகள் நிலை நாட்டப்பட்டன. (கு)

## டெங்கு நோயால்...

395 டெங்கு மரணங்களும் பதிவாகியிருப்பதாக சுகாதார அமைச்சு கூறுகின்றது.

கடந்த வருடத்தில் நாடு முழுவதிலும் 55,150 நோயாளர்கள் இனம் காணப்பட்டிருந்தனர். 97 மரணங்களும் பதிவாகியிருந்தன. இந்த வருடத்தில் இதுவரையில் 1,67,198 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். 395 மரணங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

கடந்த வருட தரவுகளுடன் ஒப்பிடும் போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் மூன்று மடங்கு அதிகரிப்பை காண முடிகின்றது. உயிரிழப்புகளும் நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.

2010-ம் ஆண்டு முதல் 2017-ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இந்த ஆண்டிலே கூடுதலான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். கூடுதலான டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளன.

இந்த வருடத்தில் மே, ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் தொடர்ச்சியாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்டன. ஒகஸ்ட் மாதத்திற்கு பின்னர் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது.

தற்போது மழையுடன் கூடிய காலநிலை காரணமாக டெங்கு கொசுக்களின் பெருக்கம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு கூறுகின்றது.

இதனையடுத்து நேற்று வெள்ளிக்கிழமையும் தேசிய ரீதியாக டெங்கு ஒழிப்பு சிறப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, கேகாலை, யாழ்ப்பாணம், கல்முனை, கண்டி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் தொடர்ந்தும் டெங்கு அச்சுறுத்தல் நிலவும் மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

அனைத்து அரச நிறுவனங்களின் வளாகங்கள், வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் புதிய கட்டட நிர்மாணப்பணிகள் முதலான டெங்கு கொசுக்கள் பரவக்கூடிய பகுதிகளை கண்டறிந்து துப்புரவு பணிகள் முன்னெடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சை மேற்கோள் காட்டி அரசாங்க தகவல்துறை கூறுகின்றது. (ம)

## வரவு-செலவு திட்டம்...

கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவு திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கமைய வட மாகாணத்தில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ம்ன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க பல முன்மொழிவுகள் இந் வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் மீள்குடியேற்றம், கடன்களை இலகுவாக கையாளக்கூடிய முறை போன்ற விடயங்கள் ஓரளவு ஆறுதல் அளிப்பதாகவும் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். (ம)

## வழமைக்கு திரும்பியது...

குறிப்பிட்டுள்ளது.

40000 மெட்ரிக்தொன் பெற்றோல் எரிபொருள் தாங்கிய 'நவெஸ்கா லேடி' கப்பல் இலங்கைக்கு வந்ததுடன், குறித்த கப்பலில் இருந்து பெற்றோலின் தரம் தொடர்பான மாதிரிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனடிப்படையில் கப்பலில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளின் தரம் நுகர்வுக்கு தகுதியுடையவை என்பதால் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் பெற்றோலுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக செய்திகள் பரவியதையடுத்து நாடு முழுவதும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நாட்டை பாதாளத்திற்குள்...

வைத்துள்ளதாக தெரிவித்த அவர், தொடர்ந்தும் நாட்டை பாதாளத்திற்குள் தள்ளாமல் நல்லாட்சி வீடு செல்வதே உசிதமானது எனவும் கூறினார்.

நாட்டில் ஏற்பட்டிருந்த எரிபொருள் தட்டுபாட்டை அரசாங்கத்திற்கு உணர்த்தும் வகையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த உள்ளிட்ட தமது கட்சி சைக்கிளில் நாடாளுமன்றம் வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு வருகைதந்த போது பொலிஸார் தடுத்து நிறுத்தியதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்திற்கு வருகைதரும் உரிமை மீறப்பட்டதாகவும் அவர் கூறினார். (ம)

## திருகோணமலை...

கைது செய்யப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை மொறவெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம)

## கேள்விகளை எழுப்பினார்...

வகையிலான திட்டமிடல்கள் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துமா என கேள்விஎழுப்பியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வரவு செலவுத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள பல விடயங்களையும் பட்டியலிட்டார்.

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் மீதான முதலாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யுத்தம் நிறைவடைந்த பின்னர் யுத்தவெற்றி மமதையுடன் இருந்தவர்கள் தற்போது அதிலிருந்து சற்று இறங்கியிருக்கின்றமையை இந்த வரவுசெலவுத்திட்டம் ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோதும் இனக்குழுவொன்றை முடக்கும் வகையிலான நிலைப்பாடுகளே காணப்படுகின்றமையை அவதானிக்ககூடியதாக உள்ளது.

மொறட்டுவ பகுதியில் கவின்கலைக்கல்லூரியொன்றை நிறுவுவதற்குரிய முன்மொழிவு வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளது. இதேபோன்றதொரு கவின்கலைக் கல்லூரி கிளிநொச்சியில் இருக்கின்றது. அதில் இராணுவத்தினர் தங்கியிருக்கின்றார்கள். அவர்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றி அந்தக் கல்லூரியை ஏன் இயங்கச் செய்ய முடியாதுள்ளது?

மாற்றுத் திறனாளிகளுக்கு 2750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி மலையாளபுரத்தில் விடுதலைப் புலிகள் மாற்றுத் திறனாளிகளுக்காக நவம் அறிவுக்கூடம் என்ற நிலையத்தினை இயக்கி வந்தார்கள். அதிலும் தற்போது இராணுவத்தினரே தங்கியிருக்கின்றார்கள். அவ்வாறு தங்கியிருக்கும் இராணுவத்தினரை வெளியேற்றி அந்த மாற்றுத் திறனாளிகளுக்கான நிலையத்தினை இயங்கச் செய்வதில் அரசாங்கத்திற்கு என்ன பிரச்சினை?

தமிழ் மக்களுக்கு இரும்புக்கூடுகள் வேண்டாம் என்று நாம் எதிர்த்தோம். அதன் பலனாக 50 ஆயிரம் கல் வீடுகளை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்து தற்போது வரவு செலவுத் திட்டத்திலும் உள்வாங்கியுள்ளது. இதனை நாம் சாதகமாக பார்க்கின்றபோதும் அதில் வரையொன்றைச் செய்திருக்கின்றது. குறிப்பாக செங்கற்கள், ஓடுகள் மூலம் அந்த வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

வடக்கு மக்கள் மணல், கற்களைப் பயன்படுத்தி கற்களை அரிந்து வீடு கட்டுவதற்குரிய நிலைமைகள் காணப்படுகின்றபோதும் பொலநறுவை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து எதற்காக செங்கற்களை பணம் செலவழித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும்?

வடக்கில் 24 கூட்டுறவு சங்கங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 கூட்டுறவு சங்கங்களும் இயங்க முடியாத நிலைமையில் உள்ளன. இந்த கூட்டுறவு சங்கங்கள் இயங்கினால் 2400 இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள். ஏன் இதைக் கருத்தில் கொள்ளாதிருக்கின்றீர்கள்?

வடக்கில் கூட்டுறவுத் துறை மிகுந்த வினைத்திறனுடன் செயற்பட்டது. ஆனால் தற்போது மத்திய அரசாங்கம் கூட்டுறவு சங்கங்களை சிதைத்து அதற்கு மாறாக ச.தொ.ச. நிறுவனங்களை வியாபித்து வருகின்றன. இவையெல்லாம் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தினை அழுத்தமாக பிரயோகிக்கின்ற செயற்பாடுகளாகவே பார்க்க வேண்டியுள்ளன.

வடக்கு கூட்டுறவு சமாசம் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட பிரமுக வங்கியில் 1999, 2000, 2001, 2002 ஆகிய ஆண்டுகளில் 342 இலட்சம் ரூபாக்களை வைப்பிலிட்டது. தற்போது அந்த வங்கிக்கு என்ன நடந்தது என்றே தெரியாதுள்ளது. இதற்கு பொறுப்புக் கூறவேண்டிய மத்திய வங்கி இன்னமும் ஆராய்ந்து பார்ப்பதாகவே கூறுகின்றது. இந்த தொகையாவது இருந்திருந்தால் வடக்கு கூட்டுறவுத் துறைக்கு இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்காது.

பரந்தன் இராசாயனத் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் மட்பாண்டத் தொழிற்சாலை, காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை, நாவற்குழி தொழிற்சாலை உள்ளிட்ட எவையும் இதுவரையில் இயங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கிழக்கிலும் அதே நிலைமை தான். வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை இயக்கப்படவில்லை.

இரணைமடு குளத்தினை தவிர ஏனைய குளங்களை புனர்நிர்மாணம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. விவசாயப் பண்ணைகளை எடுத்துக்கொண்டால், முழங்காவிலில் உள்ள 1900 ஏக்கர் முந்திரிகை பண்ணை, முக்கொம்பனில் 110ஏக்கர் பண்ணை, வடக்கச்சியில் உள்ள 400 ஏக்கர பண்ணை, ஜெயபுரத்தில் உள்ள 80 ஏக்கர் பண்ணை, மலையாள் புரத்தில் உள்ள 78 ஏக்கர் பண்ணை, முல்லைத்தீவில் 200 ஏக்கர் பண்ணை, வட்டுவாகலில் 680 ஏக்கர் கோத்தபாய பண்ணை, மன்னாரில் 1910 மற்றும் 1500 ஏக்கர்களைக் கொண்ட இரண்டு பண்ணைகள் என அனைத்தையும் இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது.

வடக்கில் பட்டதாரிகள், முன்னாள் போராளிகள், க.பொ.த. சாதாரண, உயர்தரத்துடன் உள்ள ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கின்றார்கள். இத்தனை விடயங்களையும் முன்னெடுத்திருந்தால் அவர்கள் தமது ஜீவனோபாயத்தினை மேற்கொள்ளும் வகையிலான வருமானத்தினை பெற்றுக்கொண்டிருப்பார்கள். தற்போது வேலையற்றவர்களாக வீதியிலே நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

2020இல் புகையிலைப் பாவனையைத் தடைசெய்வதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் வடக்கில் ஆயிரக் கணக்கில் உள்ள புகையிலைச் செய்கையாளர்கள் தமது வாழ்வாதாரத்தினை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அறிவிப்பினால் வடக்கு அரச அதிகாரிகள் தற்போது புகையிலைச் செய்கையாளர்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் முற்றாகச் சீரழியும் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

மறுபக்கத்தில் தற்போது கள் இறக்கு வதற்கு வரிவிதிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதால் அவர்களின் எதிர்காலம் பாதிப்படைந்துள்ளது. அது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தாது பியர்களுக்கு வரியைக் குறைத்துள்ளது. இது சுதேச தொழிலாளர்களை நசுக்கும் செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது என்றார். (ம)

## சுனாமி வதந்தியால்...

முன்தினம் வியாழக்கிழமை இரவு பாதுகாப்பு தேடி ஓடியுள்ளனர்.

முல்லைத்தீவுப் பகுதியில் புயல்காற்று அடிப்பதாகவும் அதனால் வீடுகளின் கூரைகள் தூக்கி எறியப்பட்டதாகவும் மணற்காட்டு பகுதியில் உள்ள சிலருக்கு உறவினர்களால் கூறப்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்து சுனாமி ஏற்படப் போவதாக வதந்தி பரவியதையடுத்து இரவு 8.30 மணியளவில் அப்பகுதி மக்கள் பாதுகாப்பு தேடி சவக்காலப் பிட்டியில் தஞ்சமடைந்தனர்.

பின்னர் வதந்தி எனத் தெரியவந்ததையடுத்து அவர்கள் மீண்டும் வீடுகளிற்கு திரும்பினர். (ம-60)

## மூழ்கும் அபாயத்தில்...

தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அண்மைய தினங்களாக மழை பெய்து கொண்டிருப்பதனால் மணற்காட்டு கிராமத்தில் உள்ள வீதிகள் அனைத்தும் வெள்ளக் காடாக காட்சியளிக்கிறது.

மேலும் நேற்று பெய்த கடும் மழையினால் மணற்காட்டிற்கு செல்லும் பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் நேற்றிரவு தெரிவித்தனர்.

தொடர்ந்து மழை பெய்யும் நிலை காணப்படின் அக் கிராமம் வெள்ளத்தில் மூழ்கக் கூடிய நிலை காணப்படுகிறது.

மருதங்கேணிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் எங்காவது வெள்ளம் ஏற்படின் அப்பகுதிக்குரிய கிராம அலுவலர் உடனோ அல்லது அனர்த்தமுகாமைத்துவ உதவித்திட்டப் பணிப்பாளரின் 0773 222963 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது அதன் அபிவிருத்தி உத்தியோகத்தரின் 0773731191 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரிவிக்குமாறு மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (ம-60)

## யாழில் கொட்டித்...

இலங்கைக்கு கிழக்காக தென் மேற்கு வங்காள விரிகுடாவில், ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக எதிர்வரும் 36 மணித்தியாலங்களுக்கு முகில் சார்ந்த மழையுடன் கூடிய வானிலை காணப்படும் என திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

ஏற்றம் கொண்ட முகில்கள் காரணமாக வடக்கு, வடகிழக்கு கடலோர பகுதிகளில் காற்றின் வேகம் தற்காலிகமாக மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் அதிகரிக்க கூடும்.

எனவே கடலோர செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள், அவதானத்துடன் செயற்பட வேண்டும். இடி மின்னல் தாக்கத்தில் இரு ந்து ஏற்படும் இழப்புக்களை குறைக்க பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ்.குடாநாட்டில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்று காலை 8.30 மணி வரை 53.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், நேற்று காலை 8.30 மணி தொடக்கம் இரவு 8.30 வரையான காலப்பகுதியில் 26.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்று காலை 8.30 மணி வரை, கூடிய மழை வீழ்ச்சியாக பருத்தித்துறையில் 47.2 மில்லிமீற்றரும், யாழ் கோட்டை பகுதியில் 37.2 மில்லி மீற்றரும், சாவகச்சேரியில் 43.6 மில்லிமீற்றரும், அலம்பிலில் 51.9 மில்லி மீற்றரும், வல்லிபுனத்தில் 45.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் கடந்த 6 நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஆயிரத்து 98 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 862 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சின் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கடந்த 2ஆம் திகதி ஆரம்பித்த மழை தொடர்ச்சியாக பெய்து வருகின்ற நிலையில் வடக்கில் யாழ் மாவட்டத்திலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இதனால் சில சில பகுதிகளில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 94 குடும்பங்களை சேர்ந்த 342 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 110 குடும்பங்களை சேர்ந்த 381 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 17 குடும்பங்களை சேர்ந்த 60 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 45 குடும்பங்களை சேர்ந்த 175 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 380 குடும்பங்களை சேர்ந்த 1207 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 162 குடும்பங்களை சேர்ந்த 599 பேரும், வேலணை பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட 40 குடும்பங்களை சேர்ந்த 137 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 213 குடும்பங்களை சேர்ந்த 769 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 34 குடும்பங்களை சேர்ந்த 185 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒரு குடும்பத்தை சேர்ந்த 5 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மின்னல் காரணமாக உடுவில் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட 2 குடும்பங்களில் 2 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இரு வீடுகளும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒரு வீடும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன்,

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 8 வீடுகளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 13 வீடுகளும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 2 வீடுகளும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 15 வீடுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 22 வீடுகளும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 3 வீடுகளும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 4 வீடுகளும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஒரு வீடும் பகுதி அளவில் பாதிக்கப்பட்டுள்ளது என மேற்குறித்த புள்ளி விபரத்தில் நேற்று பதிவிடப்பட்டுள்ளது. (ம-9)

## முன்னாள் போரா...

2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் முன்னாள் போராளிகளுக்கான தொழில்வாய்ப்பு வழங்கும் நிறுவனங்களுக்கு கொடுப்பனவு உதவிகளை வழங்கும் யோசனையை நிதியமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், முன்னாள் போராளிகளை எவரும் ஓரங்கட்டக்கூடாது என்றும் கோரிக்கை விடுத்தார்.(ம)

## வரவு செலவு திட்...

இது தொடர்பில் மேலும் கூறிய அவர், 1977ஆம் ஆண்டின் பொருளாதார கொள்கையை தொடர்வதே எனது நோக்கம் என நிதியமைச்சர் மங்கள சமரவீர கூறினார்.

அவரது கொள்கை எமது நாட்டை சுய தேவைப் பூர்த்தி பொருளாதாரமிக்க நாடாக மாற்றுவதற்குப் பதிலாக வெளிநாட்டு சந்தைகளிலும் வெளிநாட்டு மூலதனத்திலும் தங்கியிருக்கச் செய்வதாக உள்ளது. தோற்றுப்போன ஒரு பொருளாதார மாதிரியை பிரதி செய்ய அவர் முயல்கின்றார்.

இந்த வரவு-செலவு திட்டத்தின் துண்டு விழும் தொகையை நிரப்ப ஆயிரத்து 895 பில்லியன் ரூபாய் தேவையாக உள்ளது. இதனால், அடுத்த வருடம் நாட்டின் கடன் மேலும் அதிகரிக்கும் என்றார். (ம)

## கொழும்பு துறை...

இந்த கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் மரபு ரீதியான வரவேற்பளித்தனர்.

சுமார் 165.3 மீற்றர் நீளமும் 9ஆயிரம் தொன் கொள்ளளவுடையதுமான குறித்த கப்பல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இலங்கையில் தரித்து நிற்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான சுமுக உறவை மேலும் வலுப்படுத்தல், அனுபவ பரிமாற்றம் மற்றும் பயிற்சிகளுக்காக இலங்கை வந்துள்ள இந்த போர்க்கப்பல், கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் போது, இலங்கை கடற்படையினருடன் பல்வேறு நிபுணத்துவ பயிற்சி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பல நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று, இந்த சீன போர் பயிற்சி கப்பலை பார்வையிடுவதற்காக பொதுமக்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யஸ்மின் சூக்கா...

வர் தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்தை இலங்கை இராணுவம் கண்டித்துள்ளது.

இறுதிப்போர்க்காலத்தில் போர்க்குற்றம் புரிந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதி வதிவிட பிரதிநிதியாக செயற்பட்டநிலையில் தற்போது இலங்கை திரும்பியுள்ளார். அவர் கஜபா ரெஜிமென்ட்டின் அதிகாரி யாக செயற்படுகிறார்.

இந்தநிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம், அநுராதபுர சாலியபுரவில் கஜபா ரெஜிமென்டடின் நிகழ்வு ஒன்று இடம்பெற்றபோது, அதற்கு முன்னணி மென்பான நிறுவனமொன்று நிதியளிப்பு செய்திருந்தது.

இதனையடுத்து யஸ்மின் சூக்கா, குறித்த நிறுவனத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதில் போர்க்குற்றவாளியான சவேந்திர சில்வா, அங்கம் வகிக்கும் ஒரு இராணுவப் பிரிவுக்கு நிதியளித்த செயல் தொடர்பில் யஸ்மின் சூக்கா குற்றம் சாட்டியிருந்தார்.

அவரின் இக்குற்றச்சாட்டையே இலங்கை இராணுவம் கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சிறீதரன் - தினே...

த்தில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளில் வடக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் மற்றும் வடக்கிற்கு தேவையான அபிவிருத்தி திட்டங்கள் குறித்து சிறீதரன் எம்.பி உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

இதன்போது, கூட்டு எதிர்க்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஸ்குணவர்தன எழுந்து இது வரவு செலவு திட்டத்தின் மீதான விவாதம், வடக்கு பற்றிய விவாதம் அல்ல என ஆவேசமாக குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த சிறீதரன் எம்.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களே! உங்களது கருத்துக்கு நன்றி. 2015ஆம் ஆண்டுக்கு முன் பந்து உங்கள் கைகளில் இருந்தது.

ஆனால் தற்போது அப்படியில்லை. நான் பந்தை யார் பக்கமும் உருட்டவில்லை. எம் மீது பந்தை உருட்ட வேண்டாம், நாங்கள் குற்றம்சுமத்தவில்லை என இதன்போது குறிப்பிட்டார். (ம)


**அறை வாடகைக்கு உண்டு**

நல்லூர் செட்டித் தெருவில் சகல வசதிகளுடனும் கூடிய மூன்று அறைகள் வாடகைக்கு உண்டு

தொடர்பு:
077 525 6311

**விற்பனைக்கு**

அளவெட்டி அணிஞ்சிலடி/அழகொல்லை விநாயகராலய சுற்றாடலில் கல்வீடு வளவு உரிமையாளரினால் விற்கப்படவுள்ளது.

தொடர்புகளுக்கு:
(1282) 077 560 5162

**தோட்டக்காணி விற்பனைக்கு**

அரியாலை கிழக்கு 3-ம் கட்டையில் அமைந்துள்ள 16 ஏக்கர் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விபரங்கள் நேரில் பேசித் தீர்க்கலாம்.

தொடர்பு: 0212221827, 0776080565
(1285)

**நடமாடும் மிருகவைத்திய சேவை**

சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். Dr.K.கிருபாகரன்
0779738802
(1268) முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்.

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம், கிறிஸ்தவ (RC) சமயம், 1984, வங்கியில் உதவி முகாமையாளராக பணியாற்றுகின்ற முகாமைத்துவம் (இளமாணி), BBA (Hons), முகாமைத்துவம் (முதுமாணி) MBA (SL) மற்றும் வங்கியியல் டிப்ளோமா AIB (SL) பட்டதாரி மணமகனுக்கு படித்த அல்லது உத்தியோகம் பார்க்கின்ற மணமகள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
077 749 5563
(1285)

SRI LANKAN AIRLINES இன் நேரடி முகவரான SB Travels and Tours Pvt Ltd இன் விமான பயணச்சீட்டுக்களுக்கான விசேட விலைக்கழிவுகளாக சென்னைக்கு 40kg உடன் Air Indiaவில் 26,000/= இருந்தும் 23,000/= இருந்து Spice Jetலும் மதுரைக்கு 22,800/= இருந்தும் திருச்சிக்கு 32,200/= இருந்தும் பெற்றுக்கொள்ளலாம். இந்தியா விசா விண்ணப்பப்படிவம் 100/= இற்கு நிரப்பி தரப்படும் 46kg உடன் one wayஇற்கு கனடாவிற்கு 68,500/= இருந்தும் பிரான்ஸுக்கு 39,500/= இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.( நிபந்தனைக்கு உட்பட்டது) 40kg உடன் SRI LANKAN AIRLINESஇல் சிங்கப்பூருக்கு 31800/=இல் இருந்து ஐயப்ப பக்தர்களுக்கான குழு ரிக்கட்கள் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும். No.212, கஸ்தூரியார் Road
021 222 9555, 222 8555, 076 691 1080,81, 076 691 1082, 83, 0777 111 228
(C-353)

**சொலெக்ஸ் நீர் பம்பிகள்**
**உயர்ந்த நம்பிக்கையான**




ரூபா. 8900/- முதல்...
0767 027344
விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு
SOLEX WATER PUMPS
சொலெக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இல. 39, புதிய நுகே வீதி, பேலியகொடை, இலங்கை.

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி**

13.10.2017 அன்று ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தப்பட்ட வெளிநாடு செல்பவர்களுக்கான A1 பரீட்சையில் எமது நிறுவனத்தின் ஊடாக அதிகூடிய புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவர்களை புகைப்படத்தில் காணலாம்.



- புள்ளி விபரம் : 60 - 90 வரையிலான புள்ளிகள் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.
- ஒவ்வொரு பரீட்சையிலும் அதிகூடிய மாணவர்கள் சித்தியடைந்து வெளிநாடு சென்றுள்ளனர்.
- கோணேஸ்வரனின் வழிகாட்டலில் ஜேர்மன் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(புத்த விகாரைக்கு எதிரே, முதலாம் மாடி)
தொடர்பு: 077 970 7322
(1290)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

அமெரிக்க லொத்தர் விசா (Green Card) முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இவ் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | சாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா
(C-341)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- வீடுகளில் நாட்டிலும் அனைத்து விமானங்களிலும் பயண ஒழுங்குகள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண் பரிசு

சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு (C-303)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
- பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**அமெரிக்க லொத்தர் விசா**

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்



18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல ஆசையில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
இன்னும் சில நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன.
0768226243
பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச விசா வாய்ப்புக்கள் இருக்காது. ஆகவே இப்போதே முந்துங்கள்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

கொட்டும் மழையிலும் குழந்தைகளுடனான சிரமத்தினையும் பாராது நானும் எனது மனைவியும் V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம். கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம். திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

2016 ல் எம்மூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



வே.கமலேந்திரன் -குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்
(C-303)

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி | 10,பேருந்து நிலையம் | மூடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.